
KALKI 1-8-82 ரூ. 1.20



பிலிப்ஸ் ஸ்கிப்பர்
காலத்தை வெல்லும் பாண்டு இணைந்தது.

PHILIPS



ஸ்கிப்பர் FM

நான்கு பாண்டு ரேடியோ

- இந்தியாவின் முதன் முதல் நான்கு பாண்டு FM (ஃப்ரீக்குவென்சி மாடுலேஷன்) ட்ரான்சிஸ்டர் ரேடியோ
- எல்லா திசையை நோக்கியும் வைக்கவல்ல டெலஸ்கோபிக் ஏரியல்; மேலும் நிலையங்களை திறம்பட எடுக்க ஃபெரைட், லூப் ஏரியல்
- 1000mW அவுட்புட்; 15 செ.மீ.x10செ.மீ. லவுட் ஸ்பீக்கர்
- ஸ்லைடிங் டோன், வால்யூம் கன்ட்ரோல்ஸ்
- டேப்-இன், டேப்-அவுட், பிக்-அப் ஸாக்கெட்ஸ்
- FM-க்கு ஆட்டோமாடிக் ஃப்ரீக்குவென்சி கன்ட்ரோல்
- மின்சாரத்தில தடங்கல் ஏற்படின் எலெக்ட்ரோமாடிக் ஸ்விட்ச் ஓவர் மூலம் பாட்டரிக்கு மாற்றிக்கொள்ளும் வசதியுடையது மின்சார மாடல்


வழங்குவோர் பிலிப்ஸ். 50 ஆண்டுகளுக்கும் மேலாக
இந்தியாவில் | இல்லங்களெங்கும் முழங்கும் நம்பகமான பெயர்

பிலிப்ஸ்

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி

CASPR-807-154 TM

கட்டிப்பிடிக்க முடியாத கபில்!





சென்னையில் கபில்தேவ் முதன்முதலாக ஆடிய டெஸ்ட்மாட்ச் மேற்கிந்திய அணிக்கு எதிராக ஜனவரி 1979ல். 26 நாட் அவுட்டாக இருந்தார். இரண்டு விக்கெட்டுகள் தான் எடுத்தார். ஆனால் அவர் ஆற்றலைப் பார்த்த உடனே உணர்ந்த எம். ஜே. கோபாலன் சொன்னார்: ''கபில் எனக்கு அமர் சிங்கை நினைவூட்டுகிறார்.''

இந்த வாக்கு முழு உண்மையாகிவிட்டது. அமர்சிங் போலவே பெரிய மனமுடைய கிரிக்கெட் வீரராக மலர்ந்திருக்கிறார் கபில். இங்கிலாந்துக்கு எதிராக அண்மையில் ஆடிய போது பாட்டிங்கில் சிகரத்துக்கு உயர்ந்து விட்டார். இங்கிலாந்தின் ஆஃப் ஸ்பின்னர் ஜிம் லேக்கர் அவரை இந்தத் தொடரின் தலையாய வீரராகத் தேர்ந்தெடுத்தார்.

விஜய் மர்ச்சண்ட் ஒரு முறை அமர்சிங் பற்றிச் சொன்னார்: ''இவரை விட களிப்பூட்டும் கிரிக்கெட் ஆட்டக்காரர் கிடையாது. இவரைவிடச் சிறந்த ஆல்ரவுண்டரும் இல்லை. தமது சிறப்பான பந்து வீச்சின் மூலமாகவோ அல்லது அபாரமான பாட்டிங்கினாலோ சில நிமிஷங்களில் ஆட்டத்தின் போக்கையே திசை மாற்றி விடுவார்.''

அமர்சிங் போலவே இன்று கபில் இங்கிலாந்தில் சில நிமிடங்களில் ஆட்டத்தின் போக்கையே திசை மாற்றினார். அமர்சிங்கின் மறு பிறவியோ இவர் என்று மலைக்க வைத்தார். எந்த மாட்சிலும் கபிலின் பாட்டிங் இத்தொடரில் சோடை போகவில்லை. கடைசி மாட்சில் அமர்க்களமான 97!

இந்தியாவுக்குக் கடைசியாக இங்கிலாந்து வந்தபோது நமக்கு 1–0 வெற்றி. இப்போது இங்கிலாந்துக்கு 1–0 வெற்றி. சக்கரம் முழு வட்டம் சுழன்று விட்டது!

—பி. என். சுந்தரேசன்

தமிழாக்கம்: குட்டிகிருஷ்ணன்.



செயல்படுகிறது, சத்துணவுத் திட்டம்!

ஜூலை முதல் தேதியிலிருந்து செயல்படும் சத்துணவுத் திட்டம் சரியாக நடக்கிறதா என்று பொறுப்புள்ளவர்கள் கண்காணித்து வர வேண்டும் என்று முதல்வர் கூறியுள்ளார். மந்திரிகள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்த மூன்று கிராமங்களுக்குப பத்து நாட்களுக்குப் பிறகு கல்கி சார்பில் மூவர் சென்றபோது....

கூடலூரிலிருந்து அரை மணி நேர பஸ் பிரயாணத்துக்குப் பின் 'சங்கொலிக் குப்பம்' என்றது மஞ்சள் நிற போர்டு.

பஸ்ஸை விட்டிறங்கி, ''சின்னப் பசங்களுக்கு இலவச சாப்பாடு போடறாங்களே! அது எங்கே?'' என்றேன்.

''டேய், கணேசா! சாரைப் பழைய பள்ளிக்கூடத்துக்கு இட்டுக்கினு போடா!'' புளிய மரத்தடியிலிருந்த வயதானவர் சொல்ல, என்னை இட்டுக்கினு போனான் கணேசன்.

புழுதி படிந்த தெருக்களில் நடந்து, ஒரு ஓட்டுக் கட்டடத்தின் முன்னால் நிறுத்தினான்.

சுமார் இருபது குழந்தைகள்.

சின்னதாய்ப் பாவாடை சட்டையில், வெறும் பாவாடையில், கவுனில், டிராயரில் சட்டையில், பொத்தான் இல்லாத சட்டை மட்டும் அணிந்து, வெறும் டிராயரில் விளையாடிக்கொண்டு, பாடிக் கொண்டு, சண்டை போட்டுக் கொண்டு—



⌘ சங்கொலிகுப்பம் பால்வாடி - தாயினும் சாலப் பரிந்து...

⌘ சங்கொலிகுப்பம் பால்வாடி - பரிவாற பகலுணவு



⌘ ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் ம. விஜயசாரதி அனைக்கட்டு கிராமத்தில் சத்துணவுத் திட்டத்தைத் தொடக்கி வைக்கிறார்

(படம்: தமிழக அரசு)



கையில் மெலிசாய் ஒரு அடியில் சவுக்குக் குச்சி சகிதமாய். ஒரு பெண். அவர்தான் அந்த பால்வாடி பள்ளிக்கூடத்தின் டீச்சராம்.

முதலில் பயந்தார்.

பயப்பட வேண்டாம் என்று தைரியப் படுத்திப் பேச வைத்தேன்.

அமைச்சர் பண்ருட்டி. ராமச்சந்திரன் ஜூலை முதல் தேதி, இந்தக் கிராமத்தில் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அன்றிலிருந்துதான் இந்தப் பாலவாடி பள்ளிக்கூடமும் செயல்பட்டு வருகிறது.



✖ மேல அயனம்பாக்கம் அரிஜன நலத்துறை பள்ளியில் மாணவர்கள் சத்துணவு உண்கின்றனர்

''என்ன இருபது குழந்தைகள்தானு?'' என்றேன்.

''மணி பதினொன்னரைதானே ஆகிறது. சாப்பாடு போடப் பன்னிரண்டு ஆகும். இனிமேல்தான் குழந்தைகள் வர ஆரம்பிப்பார்கள். ரெஜிஸ்டரில் இருக்கும் குழந்தைகள் சுமார் எண்பது'' என்ருர் டீச்சர்.

பக்கத்தில் இருந்த இன்னொரு ஓட்டுக் கட்டடத்தில் சமையல் அறை. அங்கு சென்றேன்.

இரண்டு பெண்மணிகள் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். அரசாங்கம் சமையல் வேலைக்கென இவர்களை அமர்த்தியுள்ளதாம்.

''இன்னிக்கு என்ன சமையல்?''

''சாம்பார் சாதமுங்க.''

''தினமும் என்னென்ன போடுவீர்கள்?''

''பாசிப்பருப்புப் பொங்கல், கீரைச் சாதம், சாம்பார் சாதம், தக்காளிச் சாதம், புளியஞ் சாதம், தயிர் சாதம்...'' என்று பெரிய லிஸ்டே. அரசாங்கம் போட்டுக் கொடுத்திருக்கிறதாம். அதை அப்படியே ஒப்பித்தார் டீச்சர்.

சமையல் ரெடி.

அடுப்பை விட்டிறக்கி, முன் சொன்ன கட்டிடத்துக்குக் கொண்டு வந்தனர். அதற்குள் டீச்சர் சொன்னது சரிதான் என்று சொல்வது போல அம்பது, அறுபது சிறுவர்கள் (ஐந்து வயதுக்கு உட்பட்டவர்கள்) உட்கார்ந்திருந்தனர் பசித்த வயிறுடன்.

''என்ன ஒருசிலர்தானே தட்டுக் கொண்டு வந்திருக்கிருர்கள்? மற்றவர்களுக்கு?''

''அரசாங்கமே நூறு தட்டு டம்ளர்கள் கொடுத்துள்ளது.''

ஒரு பெண்மணி தட்டு வைத்து டம்ளரில் தண்ணீர் ஊற்ற, இன்னொருவர் கரண்டியால் சாம்பார் சாதத்தைப் போட்டுக் கொண்டே போனுர். குழந்தைகள் சாப்பிட ஆரம்பித்தனர்.

✖ மேல அயனம்பாக்கம் அரிஜன நலத்துறைப் பள்ளியில் சத்துணவு சமைக்கப்படுகிறது



ஒரு தட்டில் சாம்பார் சாதத்தை போட்டு நீட்ட, 'குழந்தைகளுக்குத்தானே சத்துணவு! நான் குழந்தை இல்லையே' என்று அறுவை ஜோக் அடித்ததும் போனால் போகிறதென்று சிரித்து வைத்தவர்.

தட்டிலிருந்து ஒரு வாய் எடுத்துப் போட்டுக்கொண்டேன்.

அரிசி கொட்டை கொட்டையாய் சென்னை ரேஷன் அரிசியை நினைவூட்டினாலும் சாப்பிடும்படிதான் இருந்தது.

சின்னஞ் சிறுவர்கள், நாளைக்கு ஒரு வேளை வயிறாரச் சாப்பிடுகிறார்கள் என்பது நிஜம்.

இதே கிராமத்தின் துவக்கப் பள்ளியில் மதிய உணவுத் திட்டம், சுமார் 200 மாணவர்களுக்கு 365 நாளிலும் வழங்கும்படியாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் பொறுப்பில் இது விடப்பட்டுள்ளது.

-எல். சந்திரமௌலி

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மேல அயனம்பாக்கம் கிராமம். திரு நெடுஞ்செழியன் இத்திட்டத்தைத் தொடங்கிய கிராமம் இது. சுமார் 1200 பேர் வசிக்கும் இக்கிராமத்தில் ஜனத்தொகையில் 90 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் அரிஜனங்கள்.

''விடுமுறை நாட்களாகப் பார்த்து வந்திருக்கிறீர்களே! பிள்ளைகள் அங்கு, இங்கு சாப்பிட்டு விடுவார்களே... அதிகம் வர மாட்டார்களே'' என்கின்ற முகமனுடன் வரவேற்றார் அங்குள்ள பால்வாடியின் (சிறு குழந்தை அகம்) ஆசிரியை குமாரி கௌரி. ஐந்து வயதுக்குட்பட்ட நூறு சிறுவர்கள் சிறுமியருக்கு இங்கு சத்துணவு அளிக்கப்படுகிறது.

''விடுமுறை நாட்களிலும் உணவிடுவது முதல்வரின் திட்டத்தின் சிறப்பம்சம். அதனால்தான் விடுமுறை நாளாகப் பார்த்து வந்தேன்'' என்றேன்.

படித்தவர்கள் அதிகம் இருப்பது கேரளாவில் என்பது பழைய விஷயம். பைத்தியங்களும் அதிகமாக இருப்பது கேரளாவில்தான் என்று தெரிய வந்திருக்கிறது. போன வருடம் மன நோய்க்காக அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8970.



காலை பத்து மணி. பிறகுதான் சமையல் ஆரம்பம். சமையல் செய்யுமிடமும் பரிமாறும் இடமும் சுத்தமாக இருந்தன.

''உங்களுக்கு நல்ல பெயரும் சம்பளமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் பசங்களை அனுப்ப வேண்டுமா? என்று விடுமுறை நாட்களில் பெற்றோர் சிலர் கூறுகின்றனர்'' என்று கௌரி மனத்தாங்கல் பட்டுக் கொண்டார்.

மதியம் ஒன்னே கால் மணி அளவில் உணவு தயாரானபோது அழைத்து வர ஆள் அனுப்பியும் வந்து சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கை 23. ஐந்து வயதுக்கு மேலான ஏழெட்டுக் குழந்தைகளும் உணவை நாடி வந்திருந்தனர். பாலவாடி விதிப்படி அவர்களுக்கு அவ்வுணவைக் கொடுக்கக்கூடாதாம். நாற்பதிலிருந்து ஐம்பது சிறுவருக்குப் போதுமான உணவுதான் தயாராயிற்று. அதுவே மீந்து விட்டது. பிறகும் சில சிறுவர்கள் வருவார்கள் என்று கௌரி குறிப்பிட்டார். மதியம் மூன்று மணி வரை எவரும் வந்ததாகத் தெரியவில்லை!

கஞ்சி வடிக்காமல் சாதம் தயார் செய்து, வெங்காயம், காரெட்டு போட்டு, 'பிஸிபேளா' மாதிரியான 'பாத்' தயார் செய்தனர். ருசி இருந்தது.

பாலவாடிக்கு எதிரில் அமைந்துள்ள அரிஜன நலத்துறை ஆரம்பப் பள்ளி 5ம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளியில் 140 மாணவர்கள் படிக்கின்றனர்.

அரிஜனங்களுக்கான இப்பள்ளிக் கட்டிடமும், பள்ளம் பள்ளமான தரையும் அசுத்தமான சுற்றுப்புறமும், இருக்கைகள் இல்லாத அவலமும் வேதனை அளித்தது.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்க்கான சத்துணவு இங்கு அமல் செய்யப்பட்டுள்ளது.

மரத்தடியில் அசுத்தமான சூழ்நிலையில், பிய்ந்து கிடந்த கொட்டகை கீழ் கரியும் தூசும் படிந்த பாத்திரங்களில் சத்துணவு தயார் ஆயிற்று.... வடிந்து கிடந்த சாதக் கஞ்சியை நாய் ஒன்று பாய்ந்து குடித்தது. பத்து தேதி வரைக்கும் அரிசி, எண்ணெய் அப்பள்ளிக்குச் சப்ளை செய்யப்படாததால் அவற்றைப் பெற தலைமை ஆசிரியை சென்றிருந்த நிலையில் சமையல்கார அம்மாள் பொறுப்பில் தயாரான உணவு, தலைமை ஆசிரியை திரும்பி வந்ததும் மதியம் 2 மணி அளவில் பள்ளிக்குள்ளேயே பரிமாறப்பட்டது. சாதமும் கீரைக் கடையலும் அன்றைய சத்துணவு. 140 பேர் படிக்கும் பள்ளியில் சுமார் 35 சிறுவர் தாம் உணவருந்தினர். தயாரான உணவு சரியாகி விட்டது.

-நாயகன்

அலைக்கட்டு கிராமம்.

கையில் தட்டை வைத்துக் கொண்டு, ஊராட்சித் துறை ஆணையாளர் அலுவலகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த குழந்தைகள், பெரியவர்களுடன், நானும் சேர்ந்து கொண்டேன்.

இந்தக் கிராமத்தில் திட்டத்தை ஆரம்பித்து வைத்தவர் அமைச்சர் விஜயசாரதி.

மூன்று உணவு மையங்கள் இருக்கின்றன. மூன்றுமே ஒரு பர்லாங் சுற்றளவில் உள்ளவை தான். ஊராட்சி ஆணையர் அலுவலக காம்பவுண்டுக்குள் ஒன்று: ஹரிஜன காலனியில் ஒன்று; ஆரம்பப் பள்ளியில் ஒன்று. இப்படி அருகருகே ஏன் மூன்று மையங்கள் இருக்க வேண்டும்? அதுவும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் இளம் வயதிலேயே வளர்ப்பது என்கிறார்கள். ஆனால் ஹரிஜன காலனிக்கு மட்டும் தனி உணவு மையம் ஏன்? ஒரு மையத்தில் 100 குழந்தைகளுக்கு மேல் சாப்பிடக் கூடாது என்பது உத்தரவாம். இங்கு உள்ள ஹரிஜன காலனி உணவு மையத்திலும், ஊராட்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் இருக்கும் மையத்திலும் சாப்பிடுபவர்கள் 80 குழந்தைகளுக்கும் குறைவே. இந்த இரண்டு மையத்தையும் இணைத்தால் ஒரே இடத்தில் சமைக்கலாம். குழந்தைகளும் சேர்ந்து சாப்பிடுவார்களே!


நான் போன அன்று ஊராட்சித் துறை ஆணையர் மையத்தில் கத்தரிக்காய் சாம்பார் சாதம் போட்டார்கள். ஹரிஜன் காலனியில் பொங்கல், ஆரம்பப் பள்ளியில் அவியல் சாதம். பெரிது பெரிதான சாதமும் எண்ணெய்ப் பசை காணாத பொங்கலும்... ஆனால் அந்தக் குழந்தைகள் அந்தச் சாதத்தையும் ரசித்துச் சுவைத்துச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது. அவர்கள் எவ்வளவு வறுமையில் வளர்ந்திருப்பார்கள் என்று புரிகிறது. சமையல் கூடங்கள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும்.

கிராமவாசிகளிடம் பேசிக் கொண்டிருந்த போது பெரும்பான்மையினரை இந்தத் திட்டம் எந்த அளவு கவர்ந்துள்ளது என்பது புரிய வந்தது. ஆனால் சிலரோ, 'பஞ்சாயத்து தேர்தலை மனத்தில் வைத்துக்கொண்டு தான் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறார்கள். அதில் ஆளும் கட்சி வெற்றி பெற்றால் இதைத் தொடருவார்களா என்பது சந்தேகமே என்கிறார்கள் மேலும் சிலர்.

''ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வருடம் முழுவதும் வேலை கொடுத்து உதவி செய்தாலே போதுமே'' குழந்தைகளைத் தாங்களே கவனித்துக் கொள்வார்களே என்றனர். 'இந்தத் திட்டத்தில் கொள்ளையடிக்கப் பல வழிகள் இருக்கின்றன. கடுமையான கண்காணிப்பு இல்லாவிட்டால் இந்தத் திட்டம் எம். ஜி. ஆர். ஆட்சியையே கவிழ்த்துவிடும் என்கின்றனர்.'

—ப்ரியன்

ஆசிரியர்: ராமு, நீ டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டோட பையனா இருக்கலாம் அதுக்காக யாரைக் கேள்வி கேட்டாலும் நீ எழுந்து பதில் சொல்லக் கூடாது.



மூன்று கிராமங்களிலும் சில பொதுவான குறைபாடுகள் பேசப்பட்டன; காணப்பட்டன.

அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவைகளை சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் அரசு தருகிறது. ஆனால் காய்கறி, விறகு மற்றும் சில்லறைச் சாமான்கள் வாங்க அரசு கொடுக்கும் 50 ரூபாய் போதவில்லை.

இலவசச் சாப்பாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்புவது அவமானம் என்று கருதும் பெற்றோரும் அட்டெண்டன்ஸ் பதிவு செய்துவிட்டு சாப்பாட்டை வீட்டுக்கு எடுத்துப் போக முயலும் பெற்றோரும் பலர் உள்ளனர். இதனால் திட்டத்தின் நோக்கம் பாதிப்புக்குள்ளாகிறது.

உணவு தயாரிக்கப் பாத்திரங்கள், தட்டுகள், டம்ளர்கள் முதலியன போதிய அளவில் அரசு சப்ளை செய்யவில்லை. சில பெற்றோர் அலுமினியத் தட்டில் தங்கள் குழந்தை சாப்பிடுவதை விரும்பாமல் வீட்டிலிருந்து எவர்சில்வர் தட்டுக் கொடுத்து அனுப்புகிறார்கள்.

சத்துணவுத் திட்டத்தில் குடிதண்ணீரும் முக்கியமாகச் சேர்க்கப்பட வேண்டாமா? குடி தண்ணீர் வசதி எங்கும் திருப்திகரமாய் இல்லை.

சனி ஞாயிறு கூட ஓய்வில்லை, அதிக வேலை என்று கஷ்டப்படும் ஆசிரியர், ஆசிரியைகள் தவிர, திட்டத்தில் அமல்படுத்துவதில் பெரிய பங்கு வகிக்கும் ஊராட்சித் துறை அலுவலர்களும் ஏற்கனவே உள்ள வேலைச் சுமையுடன் புதிய பெரிய பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளது குறித்து வருந்துகிறார்கள். சுமார் 50–60 மையங்களுக்கு பாலசேவிகா, ஆயா முதலியவர்களுக்குச் சம்பளம் போடுவதிலிருந்து அரிசி முதலியன வாங்கி வருவது வரை இவர்கள் கவனிக்க வேண்டும்.

எது எப்படிப் போனாலும் அந்த மத்தியான பன்னிரண்டு மணி வேளையில் பசி வயிற்றைக் கிள்ளக் காத்திருக்கும் குழந்தைகளுக்கு முன் உணவு பரிமாறப்பட்டதும் அவர்கள் கண்கள் மகிழ்ச்சியில் விரிவதும் சுவைத்துச் சாப்பிடுவதும் பார்க்க இத்திட்டத்துக்கு 100 கோடி என்ன எத்தனை கோடி வேணுமானாலும் செலவழிக்கலாமே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

புகைப்படங்கள்: சந்திரமௌலி ஜோதி



சகல 'கமல்' வல்லவன்

ஏவி. எம். ஸ்டுடியோவுக்குள் நுழையும் பொழுதே ''இளமை இதோ இதோ'' என்னும் பாடல் வரிகள் என் காதில் தேனைப் பாய்ந்தது. பாடல் கேட்ட ஏ. சி. தியேட்டருக்குள் எட்டிப் பார்த்தேன்.

''சகல கலா வல்லவன்'' படத்துக்காக கமல் பாடியவாறே டிஸ்கோ நடனம் ஆடிக் கொண்டிருந்தார். (ப்யூடிஃபுல் காஸ்ட்யூம்) என் கையைப் பிடித்து இருக்கையில் உட்கார வைத்தார் டைரக்டர் எஸ். பி. முத்துராமன்.

கமல் வேகமாகச் சுழன்று சுழன்று ஆடினார். அந்த ஆட்டத்தில் அவர் தன்னைச் 'சகல கலா வல்லவனாக' நிலைநிறுத்திக் கொள்ள எத்தனை சாகஸங்களைச் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்துள்ளார்.

பட்டுப் பூச்சிகள் போன்ற பெண்களின் நடுவே கமல் முழு நிலாவாக ஜ்வலித்தார். இந்திப் படங்களில் கூட கமலை இவ்வளவு சிறப்பாகப் பயன் படுத்திக் கொண்டிருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

அதுமட்டுமல்ல. ஆர்ட் டைரக்டர் சலம் அமைத்துள்ள பிரும்மாண்ட செட்டின் மின் விளக்குகளின் கண் சிமிட்டல்களை ஒளிப்பதிவாளர் பாபு பல்வேறு கோணங்களில் படமாக்கியிருக்கும் விதம் அற்புதமாக இருந்தது. நிச்சயமாகத் தமிழ்ப் படங்களில் இப்படியொரு பாடல் காட்சியை இதுவரை யாருமே படமாக்கியதில்லை. எடிடர் விட்டலின் கைவண்ணத்தையும் டைரக்டர் எஸ். பி. முத்துராமனையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பாராட்டினேன்.

''இதே மாதிரி மேலும் வாலியின் ஐந்து பாடல் காட்சிகளைப் படமாக்கியுள்ளோம். இளையராஜா மிக அற்புதமாக இசை அமைத்துள்ளார். 5 சண்டைக் காட்சிகளை ஜூடோ ரத்தினம் புதுமையான முறையில் அமைத்துள்ளார். அவற்றுள் கமல் போடும் குச்சிச் சண்டையும், சேற்றுச் சண்டையும், 'த்ரில்'லாக அமைந்துள்ளன.

பஞ்சு அருணாசலம் கதை, வசனம் எழுதியுள்ள இப்படத்தில் அம்பிகா கதாநாயகியாக நடித்துள்ளார்.


மற்றும் வி. கே. ராமசாமி, ஒய். ஜி. மகேந்திரன், ரவீந்தர், சாமிக்கண்ணு, புஷ்பலதா, சில்க் ஸ்மிதா, குமாரி துளசி இப்படி ஏராளமான நட்சத்திரங்கள் நடித்திருக்கின்றனர்'' என்றார் எஸ். பி. எம்.

அப்போது அங்கே அக்காட்சியை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிரபல விநியோகஸ்தர் சாந்தி பிலிம் கிருஷ்ணமூர்த்தி சொன்னார்:

''கமல் இந்திப் படங்களில் நடிப்பதாலோ என்னவோ ஏவி. எம். குமரன், சரவணன், பாலசுப்பிரமணியம் சகோதரர்கள் சகல கலா வல்லவனையும் ஒரு இந்திப் படம் மாதிரியே தயாரித்திருக்கிறார்கள்.''

உண்மை! நூற்றுக்கு நூறு உண்மை!

—திரைஞானி


எண்ணெய் பேரத்தில் 10 கோடி நஷ்டம்
MDX 0001
தண்ணீர்.. தண்ணீர்.. தண்ணீர் தண்ணீர்.. தண்ணீர்.. தண்ணீர் தண்ணீர்.. தண்ணீர்..
உண்டு.. இல்லை.. உண்டு.. இல்லை.. உண்டு.. இல்லை.. உண்டு.. இல்லை.. உண்டு..
என்னை வீட்டுக்கு அனுப்பிடுவாங்களா என்ன?.. கனவு காணுறீங்க!
என்னை வீட்டுக்கு அனுப்பிடுவாங்களா என்ன?.. கனவு காணுறீங்க!
என்னை வீட்டுக்கு அனுப்பிடுவாங்களா என்ன?.. கனவு காணுறீங்க!
சென்னா ரெட்டி
அஞ்சையா
வெங்கட்ராம்
Rama

கல்கி

1982 ஆகஸ்டு 1
துந்துபி ஆடி 16
மலர்.: 41 இதழ் :



கொடுத்துச் சிவந்த கைகளில் அள்ளிக் கொடுங்கள்!

எம். ஜி. ஆர். — கொடுத்துச் சிவந்த கைகளை உடையவர்.

அவர் இப்போது உங்கள் முன் கையேந்தி நிற்கிறார்!

தமக்காக அல்ல; தமிழகத்தில் உள்ள லட்சக் கணக்கான ஏழைக் குழந்தைகளின் வயிறு நிறைவதற்காக.

சத்துணவு உண்டு அவர்கள் அறிவும் உடலும் வளம் பெறுவதற்காக.

எதிர்காலத் தலைமுறையேனும் ஏற்றத் தாழ்வுகள், ஜாதி வித்தியாசங்கள் பாராட்டாமல் ஒப்புரவுடன் வாழவேண்டும் என்பதற்காக.

திட்டத்துக்கு வரிப் பணம் பயனாகிறது; அந்த வரியையும் மக்கள் தான் தருகிறார்கள். மறுப்பதற்கில்லை.

ஆனால் வரி செலுத்துவது வேறு; 'ஒரு நல்ல காரியம், இதில் நம் பங்கு இருக்க வேண்டும்' என்று ஆர்வத்துடன் கொடுப்பது வேறு.

முதல்வரின் இந்தத் திட்டத்தை முழு மனத்துடன் ஆமோதிக்கிறோம், வரவேற்கிறோம் என்று காட்டிக்கொள்ள ஒருவாய்ப்பு —

அதனைக் கல்கி — மங்கையர் மலர் நிறுவனம் வழங்குகிறது.

குறைந்த பட்சம் ஒரு ரூபாய் அனுப்புங்கள். அதிகபட்சமாக எவ்வளவு வேண்டுமானாலும் அனுப்புங்கள். ஏற்கிறோம்.

எங்கள் பங்குக்கு இதோ; விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டு ரூ. 5000 தந்து நிதியை ஆரம்பித்து வைக்கிறோம்.

நிதி வழங்கியவர்களின் பெயர்களும் தொகைகளும் மங்கையர் மலரில் பிரசுரமாகும்.

குறைந்தபட்சம் ஒரு நல்ல சமையல் கூடம் கட்ட ரூ. 40,000 திரட்டித் தர விரும்புகிறோம். அது கல்கி — மங்கையர் மலர் வாசகர்களின் அன்பளிப்பாகத் திகழும்.

உங்கள் ஒத்துழைப்புடன் வெகு துரிதமாக இந்த நன்கொடையை வழங்க ஆசைப்படுகிறோம்.

இந்த இதழில் சத்துணவுத் திட்டம் அமல்படுத்தப்படும் விதம் பற்றி ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. அடிப்படையில் நேர்த்தியான, வரவேற்கத் தக்க, போற்றுதற்குரிய இட்டத்தின் அமலாக்கத்தில் தென்படுகிற சில குறைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறைபாடுகள் நீக்கப்படக் கூடியவையே. நல்ல திட்டம் என்ற உணர்வும் தன்னலமற்ற ஒத்துழைப்பும் தேவை. கிடைக்கின்ற வெற்றி நம்முடையது; முதல்வருடையது; எதிர்காலத் தலைமுறையினுடையது.

உதாரணமாக கட்டுரையுடன் பிரசுரமாகியுள்ள ஒரு சமையல் கொட்டகையின் புகைப்படத்தைப் பாருங்கள். இந்த நிலைமையை நாம் மாற்றி அமைத்தால் என்ன? அங்கு ஒரு நல்ல ஷெட் கட்ட நாம் ஏன் நம்மாலான உதவி செய்யக் கூடாது?

'நூறு கோடி திட்டத்துக்கு நம் உதவியா?' என்று மலைக்க வேண்டாம். நம் பங்கை நாம் செய்தால் மற்றதைப் பிறர் பார்த்துக்கொள்வார்கள்.

எங்கே, மணியார்டர்களையும் டிராப்டுகளையும் நமது காரியாலயத்தில் குவியச் செய்து எங்களைத் திணற அடியுங்கள் பார்க்கலாம்!

''முதல்வரின் சத்துணவுத் திட்டக் கணக்கு'' என்று குறிப்பிட்டு உங்கள் நன்கொடையை ''நிர்வாகி, கல்கி — மங்கையர் மலர், சென்னை-32'' என்ற விலாசத்துக்கு அனுப்பவும். நன்றி.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பஸ் ஓடிக்கொண்டே யிருந்தது. 'கும்' மென்ற உள்புற அமைதியில் கால்களுக்குக் கீழே டயர்களின் தேய்ச்சலின் அசுரத் தனத்தை உணர முடிந்தது.

சற்று முன் பஸ்ஸில் ஏறும்போது இருந்த பரபரப்பும், விரோதமும், கோபமும் இப்போது பஸ்ஸிற்குள் இல்லை. பிரயாணம் நிச்சயப்பட்டுவிட்டதை உணர முடிந்தது.



சீனு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

பின்னடி சீட் பையன்கூட தன் பக்கத்து 'சீட்'டை யாருக்கோ கொடுத்து விட்டான். அவன் வெகு நேரமாகப்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் [82] ரூ-1000/= முதல் பரிசு பெற்ற சிறுகதை:

உளமைச் சனங்களடீ

முருகு

பக்கத்து சீட்டில் தன் பையை வைத்து யாரோ வரப்போவதாக வராத ஆளுக்காக ஆக்ரமணம் செய்து வைத்திருந்தான்.

ஜன்னலோர சீட்டுக்காக சீனுவோடு திருநெல்வேலியில் ஏறியவுடனேயே சண்டை போட்ட பக்கத்து சீட் ஜிப்பாக்காரர்கூட சமாதானப்பட்டு விட்டார். எந்த நிமிடமும் 'எங்கே போறீங்க'ன்னு ஆரம்பிக்கக்கூடும்.

கண்டக்டர் தம் இருக்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். இன்னும் கொஞ்சம் நேரத்தில் தலைக்கு நேரே இருக்கும் நீல விளக்கைத் தவிர எல்லாம் அணைந்துவிடும்.

முன் 'சீட்' பக்கவாட்டிலும் மேலும் சாமான்களால் வழிந்து கொண்டிருந்தது. புதிதாகக் கல்யாணமான மாப்பிள்ளை—பெண். ஏறும்போதே பார்த்தாகி விட்டது. அவனுடைய கண்ணுக்குக் கீழ் ராத்திரி தூக்க மிச்சம் சிவப்பாய்க் கட்டியிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் தன் தொடையை மெதுவாகத் தூக்கி அவள்மீது வைத்துக் கொள்ளக் கூடும். கல்யாணமாகி இப்போதுதான் போகிறார்கள் போலிருக்கிறது.

'எல்லா சாமான்களும் ஏறித்து. மெத்தை மட்டும் வரலியே! ஒருவேளை மேலே போட்டிருக்கோ என்னவோ? மேலே போட்ட தஞ்சாவூர் ரயில்வே பாலம் இடிக்கும். அப்பறம் இந்த மாதிரி திருவள்ளுவர் பஸ்ல அநேகமாக மேலே சாமான்போட இடம்



இருப்பதில்லே. பின்னுடி கதவு போட்ட பொட்டியில் அடைச்சிருக்கக் கூடும்.'

சீனுவுக்குத் தன்னுடைய இந்த அநாவசியக் கவலைகள் ஆச்சரியமாக இருந்தன. இப்போதைக்கு அவனுக்குக் கவலைப்பட நிறைய விஷயங்கள் இருக்கின்றன.

திருவிடைமருதூருக்குப் போய் இறங்கி வீட்டு வாசலை மிதித்தவுடனேயே

''என்னடா! திமார்னு வந்து நிக்கற!'' காவேரிக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் பாட்டி நிச்சயமாய்க் கேட்பாள்.

அதற்குப் பதிலை இப்போதே யோசித்து வைக்க வேண்டும்.

''வேலையை விட்டுட்டு வந்துட்டேன்.'' இதை உடனேயே சொல்ல முடியாது.

இதற்குள்ளேயே பாட்டி மனத்துக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ? எல்லாமே அவளுக்கு இஷினி மாதிரி தெரிந்துவிடும்.

''இன்னிக்கு நெல் வர்றதோ என்னவோ''ன்னு சொல்லிவிட்டுக் காவேரிக்குப் போவாள். திரும்ப வருவதற்குள் நெல் மணி சிதறக் குத்தகை நெல் வண்டி வந்து நிற்கும்.

கல் சட்டி பழையது வெண்ணெயாய்க் குழைந்து தட்டில் இறங்கும்போதும் நெருப்பு பறக்கத் தலையில் எண்ணெயை வைத்துச் சொறிந்து தேய்த்து விடும்பொழுதும் அவளிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

கண்ணாடியைத்திறந்தால் தேவலாம்என்று சீனுவுக்குத் தோன்றியது.





'ஜில்'லென்று பனிக் காற்று முகத்தில் அறைந்தது.

'இந்த இடத்தையெல்லாம் நன்கு பார்த்துரணும். திரும்ப எப்ப வரோமோ என்னவோ... இருட்டில் என்னத்தத் தெரியறது! எல்லாம் ஒரே கருநீலம். அங்கங்கே சின்னச் சின்னப் பொட்டாய்க் கிராம விளக்குகள்... உரசிக் கொண்டு செல்லும் மரங்கள்.... லாரிகள்....''

சீனு ஒரு சிகரெட்டின் தேவையை அவசரமாக உணர்ந்தான். இதுகூட இந்த ஊருக்கு வந்த பிறகு ஆரம்பித்த பழக்கம். ஊருக்குப் போன பிறகு கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டும். காவேரிக் கரையில்தான் போய்ப் பிடிக்க முடியும். ராத்திரி இருமலை வைத்துக் கொண்டே பாட்டி கண்டு பிடித்து விடுவாள்.

மறுபடியும் மனம் சற்று முன்னால் உதறி விட்டு பஸ் ஏறின வேலையை நினைத்துக் கொண்டது. அந்த வேலையை விட்டதில் சந்தோஷமா, வருத்தமா என்பது புரியவில்லை. இந்த ஊருக்கு வந்த புதிதில் எழுதின கவிதை சீனுவுக்கு ஞாபகம் வந்தது. இந்தக் கவிதைச் சமாசாரம்கூட இந்த ஊருக்கு வந்தபிறகு ஏற்பட்ட பழக்கம்தான்.

வேதனை

கை நழுவி
ஆற்றில் விழுந்து
கரைந்த பின்னும்
கையில் வீசும்
சோப்பு மணம்

தாமிரபரணிக் கரையில் புதிதாய்ப்பிரித்த கைகொள்ளாத மைசூர் சாண்டல் நழுவி விழுந்தபோது கொப்புளித்த வரிகள்.

இந்தக்கைநழுவிவிட்ட வேலையின் ஞாபகம் கூட வேதனைதான்.

• • •

வில்லியனூர் கிட்டாமணி அய்யர்தான் இவனுக்கு இந்த வேலையை வாங்கிக் கொடுத்தார்.

''கும்மோணம் பெரிய தெரு ஆபீஸ்ல போய்ப் பார்''னு லெட்டர் கொடுத்தார்.

''திருநெல்வேலி பிராஞ்சில் 'மெசஞ்சரா போட்டிருக்கேன். இந்தக் காலத்தில வேல கிடைக்கிறது சாதாரணமில்லே. ஒழுங்கா மானேஜர் சொன்னபடி கேட்டு நடந்துக்கணும்.'' பெரிய தெரு ஆபீஸில் கண்ணாடி போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தவர் சொன்னார்.

இவனுக்கு எதுவுமே புரியவில்லை.

'மெசஞ்சர்னா என்ன? மெசஞ்சருக்கு ஒரு எஸ்ஸா ரெண்டு எஸ்ஸா?'

''கும்மோணத்துக்காரர்தான் மானேஜரா இருக்கார். நன்னாக் கவனிச்சிப்பார்''— கிட்டாமணி அய்யர் கூடத்து சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பாட்டிக்குத் தைரியம் சொன்னார். வாசலில் பூரணி காளைகள் பூட்டிய வில்வண்டி நாலு கால் பாய்ச்சலுக்காகக் காத்து நின்றது.

கும்பகோணத்துக்காரர் நன்றாகக் கவனித்துக்கொண்டார். உள்ளே நுழைந்தவுடனேயே ஒரு மஞ்சள் துணியைக் கொடுத்து வாசலில் நிற்கும் ஸ்கூட்டரைத் துடைக்கச் சொன்னார். முதலில் இவனுக்குத் துடைக்கத் தெரியவில்லை. கூட வேலைக்குச் சேர்ந்திருந்த நாராயணன் சொல்லிக் கொடுத்தான்.

''முதல்ல தட்டிக்கணும். அப்புறம் நாலா மடிச்சு வச்சு அழுத்தித் துடைக்கணும்.''

நாராயணன் பதினைந்து நாளுக்கு முன்னாடியே வேலைக்குச் சேர்ந்திருந்தான். அனுபவம்....

அவன்தான் மானேஜரோட பூட்ஸுக்கு எப்படி பாலிஷ் போடுவது, என்று கற்றுக் கொடுத்தான். காலை வெய்யில் சன்னல் வழியாக சதுரம் இழைத்திருக்கும். முதலில் கொஞ்சம் பாலிஷை பூட்சில் தடவி, வெய்யிலில் வைத்து அப்புறம் தேய்க்க... பளபளப்பாகும். தேய்க்கும்போது பிரஷ் முழுக்க பூட்ஸிலே படியக் கூடாது. பட்டும் படாம பட்டும் படாம தீக்குச்சியைக் கிழிக்கிற மாதிரி....

இதே மானேஜரோட அப்பா இப்பவும் கும்பகோணத்துப் பாடசாலையில் மாதம் ஒரு கலம் நெல்லுக்கு வேதம் சொல்லிக் கொடுப்பதும், இந்த மானேஜர் பூட்சைப் போட ஆரம்பித்ததே நேற்றைக்குத்தான் என்பதும் இவனுக்குப் பின்னால் தெரிந்த சமாசாரங்கள்.

• • •

தூரத்து வெளிச்சப் புள்ளிகள் விசுவரூபம் எடுக்க ஆரம்பித்தன. கோவில்பட்டி வந்து விடும். பக்கத்து சீட்டு தூங்கி வழியப் பார்த்தது. தலையில் கொஞ்சம் எண்ணெய் கூட. சீனு தன் சட்டையைப் பற்றிக் கவலைப் பட்டான்.

'விருட்'டென்று கல்யாணப் பந்தலொன்று பின்னால் ஓடியது. அங்கு இழைந்த நாதசுரத் துளி காதில் ஒட்டிக் கொண்டிருந்தது.

''என்ன ராகம்?'' — மனம் ஒவ்வொரு பாட்டின் முதல் வரியை முணு முணுத்து ஒப்பிட்டது.

''ஆந்தோளிகா சாயல். ஜி. என். பி.யின் 'ராககதா'வை ஆந்தோளிகாவில் கேட்கணும். ரொம்ப சுகம்.''

இந்தப் படத்தில் இருப்பது யார் தெரிகிறதா?

ஒரு திரைப்பட நடிகர், ஹாஸ்ய நடிகர்; இன்னும் தெரியவில்லையா? புரட்டுங்கள் 68 ம் பக்கம்.



இந்த ரசனை பானு கற்றுக் கொடுத்தது. அவனுக்காக ஏற்படுத்திக் கொண்ட ரசனை இது.

தைப்பூச வெள்ளி ரத ராத்திரிகள் முழுக்க நாதஸ்வரக் கோஷ்டிகளுக்குப் பின்னாடியே அலைந்து... திருவிசநல்லூர் அய்யாவாள் உற்சவக்கச்சேரிகளுக்காக ஐந்து மைல் நடந்து. ராத்திரியோடு திரும்பி வளர்த்துக்கொண்ட ரசனை.

இப்போதும் கொஞ்சம் கொஞ்சம் ராகங்களின் சாயல் புரிகிறது. பானு அளவுக்கு பந்துவராளிக்கும் காமவர்த்தினிக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

பாட்டியிடமிருந்து வரும் கடிதங்கள் எல்லாம் பானு எழுதியதுதான். பாட்டி பாஷையில் பக்கத்தாத்துக் குட்டி. "அடுத்தாத்தில் எல்லோரும் உன்னைக் கேட்டதாகச் சொன்னார்கள்"னு போன லெட்டரில் கூட வந்தது. 'பக்கத்தாத்தில் எல்லோரையும் கேட்டு இவனும் எழுதிக கொண்டிருந்தான்.

கோவில்பட்டி பின்னால் நழுவியது. முன் சீட்டில் வளையல் சிணுங்கல்....

விருதுநகரில்தான் இனிமேல் நிற்கும். அது வரைக்கும் யோசிக்கலாம்.

● ● ●

மானேஜர் ரொம்ப தாராளம். சீனுவை எங்கும் தனியாக ரூம் பார்க்க வேண்டாம் என்று ஆபீசிலேயே தங்கச் சொன்னார்.

ராத்திரி மாடி முன்வராந்தாவில் படுக்கை. பத்து மணி வரைக்கும் உள்ளே சத்தம் ஓயாது. பகல் முழுக்க கால் கடுக்க ஓடியாடி வேலை செய்த களைப்பு இவன் கண்களில் சுமையாக இறங்கும்.

பனிச்செவை விளக்கு எரியும்.

"இவனைச்சித்த வச்சக்கோயேன். தூங்காம அழறது சனியன். கீழ வச்சக்கோ. தூங்கினப் பறம் கொண்டு வா" — மானேஜராத்து மாமி குழந்தையைத் திணிப்பாள்.

இந்த மாமிகூட வந்த புதிதில் இவனை 'வாங்கோ, போங்கோ'ன்னு கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

மானேஜர் இவனை வைத்துக் கொண்டே சொன்னார்.

"நம்ப ரமேஷ் வயசுதான் இவனுக்கு. வாடா போடான்னு கூப்பிடலாம்."

இவளும் தன் தம்பி ரமேஷோ சுரேஷோன்னு இவனை நினைத்துக் கொண்டாளோ என்னவோ, கூப்பிடுவதை மட்டும் தம்பி மாதிரியே கூப்பிட்டு ஏவுவாள்.

"சாயந்திரம் மறந்துட்டேன். இந்த மருந்தை வாங்கிண்டு வந்துடேன்."

அநேகமாக எல்லாக் கடைகளும் மூடியிருக்கும். அரை மைல் நடந்து வாங்கிக் கொண்டு திரும்பும்போது தூக்கம் போன இடம் தெரியாது.

போன மாதம் நெல்லையப்பர் கோவிலில் டி. கே. ஜெயராமனின் கச்சேரி. போக இவனுக்கு ஆசைதான். போய்த் திரும்பினால் நடு ராத்திரியாகி விடும். டிகேஜேயோட 'நெக்குருகி'யை நினைத்துக் கொண்டு மானே

சிந்தனைக்குச் சில....



அவன் கெட வேண்டும், இவன் கெட வேண்டும் என்று எண்ணுகின்ற தீய நினைவு அலைகள் சென்று மீளவும் நம்பால் வந்து நம்மைத் தாக்குகின்றன. ஆகவே தூய நினைவால் நாம் வாழ்வோம்.

-திருமுருக கிருபானந்த வாரியார்

"ராமாயண இதிகாசத்தை முழு மனத்தைச் செலுத்திப் படித்தேன். அதிசயத்திலும் அதிசயமாக ரொம்பக் கடின இதயம் படைத்த என் கண்ணிலிருந்து ஒவ்வொரு பக்கமும் கண்ணீரை வரவழைத்தன!"

—வி. எஸ். சீனிவாச சாஸ்திரி

அஹிம்ஸா மயமான செயலுக்கு ஒரு மிகச் சிறந்த பலன் என்னவென்றால் அதில் எவன் ஈடுபடுகிறானோ அவன் தன் மேலேயே இடுக்கண்ணை வரவழைத்துக் கொள்கிறான். வேறு எவருக்கும் இன்னலுக்கும் இடுக்கண்ணுக்கும் பங்காளி ஆவதில்லை. ஏனெனில் இவன் பிறருக்கு - பகைவனுக்கும்கூட - துன்பம் விளைவிப்பதற்கு உடன்படுவதில்லை.

—ராஜேந்திர பிரசாத்

சுமையைத் தூக்கிச் செல்பவன் அதன் இறக்குமிடம் எப்போது வருமென்று எப்படி எதிர்பார்த்துக் குறித்த இடம் சேர்ந்ததும் சுமையை இறக்கிச் சுகம் பெறுவானோ, அப்படியேதான் ஞானிக்கும் தேகச் சுமை விஷயம்.

பகவான் ரமண மகரிஷி

ஜரின் தூங்காத குழந்தையைத் தூங்க வைக்கத் தொண்டை அடைக்க வாசலில் இவன் நின்று கொண்டிருந்தான்.

''சத்தியமாக 'மெசஞ்சர்' என்று சொல்லப்பட்ட வேலைகள் இவைகளெல்லாம் இல்லை. இவனுக்குத் தெரியும். போஸ்டாபீஸில் இவன் இனத்தைச் சேர்ந்த நிறையப் பேர்களைப் பார்க்கிறானே!

''ஏன் இப்படிப் பணிந்து போறோம்! இன்னிக்குச் சாயந்திரம் மட்டும் எப்படிக் கோபம் வந்தது! அது கோபம் கூட இல்லை வெறி.''

அந்த மேஜை மேல் எப்போதும் இரண்டு கண்ணாடிப் பேப்பர் வெயிட். தினமும் இவன்தான் துடைத்து வைப்பான். அதுதான் இன்றைக்குக் கைக்குக் கிடைத்தது. ஒரே அடி. மானேஜர் மட்டும் தலையைக் கொஞ்சம் சாய்த்துக் கொள்ளாமலிருந்திருந்தால் ஒரு கொலை!

நல்லவேளை... ஆபீஸில் ஒருவரும் இல்லை. வெறிச்சோடிவிட்டிருந்தது. காலையில்தான் இனிமேல் களை கட்டும். கட்டு தபால் கிடந்தது. நாராயணன் வரவில்லை. சீனு எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டியில் போட்டுவிட்டு வந்தான்.

வெளியில் சந்திப் பிள்ளையார் கோவில் சாயரட்சைக்கு ஒரு கூட்டம் நின்றது. இவனுக்கு நிறைய வேலை இருந்தது. கவுண்டர்களில் லெட்ஜர்கள் வழிந்தன. அத்தனையையும் பீரோவில் அடைக்க வேண்டும். பள்ளிக்கூடம் விட்ட பெண்கள் நாலைந்து பேர் பஸ்ஸுக்காகச் சிரித்துப் பேசிக் கொண்டு நின்றார்கள்.

உடம்பு கசகசத்தது. எல்லாவற்றையும் முடித்துவிட்டுக் குறுக்குத்துறை முருகன் கோவிலுக்குப் போய்விட்டு வரவேண்டும். இந்த ஊரிலேயே ஆறுதலான விஷயம் இது ஒன்றுதான்.

வாசல் ஒற்றைக் கதவைக் கை சாத்தித் தாழ்ப்பாள் போட்டது.

மானேஜர் உள்ளே இருந்தார். பஸ்ஸர் கரகரத்தது.

இந்த பஸ்ஸர் சின்ன டி.வி. மாடல். கத்தும்போதெல்லாம் ஆரஞ்சுக்கலரில் கனறும்.

எப்போதாவது இவன் வேலை முடிந்து இவன் ஒதுக்குப்புறமாக உட்காரப் போகும் போது உள்ளே இருந்து இவர் பார்த்துவிட்டால் போதும். பஸ்ஸர் தணலாய் உமிழும்.

''இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்? அரை மணியாய் பஸ்ஸரை அடிக்கிறேன்.''

சீனு சந்தோஷப்பட்டான். அரை மணியாய் பஸ்ஸர் அலறியிருக்கிறது.

''தபால் போடப் போயிருந்தேன் சார்''

''இது என்ன பென்சில் கூர்ப்பு இல்லை. தினமும் சீவி வைக்கச் சொல்லியிருக்கேனில்லையா?''

காலையில் பென்சிலில் ஊக்கு இருக்கிறதா என்று பார்த்தோமா இல்லையா?

''மறந்துட்டேன் சார்.''

''திங்கறதுக்கு மறக்கறியா! அதைவிட என்ன புடுங்கற வேலை உனக்கு!''

பென்சில் பறந்து தள்ளு கதவுக்குக் கீழே கிடந்தது.

அந்த ஒரு கணம் ரொம்பக் கொடுமையானது. காது மடல் ஜில்லென்று சூடேறியது.

மேஜையில் வைத்திருந்த பேப்பர் வெயிட் அதுவா கையில் அகப்படணும்! பின்னால் கண்ணாடி ஜன்னலில் மோதி கீழே விழ....

விருதுநகர் வந்தாகி விட்டது. வழக்கமாக நிறுத்தும் சாக்கடை ஓரமாகத்தான் நிறுத்தியிருந்தான்.

''காப்பி சாப்பிடறவங்க சாப்பிடலாம். பஸ் பத்து நிமிஷம் நிற்கும்.''

சீனு இறங்கிக் கொண்டான்.

ரோட்டோர புரோட்டாக் கடை ரொம்ப கறுகறுப்பாக இருந்தது. பன்றிகள் பஸ்ஸ்டாண்ட் சுவரை யொட்டி மேய்ந்தன. பக்கத்துச் சினிமாக் கொட்டகையில் இடைவேளை விட்டிருக்கிறது போலிருக்கிறது. முன் சீட்டு மாப்பிள்ளை எங்கிருந்தோ காப்பியை வாங்கிக் கொண்டு வந்து சன்னல் வழியாக இவனிடம் கொடுக்க... அவன் மறுக்க.. 'சும்மா சாப்பிடச்' சொன்னான்.

சீனு நன்றாகப் புகையை உள்ளுக்குள் நிரப்பிக்கொண்டு மெதுவாக விட்டான்.

இந்தப் பழக்கம் கூட மானேஜருக்காகக் கற்றுக் கொண்டதுதான். அவருக்கு சிகரெட் வாசனை பிடிக்காதாம். ராத்திரிப் படுக்கப் போறதுக்கு முன்னாலும், காலையில் ஆபீசுக்குள் நுழைவதற்கு முன்னாலும் சிகரெட் பிடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டான். அப்பத்தான் முகத்தில் வாசனை அறையும்.

முன் சீட்டு கீழே நின்று கொண்டு காப்பித் தம்ளருக்காகக் காத்திருந்தவன் சிநேகமாக இவனைப் பார்த்துச் சிரித்தான். சீனுவுக்குச் சிரிக்கத் தோன்றவில்லை.

டிரைவர் திறந்த தொந்தியோடு பஸ்ஸில் ஏறிக்கொண்டார்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1982

போட்டி முடிவுகள்



பரிசுக்குரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்களின் மகிழ்ச்சி

நடுவர்கள் 1. பொன் பரமகுரு
2. விக்கிரமன், ஆசிரியர், அமுத சுரபி
3. ஜெயந்தன்
4. இந்துமதி
5. ஆசிரியர், கல்கி

ஜூலை 18ந் தேதி நடுவர்கள் கூடி விவாதித்துப் பின்வரும் கதைகளைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தனர்:

முதல் பரிசு: ரூ. 1000

ஊமைச் சனங்களடி!

எழுதியவர்: இரா. சீனிவாசன்,
''முருகு''
14, சன்னதித் தெரு,
வி. என். கிராமம்
திருநெல்வேலி

இரண்டாம் பரிசு: ரூ. 500

பொறம்போக்கு

எழுதியவர்:
பிரதிபா ராஜகோபாலன்
4—15-சி, சரவணா நகர்,
கவுண்டம்பாளையம்
கோவை-641.030

மூன்றும் பரிசு (தலா) ரூ. 250

மற்றுக்கண்

எழுதியவர்: ஆர். வி. சம்பத்,
24-எச். பிள்ளையார்கோயில் தெரு
திருவான்மியூர், சென்னை-41

விடை இல்லா விடுகதைகள்

எழுதியவர்:
கோபிநாத ஆத்ரேயன்,
(அறிமுக எழுத்தாளர்)
12, மாரியம்மன் கோயில் தெரு,
நரசிங்கபுரம்
ஆத்தூர், சேலம் மா.வ. 636108

நடுவர்கள் சார்பிலும் கல்கி நேயர்களின் சார்பிலும் பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். நடுவர்களுக்கு நன்றி. பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட இதர சிறு கதைகளின் பட்டியல் அடுத்த இதழில். புகைப்படம்: உத்ரா

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. வெளியில் வெளிச்சம் மருந்துக்குக்கூட இல்லை. மதுரையில்தான் இனிமேல் வெளிச்சத்தைப் பார்க்கலாம்.

மானேஜர் இத்தனை நேரம் என்ன செய்திருப்பார். நிச்சயமாக ஹெட் ஆபீசுக்கு எழுதியிருக்க முடியாது. தபால்களெல்லாம் போட்டாகி விட்டது. டிரங்காலும் போட முடியாது. ஹெட் ஆபீசில் யாரும் இருக்க மாட்டார்கள். காலையில்தான் ஏதாவது செய்வார்.

எப்படியும் நாலைந்து நாட்களில் எல்லாம் தெரிந்துவிடும். போஸ்ட்மேன் சாமிநாதனிடம் சொல்லி வைக்க வேண்டும். தபால் வந்தால் யார்கிட்டேயாவது கொடுத்துத் தொலைக்கப் போகிறேன்.

ஊருக்குப் போய் என்ன செய்யலாம்?

தினமும் காவேரிக்குப் போகலாம். பாலத்தின் மேலிருந்து குதிக்கலாம். வெங்குட்டு சார் நடத்தும் பஜனையில் சுருதிப் பெட்டி போடலாம். கார்த்திகை மாத திருவிசநல்லூர் அய்யாவாள் உற்சவத்தில் சாம்பார் வாளி தூக்கி, கைங்கரியம் பண்ணலாம். எப்போதாவது மாதத்துக்கு ஒரு தடவை பானுவை மகாலிங்கஸ்வாமி கோவில் சோழன் பிராகாரம் பின்னால் மருதமர நிழலில் பார்த்துப்பேசலாம். பௌர்ணமி நிலவில் பெரிய பிராகாரத்தில் உட்கார்ந்து கொண்டு சாமாவை ''இன்னொரு நாள்'' பாடச் சொல்லிக் கேட்கலாம்.

இதெல்லாம் எத்தனை நாள் ஓடும்?

திடீரென்று வயிற்றில் வேதனை. மனம் கலவரப்பட்டது. 'இனிமேல் இதை விட்டால் வேறு வேலை கிடைக்குமா? அப்படியே கிடைத்தாலும் இதுமாதிரி இன்னொரு மானேஜர் அங்கிருக்க மாட்டாரென்பது என்ன நிச்சயம்?

தூரத்து ஆனை மலை உச்சியில் சிவப்பு விளக்கு மின்னியது. திருப்பரங்குன்றம் வேல் கனலாய்த் தெரிந்தது. முன் சீட்டு குனிந்து அவனிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். மதுரை மேம்பாலம். சோடியம் வேப்பர் விளக்குகள் சாமந்திப் பூக்களாய் உதிர்ந்தன. பஸ்ஸுக்குள் எல்லா விளக்குகளும் எரிந்தன.

மதுரை பஸ் ஸ்டாண்டுக்குள் நுழைந்தவுடன் சீனு பெட்டியையும், பையையும் எடுத்துக்கொண்டு இறங்கினான்.

பக்கத்து சீட்டு அரைத் தூக்கத்தில்

''எந்த ஊரு?'' என்று கேட்டது.

மதுரை டவுன் பஸ் ஸ்டாண்டுக்குள் சீனு நுழைந்தபோது திருநெல்வேலி கடைசி கட்டபொம்மன் தூங்கி வழிந்துகொண்டு வெளியே வர, தொற்றிக் கொண்டான்.

பஸ் ஓட ஆரம்பித்தது.

''ராத்திரி ரெண்டு மணிக்குத் திருநெல்வேலி போய்ச் சேரலாம். நேரே மானேஜரைத்தான் பார்க்கணும். எதற்கும் தயாராப் போகணும். எதை வேண்டுமானாலும் செய்ய வேண்டியதாயிருக்கலாம்.''

''இனிமேல் குழந்தை கொல்லைப்பக்கம் போனால் கூட மாமி உன்னை காரியமாயிருந்தால் எடுத்தெறியச் சொல்லக் கூடும்.''

உருளைக் கிழங்கைப் பாதியாய் வெட்டி பூட்ஸுக்குத் தடவி பாலிஷ் போட்டால் ரொம்ப நாளைக்கு நிக்குமாம். எங்கேயோ படிச்சது. அதைக்கூட 'சஜஸ்டு' பண்ணிச் செய்து காட்டலாம். ஆமாம் சஜஸ்டுக்கு எத்தனை 'ஜி'? ஒன்றா ரெண்டா?

• • •

மதுரையில் திருவள்ளுவரில் புதிதாக ஏறின கண்டக்டர் 'ஒரு தலை குறைகிறதே' என்று திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டிருந்தார்.

சீனுவின் பக்கத்து 'சீட்' தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

டென்னிஸ் வீரர் மெக்கன்ரோவிற்கு என்ன கோபம் வருகிறது! ஏதாவது திட்டிக் கொண்டும், முணுமுணுத்துக்கொண்டும் அலைகிறார். விம்பிள்டன் விளையாட்டின்போது 'ஸ்டுபிட்' என்று கத்தியது தெளிவாக (டி.வி.யில்) கேட்டது. டென்னிஸ் கோர்ட்டில் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதற்காக இந்த வருடம் 500 டாலர் அபராதம் கட்டியிருக்கிறார். இந்த வருடம் ஓரளவு திருந்திவிட்டார் என்று சொல்லலாம். போன வருஷம் அபராதத் தொகை 10,000 டாலர்கள்!



குடும்பம் ஒரு கதம்பம் - 1

மோக மயக்கமல்ல காதல்!

மஞ்சுளா ரமேஷ்

அன்பு ராஜிம்மா,

உனக்கு ஒரே கோபமாக இருக்கும் இல்லையா? எவ்வளவு முக்கியமானவிஷயத்தை எத்தனை பரபரப்போடு எழுதியிருக்கிறோம், இவளானால் கல்லுளிமங்கன் (மங்கி?) மாதிரி அசையாமல், பதிலே போடாமல் இருக்கிறாளே என்று ஆத்திரமாக இருக்கும் உனக்கு.

ஆனால் எனக்கு என்ன பதில் போடுவது என்றுதான் தெரியாமல் விழித்தேன். 'யூ டூ ப்ரூட்டஸ்!' என்ற சீசர் வசனம்தான் ஞாபகம் வருகிறது. நீயுமா இந்தக் காதல் வலையில் சிக்க வேண்டும்...?

ராஜி, காதலின் மகத்துவம் எனக்குத் தெரியாமல் இல்லை. ஒவ்வொரு நிமிடமும் நினைவுகள் மனத்தைக் கற்பூரமாக எரிக்க, கரையானாக அரிக்க... நிமிஷ நிமிஷமும் செத்துப் பிழைக்கும் அந்த இன்ப வேதனை இன்பமா...வேதனையா... வாய் வரைக்கும் இனித்துத் தொண்டைக்குப் போனவுடன் தொண்டை முதல் குடல் வரைக்கும் எரிக்கும் விசித்திரமான மருந்தம்மா அது... அதை நீயும் பருகிவிட்டாய்.







'என்ன, என்னென்னவோ பேத்துகிறாள் இவள். விஷயம் ரொம்ப சிம்பிளானது. நான் என்னுடன் காலேஜில் பணியாற்றும் விசுவநாதனை விரும்புகிறேன். குறுக்கே நிற்கும் ஒரே விஷயம் ஜாதிதான். அப்பா, அம்மாவிடம் சொல்லிப் பார்ப்பது. இல்லையென்றால் ரிஜிஸ்டர் மேரேஜ். இதற்கு உன் ஒத்துழைப்புத் தேவை. இதை விட்டு விட்டு என்னவோ 'அட்வைஸ்' என்ற பேரில் அறுக்கிறாளே' என்று தயவு செய்து இந்தக் கடிதத்தைத் தூக்கி விட்டெறிந்துவிடாதே.

சர்வ நிச்சயமாக, உன் மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். நான் காதலின் எதிரியல்ல. ஆனால் எந்த மாதிரிக் காதல் என்பதில் தான் எனக்கும் உங்களுக்கும் வித்தியாசம்.

டியர் பிரெண்ட், நாம் காலேஜில் படிக்கும் போது அந்த 'அபிமான்' படத்தை எத்தனை முறை உருகி உருகிப் பார்த்தோம், ஞாபகமிருக்கிறதா? அந்த சினிமா லட்சியத் தம்பதிகளுக்காக எவ்வளவு கண்ணீர் விட்டிருப்போம். ரிஜிஸ்டரில் நிறைய 'a' மார்க்கை வாங்கிக் கொடுத்த படம் அது.!

உண்மையிலேயே அப்படி நிஜ வாழ்விலும் காதலித்த அதே அமிதாப்பும், ஜெயாபாதுரியும் இப்போது எப்படி இருக்கிறார்கள் தெரியுமா? வாழ்க்கை நரகமாகி விட்டது ஜெயாவுக்கு. ஆண்பிள்ளைக்கு என்ன, நினைத்த இடமெல்லாம் சொர்க்கம்தான்.

போன வாரம் என்னுடைய வகுப்பை முடித்துக் கொண்டு வராந்தாவில் வந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் என்னுடைய ஸ்டூடண்ட்ஸ் தற்செயலாகப் பேசுவதைக் கேட்டேன். 'பகீ'ரென்றது.

''அடியே, ரதியுடன் அந்தக் கமல் கொஞ்சும்போது... ப்ச! அந்த ஒரு சீனுக்காகவே ஏக் துஜே கேலியேவைப் பதினேழு முறை பார்த்துட்டேன்பா! எனக்கு ஒவ்வொரு சமயம் என்ன தோணும் தெரியுமா? அந்தக் கமலோட ஒரு நாளைக்கு...''

பளாரென்று அவளை அறையலாம் போல் இருந்தது. ஆனால் எரியும் மனத்தோடு என்னுடைய ஹாஸ்டல் அறைக்கு வந்து படுத்தவள் தான். 'முருகா, முருகா' என்று அரற்றத் தான் முடிந்தது, என்னால்.

அப்போதுதான் எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் ஜேம்ஸ் சொன்னது ஞாபகம் வந்தது. இருபத்தேழு வருடங்களுக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்த அவர் இரண்டொரு தமிழ் சினிமாக்கள் பார்க்க வேண்டும் என்றார். பிரின்ஸிபால் கெஸ்டை அழைத்துப் போகச் சொன்னார். ஐந்து படங்களைப் பார்த்துவிட்டு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

''அதென்ன, மிஸ் கல்யாணி, உங்கள் படங்கள் எல்லாம் கல்யாணத்தோடு முடிந்து போகிறது. அதற்கப்புறம் அல்லவா வாழ்க்கை இருக்கிறது....''

ஆமாம், ராஜி. நம் சினிமாக்கள் எல்லாம் காதலுக்காகப் போராடித் திருமணத்தில் முடிந்து போகின்றன. அதற்கப்புறம்தான் எத்தனை உண்மைகள் பச்சையாகக் கிழிக்கப்படுகின்றன? அந்த உண்மைகளை இழுத்து மூடி மறைத்து நமது இளம் பிஞ்சு உள்ளங்களுக்கு வெறும் போதையை மட்டுமே ஏற்றி விடுகின்றன இன்றைய கதைகளும் சினிமாக்களும். இதிலே மயங்கி ஆடி அடங்கி அவர்கள் கண் விழித்துப் பார்க்கும்போது...

அந்த இளம் பிஞ்சு உள்ளங்கள் எரிக்கப்படுகின்றன. மிருதுவான நெஞ்சங்கள் சூட்டுக்கோலால் தாக்கப்படுகின்றன. ஜாதி, சமயம், கலாசாரம் எல்லாம் வேறுபட்டுத் தனியொரு தீவில் அவள் நின்று கொண்டு....

'ஆக, நீ காதலிக்காதே; கஷ்டப்படாதே என்று வேதம் ஓதுகிறாய். அதுதானே நீ சொல்ல வருவது..' என்று என்னை வெறுத்து ஒதுக்காதே. நீ பண்பட்டவள். படித்து விட்டுப் பலருக்குப் பாடம் சொல்லித் தருபவள். வெறும் மோக மயக்கமல்ல உன் காதலென்பது எனக்குத் தெரியும். நான் உன்னுடன் ஏழு வருடங்கள் படித்திருக்கிறேன். இணை பிரியாமல் பழகியிருக்கிறேன் என்ற உரிமையில் உனக்கு ஒன்று சொல்லட்டுமா?

உன் காதல் நீடூழி காலம் வாழட்டும். அன்பு உள்ளங்கள் இணைந்து தழைக்க மனம் குளிர வாழ்த்துகிறேன். ஆனால் அதற்கு முன்னால் உன் காதலுக்கு நீங்களே ஓர் அக்னிப் பரீட்சை வைத்துக் கொள்ளுங்கள் –

இப்போதே அவரவர் அன்னை, தந்தையிடம் பேசுங்கள். அவர்கள் எவ்வளவு மறுத்தாலும் அறப் போராட்டம் நடத்துங்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உங்களை மனம் குளிர வாழ்த்தும் வரை காத்திருந்து மணம் புரிந்து கொள்ளுங்கள். அந்தப் போராட்டத்திலும், காத்திருத்தலிலும்தான் உங்கள் காதல் உண்மையானதா என்பது வெளிவரும்—

ஓடிப்போவது அல்ல காதல். அன்புடன் உங்களை வளர்த்து ஆளாக்கி, ஒவ்வொரு துன்பத்திலும் இன்பத்திலும் துடித்து



பட்டதாரி பாலகன்!

பட்டதாரி ஜே லுவோவுக்கு வயது 12! இத்தனை இளம் வயதில் பட்டம் பெற்ற வேறு ஒருவர் அமெரிக்க சரித்திரத்திலேயே கிடையாது! இடாஹோ மாநிலத்தில் பாயிஸ் அரசுப் பல்கலைக் கழகத்தில் கணக்கில் பட்டம் பெற்றான். தகப்பனார் வாங் லுவோ கம்ப்யூட்டர் இன்ஜினியர். டாய்வானிலிருந்து வந்து குடியேறி அமெரிக்கப் பிரஜையானவர்.

மகிழ்ந்து, நீங்களே அவர்கள் வாழ்வாக வாழும் அந்தப் பெற்றோருக்கு வஞ்சகம் செய்யாதீர்கள். ஏனெனில் நீங்களும் நாளைக்குக் குழந்தைகளைப் பெறுவீர்கள். அதை வளர்க்கும்போதுதான் அந்த அருமை உங்களுக்குப் புரியும்.

எனக்குத் தெரிந்து ஒரு பெண் ஏழு வருடம் காத்திருந்தாள். அவள் உறுதியைப் பார்த்துவிட்டு அவளுடைய பெற்றோர்கள் மனம் கனிந்து மணம் செய்து கொடுத்தார்கள். இப்போது செம்மையாக வாழ்கிறாள் அந்தப் பெண்.

பெற்ற அன்னை வயிறு எரிய வாழ்வதும் ஒரு வாழ்வா, தந்தையும், அண்ணன் தம்பிமார்களும் மூலைக்கு மூலை ஓட வேண்டுமா? இந்தச் சினிமாத்தனம் வேண்டாம். இதைத்தான் உன்னிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பின் அடிப்படையில் கட்டப்படுவதுதான் இல்லறம். அதன் அடித்தளத்தை வெறுப்பில் போடாதீர்கள். என் ராஜிம்மா, மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் காதலுக்கு எதிரியில்லை. அது உண்மையான காதலாக இருக்கும் பட்சத்தில் நீ உன் காதலுக்காகத் தருமம் காத்துப் போராடு. உனக்கு உயிரையும் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

என்றும் உன்
கல்யாணி

அலசல்

தடுமாறும் பாண்டிச்சேரி

பாண்டிச்சேரியில் உள்ள மூன்று தி.மு.க. மந்திரிகள் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. முதலமைச்சர் டி. ராமச்சந்திரன் மீது,லாட்டரி நடத்தும் அதிகாரத்தைத் தனியாருக்குக் கொடுத்து லஞ்சம் பெற்றார் என்றும், பெருமாள் ராஜா என்ற மந்திரி மீது லாரி பெர்மிட் வழங்குவதில் முறைகேடுகள் செய்ததாகவும், இன்னொரு மந்திரியான வி. எம். சி. சிவகுமார் மீது மீன் பிடிக்கும் மோட்டார் படகுகளை வாங்கும் விஷயத்தில் லஞ்சம் பெற்று விட்டார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளன. இவையெல்லாம் போதாதென்று புதியதொரு பெரிய குற்றச்சாட்டுக்கு பெருமாள்ராஜா இலக்காகியிருக்கிறார். சாராயக் கடைகள் ஏலம் விட்ட விஷயத்தில்தான். சுமார் 52 கடைகளை முதல் முறை ஏலம் விட்டதில் அரசுக்குக் கிடைத்த தொகையை விட இரு மடங்கு மறு ஏலம் விட்டதில் கிடைத்திருக்கிறது. கவர்னர் தலையிடாதிருந்திருந்தால் மறு ஏலம் நடந்திருக்காது. அரசுக்கு ஒரு கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கும். திட்டமிட்டு, 52 கடைகளில் பெரும்பாலானகடைகளை பெருயாள்சாமி ராஜாவின் சொந்தக்காரர்களும், பினாமிகளும், முதல் ஏலத்தில் கைப்பற்றினர் என்று புகார்.

இந்தப் பெருமாள் ராஜாவை உடனடியாக மந்திரி பதவியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றுஅ. தி. மு. க.வும் ஜனதா கட்சியும் தி. மு. க. கூட்டணிக் கட்சியாக இருக்கும் இ. காங்கிரஸும் வற்புறுத்தி இருக்கின்றன. ஆனால் முதலமைச்சரோ அவரை நீக்காமல் வைத்திருக்கிறார். இதற்குக் காரணம், பெருமாள் ராஜா செய்த ஊழல் பெரிதாக்கப்படுமானால் தாம் செய்த சிறிய ஊழல்கள் மறக்கப்பட்டு விடும் என்ற எண்ணம்தான் என்று சொல்லுகிறார்கள். மேலும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கே, பெருமாள் ராஜாவைப் பதவியை விட்டுப் போகும்படி சொல்ல முடியாத நிலை இருக்கிறதாம். காரணம், பாண்டிச்சேரி,பணம் சென்னை வரை பாய்வதுதான் என்று சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் பாண்டிச்சேரி, இ. காங்கிரஸ் தலைவர் பி. சண்முகம் கருணாநிதியைச் சந்தித்து, பெருமாள் ராஜாவை விலக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இந்திராவிடமும் சென்று புகார் கூறியுள்ளாராம்.

சட்ட மன்றத்தைச் சில நாட்கள் ஒத்தி வைத்துவிட்டுப்பிறகு கூட்டினால், சில எம். எல். ஏ.க்கள் இ. காங்கிரஸுக்கு வரக்கூடும் என்றும் தனியாகவே இ. காங்கிரஸ் ஆட்சி அமைக்கலாம் என்றும் இந்திராவிடம் சண்முகம் சொல்லியிருக்கிறாராம்.

தி. மு. ச. எம். எல். ஏக்களான சண்முகம், ராமலிங்கம் போன்றவர்கள் இன்னும் மூன்று நான்கு பேருடன் அ. தி. மு. க.வில் சேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கருணாநிதிக்கோ இக்கட்டான சூழ்நிலை. தமது கட்சிக்காரரைக் கண்டிக்கவும் முடியவில்லை. இ. காங்கிரசுடன் உறவை முறித்துக் கொள்ளவும் விருப்பமில்லை.

30 உறுப்பினர்கள் உள்ள சட்ட மன்றத்தில் தி. மு. க.வினர் 15 பேரும், இ. காங்கிரஸ் 10 பேரும், ஜனதா மூன்று பேரும் முஸ்லிம் லீக், மார்க்ஸிஸ்ட் உறுப்பினர் ஒவ்வொருவரும் உள்ளனர். ஆறு தி.மு. கழக எம். எல். ஏக்கள் அ.தி.மு.க.வில் சேர்ந்தால் அ. தி. மு. க — இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

கூட்டணிக் கட்சிகளிடையே பிளவே இல்லை என்று பாண்டி முதல்வர் கரடியாகக் கத்தினாலும் உள்ளுக்குள்ளே புகைந்துகொண்டிருக்கும் விஷயங்கள் வெடிக்க வேண்டிய வேளை நெருங்கி விட்டது.

தி. மு. க. மந்திரிகள் செய்த ஊழல்களைச் சட்ட மன்றத்தில் அங்கம் வகிக்காவிட்டாலும், பொது மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த அ. தி. மு. க. செயலாளர் லோகநாதன், ''எந்த நேரத்தில் தேர்தல் வந்தாலும் அ. தி. மு. க. 20 இடங்களில் வெற்றி பெறும்'' என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்.

—ப்ரியன்





NATIONAL INTEGRATION LANGUAGE SERIES

THE EASIEST WAY TO LEARN ALL INDIAN LANGUAGES IN 30 DAYS

Through English

Learn Tamil	6-50
Learn Telugu	6-50
Learn Kannada	6-50
Learn Malayalam	6-50
Learn Sanskrit	6-50
Learn Hindi	6-50
Learn Bengali	4-50
Learn Marathi	4-50
Learn Punjabi	7-50
Learn Gujarathi	7-00
Learn Urdu	7-50
Learn Arabic	8-50
Learn Oriya	4-50

Through Hindi

Learn Tamil	6-00
Learn Telugu	5-50
Learn Kannada	5-50
Learn Malayalam	6-50
Learn English	8-50

Through Malayalam

Learn Tamil	6-50
Learn Telugu	5-50
Learn Kannada	6-50
Learn Hindi	6-50
Learn Sanskrit	4-50
Learn English	9-50

Through Tamil

Learn English	11.50
Learn Telugu	5-50
Learn Kannada	6-00
Learn Malayalam	7-00
Learn Hindi (Part 1)	5-50
Learn Hindi (Part 2)	7-50
Learn Sanskrit	4-50

Through Tamil (Contd.)

Learn Bengali	4-50
Learn Marathi	5-25
Learn Punjabi	4-50
Learn Gujarathi	6-50
Learn Urdu	6-50
Learn Arabic	7-50
Learn Oriya	4-50
Learn French	9-25
Easy way to Speak English	17-75

Through Kannada

Learn Tamil	5-50
Learn Telugu	5-50
Learn Malayalam	6-50
Learn Hindi	5-50
Learn Sanskrit	6-50
Learn English	9-50

Through Marathi

Learn Tamil	5-25

Through Telugu

Learn English	9-00
English Conversation (with Telugu meaning)	7-30
Learn Tamil	5-50
Learn Hindi	6-00
Learn Malayalam	6-50
Learn Kannada	6-50
Learn Sanskrit	6-50
Learn Urdu	6-50
Learn Gujarathi	5-50
Learn Punjabi	6-00
Learn Marathi	6-50
Learn Bengali	4-50
Learn Oriya	

BALAJI PUBLICATIONS
103, Pycrofts Road, Madras-600 014
Phone : 88731, 88653

விடிவதற்குள் வா!

1

நாகர்கோயிலுக்குப் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும்போது — திருவனந்தபுரத்திலிருந்து சொல்கிறேன் — நடுவே ஆஹா இங்கே இறங்கிவிடலாம் போலத் தோன்றுகிறதே என்று தோன்றும் இடத்தில்தான் மணற்காடு கிராமம் இருக்கிறது. இறங்கிவிடுங்கள். இங்கிருந்தே அரபிக் கடலின் அலைகள் மௌன வெண்மைச் சுருட்டல்களாகத் தெரிகின்றன. சர்ச் தெரிகிறது. புதுசாகப் பெயிண்ட் அடிக்கப்பட்டு மண்டையில் மணி வைத்துக் கொண்டிருக்கிறது. சர்ச்சுக்குப் பின்னால் தென்னை மரத் தோப்புகள் காற்றுக்குச் சலுகை தந்து லேசாக அசைந்து கொண்டிருக்கின்றன. மத்தியான சூரியன் மணலில் ஜிகினாக் காகிதத்தைப் பதித்தது போல் மின்னுகிறது.





மெல்ல நெருங்கலாம். பஸ்ஸிலிருந்து இறங்கின உடனே கடற் கரையில் ஓஸோன் மணத்தை உணர்கிறீர்கள். இது உங்களுக்குப் பழக வேண்டும். ஈர வாசனையும் இல்லாமல் மண் வாசனையும் இல்லாமல் ஒருவிதமான நடு நாற்றம்.

மணற்காட்டுக்குப் போகிற பாதையில் டைட்டேனியம் தொழிற்சாலை உருவாகிக் கொண்டிருக்கிறது. சர்க்கார் கோடி கோடியாக இறைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பேப்பரில் பார்த்திருப்பீர்களே இதுதான். மணற் படுகையில் ரோடு போட்டிருக்கிறார்கள். மெகா உயர ஆஸ்பெஸ்டாஸ் கூரையின் கீழ் அமெரிக்க மிஷின்களை நிமிர்த்திக் கொண்டிருக்கிறார்கள். வெல்டிங் வெளிச்சம் பகலிலும் பளபளக்கிறது. இந்த டைட்டேனிய நாகரிகம் இன்னும் மணற்காடு வரை வரவில்லை. அதோ மணற்காடு தென்னஞ் சோலைக்குள் தூங்கிக்கொண்டிருக்கிறது.

மெயின் ரோடிலிருந்து பிரியும் இடத்தில் டீக்கடை இருக்கிறது. அதில் யாரும் டீ சாப்பிடவில்லை. ஓனர் மட்டும் ஒரு 'நாஷனல் பானஸோனி'க்கை ஏறக் குறைய அணைத்துக்கொண்டு கன்னடப் பாட்டுப் புரியாவிட்டாலும் சிலோன் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

ஊருக்குள் வந்து விட்டோம். வரிசையாக சுமார் முப்பது வீடுகள் தெரிகின்றன. அத்தனையும் மழைக்குப் பயந்த முன் சரிவு வீடுகள். சந்தடியே இல்லை. கோயில் தெரிகிறது. அதன் விசால வாசலில் பூசைக்காரர் முழங்கையில் தலை வைத்துப் படுத்துக்கொண்டிருக்கிறார். எழுப்ப வேண்டாம். கோவில் வாசலில் ஒரு பலசரக்குக் கடையில் சோப்புக்கட்டி, பெருங்காயம், வாசனைத் தைலம், மிளகாய், நிரோத், நோவினோ பாட்டரி, இன்லண்ட் லெட்டர், கோந்துப் பசை எல்லாம் இருக்கிறது. கடைக்கார



ரைத்தான் காணோம். நம்மூரா இருந்தால் இந்நேரம் திருட்டுப் போயிருக்கும்.

போஸ்ட் ஆபீசில் கம்பத்தில் கட்டின தபால் பெட்டியில் அடுத்த கிளியரன்ஸ் நாலேகாலுக்குத்தான். தட்டி கட்டின போஸ்டரில் எம். ஜி. ஆர். படகோட்டி புதிய காப்பியில் சற்று சைடாகச் சிரிக்கிறார். கடலோரம் எடுத்த திருவிழாவின் மிச்சங்கள் காற்றில் இன்னும் ஆடிக் கொண்டிருக்கக் கடல்!

மணற்காட்டிலிருந்து எங்கு நோக்கினாலும் தெரியும் கடல்!

இந்த ஊரில் ஆட்களே இல்லையா என்ன? கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம். அதோ புள்ளி போல யாரோ வருகிறார்கள். இங்கிருந்து பார்க்கும்போது உஷ்ண அலையில் உருவம் நடுங்குகிறது. குதிரை மேல் வருவது போலவும் தோன்றுகிறது. கிட்ட வந்தால்தான் ஆணா பெண்ணா, குதிரையா தெரியவரும். அதுவரை அலுக்காத கடலைப் பார்த்துக் கொண்டிருப்போம்.

மணலில் நடப்பது சிரமமாக இருக்கிறது அல்லவா? இந்தக் கதையில் நிறைய நடக்க வேண்டும். பழகிக் கொள்ளுங்கள். கடற்காற்று என்ன சுகமாக இருக்கிறது! நெருங்க நெருங்க 'கியா கியா' என்ற பறவை சப்தம் கேட்கிறது. லடாக்கில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துவிட்டு செப்டம்பர் மாசம் தென் திருவிதாங்கூர் கடற்கரைக்கு வந்திருக்கும் தவிட்டுத் தலைக் கடற்புறாக்கள். சிறகை விரிக்கும்போது திமர் வெளுப்பாக அடிப்பாகம் தெரிய தலை குப்புற இறங்கிச் சிறிய அலை நீரில் மிதந்து, அலையோடு அசைந்து மீன் தேடும் விந்தைப் பறவைகள். அவைகள் பண்ணும் சப்தத்துக்கு அவைகளுக்குள் ஏதோ பாஷை இருந்துதான் ஆகவேண்டும் என்று நினைப்பீர்கள்.

அவன் வந்துவிட்டான். கிட்டே போய்ச் சந்திப்போம். பஸ் ஸ்டாண்டிலிருந்துதான் வருகிறான். கையில் இருக்கும் பெரிய பெட்டியை உடனே கவனிக்க முடிகிறது. பளபளப்பாக 'டிஜி அலு'வாட்ச் அணிந்திருக்கிறான். பெரிய பார்ஸல் ஒன்றை அணைத்துக் கொண்டிருக்கும் இடது கையில் மோதிரங்கள் மின்னுகின்றன. அவனிடம் எல்லாமே மீசை, கிராப் உட்பட, பளபளப்பாகவும் புதுசாகவும் இருக்கின்றன. கிராமத்துக்குப் பரிச்சயக்காரன் போலத்தான் நடக்கிறான். பின்பற்றுவோம். சதுர முகம், முப்பத்தைந்து வயதிருக்கலாம்; மீசை பிரத்தியேகத் திருகலாக மேல் நோக்கி இருக்கிறது. யாரையும் விசாரிக்காமல் ஒரு குறிப்பிட்ட வீட்டை நோக்கிப் போகிறான். பெட்டியில் கல்ஃப்ஏர் என்று பெரிசாக ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது. ஒரு வீட்டின் வாசலில் போய் நிற்கிறான். கதவைத் தட்டக் குனிந்து உள்ளே போக வேண்டியிருக்கிறது. வீடு பூட்டியிருக்கிறது. சற்று யோசிக்கிறான். கடிகாரத்தைப் பார்க்கிறான். வீட்டுக்கு வெளியே வருகிறான். பெட்டி மிகுந்த கனமுடையது போலும். அதை வீட்டின் குட்டையான திண்ணை மேல் வைத்துவிட்டு ஒரு சிகரெட் பற்ற வைக்கிறான். (555) க்வார்ட்ஸ் லைட்டரை எடுத்து ஒரு க்ளிக் செய்துவிட்டுக் கொஞ்சம் நீலப் புகை மேகம் எழுப்புகிறான். பக்கத்து வீட்டில் நுழைகிறான்.

''உண்ணி! உண்ணி!'' என்று கூப்பிட்டு சன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறான்.

உள்ளே ஒருபெண் கருட்டி வாரிக்கொண்டு எழுந்து ''யாரானு'' என்று கேட்கிறாள்.

''நான்தான் கனகசபை. கிரிஜா எங்கே?''

''வந்நோ!'' என்கிறாள் அவள்.'' எடோ உண்ணி உண்ணி!' என்று உண்ணி எழுப்பப் படும் சப்தம் கேட்கிறது. உண்ணி எழுந்து சன்னல் வழியாகப் பார்த்து ''அட கனகசபை எப்ப வந்தது?'' என்றான்.

''இப்பத்தான் உண்ணி! கிரிஜா எங்கே?''

''அம்மா போயி.''


''எங்க போயி?''

''சேச்சி! கிரிஜம்மா எவ்ட போயி?''

கனகசபை யோசித்தான். என்ன இது! இந்தத் தருணத்தில் கிரிஜா இல்லையே! கடிதம் கிடைக்கவில்லையா? போஸ்ட் ஆபீசில் விசாரிக்க வேண்டும்.

''தாக்கோல் உண்டு'' என்று சொல்லிக் கொண்டே உண்ணி வெளியே வந்தான். அவனுக்குப் பதினேழு வயதிருக்கும். இப்போதுதான் மீசை புறப்பட்டுக் கொண்டிருந்தது. கறுப்பான துருதுருப்பான கண்கள். சாக்லேட் நிறம். இடுப்பில் வேட்டி மட்டும் கட்டியிருந்தான். இப்போதுதான் தசைகள் கொஞ்சம் கட்டுக்கோப்பாக அமைந்து கொண்டிருக்கின்றன. 'தனிநிறம்' போன்ற பத்திரிகைகளை ரகசியமாக 'வாசிக்கும்' பருவம். சிகரெட் பிடித்துப் பார்க்கும். பெண்களை வேறு விதமாகப் பார்க்கும் பருவம். சடல் அலைகளைக் கட்டிப் பிடிக்கத் தோன்றும் பருவம். கனவுகள் காணும் பருவம். உண்ணியின் முக்கியமான கனவைப் பற்றிப் பேச இப்போது தருணம் இல்லை. கனகசபையைக் கவனித்து விட்டு வருவோம்.

'தாக்கோலை' வாங்கித் தன் வீட்டைத் திறந்தான். ''என்ன உண்ணி? கிரிஜா உங்கிட்ட சொல்லலை? நான் வரப்போறதா?''




ரயில் விபத்துக்களைத் தடுப்பது எப்படி?

எல்லா அரசியல்வாதிகளும் இனி ரயிலில்தான் போக வேண்டும் என்று சட்டம் இயற்ற வேண்டும். முக்கியஸ்தர்கள் பிரயாணம் செய்கிறார்களே என்று கவனமாக ஓட்டுவார்கள். (1) ரயில் விபத்தாவது குறையும். (2) அல்லது அரசியல்வாதிகளாவது குறைவார்கள்.

"यस्मिन्देशेहि यो जात: तस्मै तज्जौषधं हितम् ॥"

"எந்த தேசத்தில் (சீதோஷ்ண நிலையில்) எவன் பிறந்திருக்கிறானோ அவனுக்கு அந்நாட்டு மூலிகைகளே சிறந்த பலனை அளிக்கும்."

—(சரகஸம்ஹிதை)



கும்பகோணம் "லலிதா பார்மஸி" மருந்துகளின் சிறப்பு அம்சங்கள்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் ஸ்ரீ தன்வந்திரியின் ஸன்னதியில் மருந்துகள் தயாராவது.

பல வருஷங்கள், முறைப்படி "ஆயுர்வேதத்தை" அத்யயனம் செய்த நிபுணர்களின் நேர்பார்வையில் மருந்துகள் தயாராவது.

எந்த மருந்தையும் எளிதில் முறைப்படி தயாரிக்க உதவியாகப் பல உயர் வைத்ய நூல்கள் கொண்ட புத்தகசாலை, சிறந்த மூலிகைசாலையுடன் இணைந்து விளங்குவது.

★

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

லலிதா பார்மஸி

(ஸ்தாபிதம் 1942)

தலைமை ஆபீஸ் :

கும்பகோணம் Pincode: 612001

போன் : 123

DRUG LICENCE No. 40/78

(மத்திய அரசால் சட்டுத் தொகைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

கிளைகள்

மஹாதானத் தெரு, மாயூரம் 609001

போன் : 379

வடக்கு வீதி, சிதம்பரம் - 608001

நெ. 39, ரங்கநாதன் தெரு, சென்னை - 600 017

போன் : 441454

நெ. 105, கச்சேரி ரோடு, சென்னை — 600 004

போன் : 73007

கடிதம் மூலம் வைத்திய ஆலோசனை பெற விரும்புவோர்கள் 35 பைசா தபால் தலையுடன் தலைமை அலுவலகத்திற்கு எழுதக் கோருகிறோம்.

(கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.)

''ஏய்!'' என்றான் உண்ணி. 'ஏய்' என்றால் இல்லை என்று அர்த்தம். ''சேச்சியை திங்களாழ்ச்சம் கண்டது.''

''திங்களா? அப்ப ஒரு வாரம் ஆச்சா?''

''ஓ'' என்றால் ஆமாம்.

''எங்க போயிருக்கா தெரியுமா?''

''ஏய்! நிங்ஙள் எங்ஙனே இவ்விட வந்நு?''

''பஸ்ஸிலே வரேன். நான் எழுதின கடிதாசி வரலே? கிரிஜா ஏதும் சொல்லலே?''

''ஏய்! இது எந்தாணு?'' உண்ணி கனகசபை கொண்டு வந்திருந்த பெரிய பார்ஸலைச் சற்றே காகிதத்தை விலக்கி எட்டிப் பார்த்தான். ''ஓ! ஸ்டீரியோ! எந்தாணு விலை?''

கனகசபை வீட்டைத் திறந்தான். புழுதியாக இருந்தது. இவன் எழுதியிருந்த கடிதம் பிரிக்கப்படாமல் கதவடியில் கிடந்தது. அதை எடுத்து முத்திரை தேதியைப் பார்த்தான். மழுப்பலாக இருந்தது. கிரிஜாவின் துணிகள் இறைந்திருந்தன. மரக் கதவைத் திறந்து பார்த்ததில் உள்ளே அலமாரி திறந்து கட்டில் மேலும் துணிகள் இறைந்திருந்தன. அடுப்படியில் தேய்க்காமல் உலர்ந்த பாத்திரங்கள் இருந்தன. அவசரம். நாகர்கோவில்தான் போயிருக்க வேண்டும். கோபமாக இருக்கலாம். கடிதம் போட்டு நாளாகி விட்டது என்று! சதாசிவத்தை விசாரித்தால் தெரியும்.

''ஸார் இப்ப எங்கருந்து வரது?''

''சதாசிவம் ஊர்லதான் இருக்காரா?''

''அவர் நாட்டுக்குப் போயி.'' பெட்டியைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ''எப்ப திறக்கும்'' என்றான்.

''உண்ணி! நீ கேட்டது கொண்டு வந்திருக்கேன். அப்புறம் காட்டறேன். நீ போய் வேற யாருக்காவது தெரியுமான்னு விசாரிச்சுக்கிட்டு வா. உங்க அக்காவுக்குத் தெரியுமா? கிரிஜா யாருக்கிட்டயாவது சொல்லிட்டுப் போயிருக்காளான்னு கேட்டுட்டு வா'' என்றான்.

உண்ணி அம்பு போல் ஓடிப்போனான்.

கனகசபை மறுபடி அந்த அலங்கோலத்தைப் பார்த்தான். மனைவி மேல் கோபமாக வந்தது. ஒரு வருஷம் கழித்து வந்திருக்கிறான்: என்ன அலட்சியம்! டிப்பார்ட்மெண்ட் ஸ்டோரில் போய் என்னவெல்லாம் அவளுக்காக வாங்கி வந்திருக்கிறான்! எத்தனை புடவை, எத்தனை ஸில்க், தங்கம், பவழம், மாலைக்குக் கேட்டிருந்த பவழம்..

அலமாரிக்கு மேல் அவனும் அவளும் கல்யாணத்தின்போது சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஐந்து வருஷம்!

'என்னை இந்த முறையாவது கூட்டிக்கிட்டுப் போவீங்களா?'


''இல்லை கிரிஜா! அக்கவுண்டண்டுங்க, இஞ்சினியருங்க மாதிரி ஆளுங்களுக்குத்தான் ஃபாமிலி பர்மிட் கொடுப்பாங்க. இன்னொரு வேலை மனுவலசொல்லியிருக்கேன். கிடைக்கும்போல இருக்கு. அங்க போயிட்டன்னா உன்னை அழைச்சுக்கிட்டுப் போலாம்.''

''அங்க என்ன சம்பளம் வரும்?''

''அங்க தினார் கணக்கு! இங்க ரியால்.''

''இப்ப என்ன சம்பளம் உங்களுக்கு?''

''எட்டாயிரம் ரியால்.''



சென்னை டீ. வி. நிகழ்ச்சிகள் பெங்களூருக்குத் தெரிய ஆரம்பித்தது முதல், அனேகமாகத் தமிழ் ஒலியும் ஒளியும் நிகழ்ச்சியில், சரோஜாதேவி நடித்த ஒரு பாடல் காட்சி இடம் பெறுகிறது. (சரோஜாதேவி பெங்களூரில் இருக்கிறார்.)

''நூறு கிராம் தங்கம் என்ன விலைங்க? போன தபா சரியாவே வாங்கிட்டு–வரலே.''

''இருக்கிற நகை போதாதா? எல்லாத்தையும் வச்சுக்கிட்டுஎன்னசெய்யப்போறே?''

''வருசம் பூரா உங்களை விட்டு இருக்கிறதுக்கு கொஞ்சம் சொத்தாவது சேத்து வெச்சுக்கக் கூடாதா? உங்களுக்கென்ன குஷி. நான்தான் தினம் சமுத்திரத்தைப் பார்த்துக்கிட்டுப் பைத்தியமே புடிச்சுருச்சு. அடுத்த முறை வீடியோ கொண்டுவாங்க!''

அவளை விட அவன் கொண்டு வரும் பொருட்களின் மேல்தான் ஆசை! பணத்தின் மேல், நகை மேல்.

போட்டோவை மறுபடி பார்த்தான். கல்யாணத்தின்போதே ஏகப்பட்ட நகைகள். இவளுக்கு என்மேல் பாசமே இல்லை. வருஷக் கணக்காகக் கட்டுப்பாடான பிரதேசத்தில் நாற்பத்து ஐந்து டிகிரி வெயிலில் வதங்கி, சொந்தமாகச் சமைத்துக் கொண்டு, சொந்தமாகப் பாத்திரங்களை அலம்பிக் கொண்டு, பணம் ஒன்றே குறிக்கோளாக டீ. வியைத் தவிர வேறு எதும் பொழுது போக்கு இல்லாமல், சினிமா இல்லாமல், பெண் வாசனை இல்லாமல், ஏரோப்ளேனில் எல்லாம் கிரிஜா கிரிஜா என்று ஸ்மரித்துக் கொண்டு, நரம்புகளைத் தயார்ப்படுத்திக் கொண்டு, வந்து பார்த்தால்! ஆள் இல்லை. நாகர்கோவில் தான் போயிருப்பாள். வரும்போது வரட்டும். நான் அங்கே போய் அழைக்கப் போவ இல்லை. 'என்ன ஆனாலும் சரி.

மேஜை கசங்கிக் கிடந்த காகிதத்தைப் பார்த்தான். அதை நிதானமாகப் பிரித்தான்.

''விடிவதற்குள் வந்துவிடு–ர சா'' என்று எழுதியிருந்தது.

ரத்தினசாமி! திடுதிப்பென்று அவன் ரத்தம் கொதித்தது.! அடப் பாவி ரத்தின சாமி வந்திருந்தானா!

உண்ணி ஓடிவந்தான். (தொடரும்)

முகுந்தன் அப்படிச் சொன்னவுடன், அந்தப் பூங்காவில் இருந்த அனைத்து மரங்களும், செடிகளும், கொடிகளும் சட்டெனத் தலைகுனிந்துகொண்ட மாதிரி உணர்ந்து நர்மதா திடுக்கிட்டுப்போய் அவனைப் பார்த்தாள்.

இத்தனை நேரம் இந்தக் காற்றின் சலசலப்பு அற்றுப்போனதாய் அவளுக்குத் தோன்றிற்று. மழை பொழிகிற மாதிரி, பக்கத்துப் பெஞ்சில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவர்கள், திடீரென நிறுத்தினது முகுந்தன் பேச்சுக்காகத்தான் என்கிறமாதிரி உணர்ந்தாள் நர்மதா.

நெடு நெடுவென வளர்ந்திருந்த அசோக மரம் ஒருதரம் குனிந்து அவர்களைப் பார்த்துவிட்டு மறுபடியும் தலையைச் சிலுப்பிக் கொண்டு நிமிர்ந்தது.

நர்மதா இன்னும் என்னென்னவோ நினைத்துக்கொண்டிருப்பாள். முகுந்தன் அந்த க்ஷண நேர மௌனத்தை அவளே கலைக்காது விட்டிருந்தால்!

''என்ன நர்மதா நான் ஏதாவது தப்பாச் சொல்லிட்டேனா என்ன?''

''நீ அதைச் சொல்லாமலே இருந்திருக்கலாம் முகுந்த்...''

அவள் கண்களில் தென்பட்ட லேசான வருத்தமும், தோல்வியும் முகுந்தனைச் சங்கடப்படுத்தின.

''ஏன் நர்மதா?''

''இந்த மாதிரி சின்ன விஷயங்கள்லாம் உன்னைப் பாதிக்கும்னு, அதைப்பத்தி நீ எங்கிட்டப் பேசவேண்டாம் நான் நினைச்சுப் பார்த்ததே இல்ல முகுந்த்... திடீர்னு நம்ம நட்பு சறுக்கிட்ட மாதிரி எனக்கு வருத்தமாயிருக்கு.''

''எனக்குப் புரியலே...நான் அதிகப்படியா உரிமை எடுத்துக்கிட்டேன்னு சொல்றியா நர்மதா....?''

''உரிமை இல்லேன்னு நான் சொல்ல வரலே.... நட்புங்கறதுக்கே உரிமைகள் அதிகம்னு எனக்குத் தெரியும். ஆனா நீ என்னை நர்மதாங்கிற ஒரு இன்டிவிஜுவலாப் பாக்கணுமே தவிர நர்மதாங்கற பெண்ணுன்னு உனக்குத் தோணக் கூடாதுன்னுதான் ஆசைப்படறேன்.''

'பெண்ணுன்னு' என்ற சொல்லில் அவள் கொடுத்தஅழுத்தம் முகுந்தனை நிமிர்த்திற்று. நர்மதா நிறையக் குழம்புகிறாள். அவனால் புரிந்துகொள்ள முடியாத உயரத்தில் உட்கார்ந்துகொண்டு அவனைக் கைதூக்கி ஏற்றிவிடுகிற பாவனையில் இன்னும் ஆழமாய் அவனை இறக்கிப் புதைக்கிற மாதிரிதான் தோன்றிற்று முகுந்தனுக்கு. வேண்டுமென்றே செய்கிறாளா? இல்லை இதுதான் இவளுடைய இயல்பா?

நர்மதா தோளைச் சுற்றிப் புடவையை இழுத்து மூடிக் கொண்டாள்.

''இப்பத் திருப்தியா?'' என்று சிரித்தாள்.

முகுந்தனுக்கு வாயடைத்துப் போயிற்று.

''ஸாரி நர்மதா'' என்று சொல்ல முனைந்ததில் சொல் சிக்கிற்று. ''நீ அகலமா முதுகு தெரிகிற மாதிரி ஜாக்கெட்போட்டிருக்கிறப்ப சுத்தி நாலு பேரு உன்னையே பாக்கறதை என்னால சகிக்கக் முடியலே நர்மதா... எனக்கே உன்கூடப் பேசறதுக்குக் கூச்சமா இருந்தது. அதனாலதான்போர்த்தி மூடிக்கோயேன்னு சொன்னேன். ஒரு அண்ணன் தங்கச்சிக்கிட்ட சொல்ற மாதிரி...''

''அதான் வேண்டாம்னேன் முகுந்த்... அண்ணன், தங்கச்சின்னாக்கூட ஆம்பிளே, பொம்பிளேன்னு ரெண்டு ஜாதியாயிடுது... நட்பில் அந்த ஜாதி உறுத்தலே இருக்கக் கூடாது. உங்கூட நான் பழக ஆரம்பிச்சப்போ இந்த உறுத்தல் எதுவும் இல்லாம சகஜமா நீ பழகினதாலதான் வேற யார்கிட்டயும் நட்பு வைக்க முடியாத என்னால உன்கிட்ட அந்த நட்பைத் தேடிக்க முடிஞ்சுது. நாம நண்பர்கள்... நல்ல நண்பர்கள்... நான் ஒரு பெண்ணுங்கிறதை நீ எப்பவுமே நிமிஷத்துக்கு நிமிஷம் நெனைச்சுக்கிட்டுப் பேசிட்டிருந்தா, பழகிட்டிருந்தா நமக்குள்ளயும் இந்தத் திரை விழுந்திடும்... அதனாலதான் சொன்னேன்... இப்பப் புரியுதா?''



முகுந்தன் தலையை அசைத்தான். ஆனால் பின்னணியில் அவனுக்கு முழுவதும் புரியவில்லை என்கிற அதிர்ச்சி நிழலோடிற்று.

''இப்ப நான் முகுந்தனை முகுந்தனாத்தான் எடுத்திக்கிட்டிருக்கேன். முகுந்தன்கிற ஆம்பிள்ளேன்னு நெனைக்கிறதில்ல....''

''அதெப்படி நர்மதா நான் ஆண்கறதையே நீ மறந்துட்டுப் பழக முடியும்?''

''மறுபடியும் குழப்பிக்கிறே முகுந்த்... மறந்துட்டுன்னு நான் சொல்லலே. நெனைக்காமன்னுதான் சொன்னேன். நீ ஆண்கிறதையோ நான் பெண்கிறதையோ நான் மறக்கவோ மறுக்கவோ இல்லே, ஆனா நீ

ஆண்கிறதையே எப்பவும் நெனைச்சுக்கிட்டு இருக்கிறதுமில்லே. புரியுதா?''

''கொஞ்சம், கொஞ்சம்....''

''இப்படி வச்சுக்கலாம். நீ எங்கூடப் பழகறதெல்லாம் நர்மதாங்கற நண்பரோட பழகறேன்னு மட்டும் கவனமா இருந்தாப் போதும். என்னோட உயரம், பருமன், நான் கட்டியிருக்கிற புடவை, போட்டிருக்கிற ப்ளவுஸ் இதெல்லாம் உன்கிட்ட எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தக் கூடாது... பழகிக் கிட்டா வந்துடும். இந்த மாதிரி எண்ணங்கள் வரச்சேல்லாம் உதறி விலக்க ஆரம்பிச்சாப் போறும். ஒரு கால்வாயில தண்ணி ஓடிட்டிருக்கு. நீ பாக்கற அதைத் தண்ணின்னுதான பாக்கற? வாய்க்கு ருசியா இருக்குமா, கடுக்குமா, உப்புக் கரிக்குமான்னெல்லாம்யோசிச்சிக்கிட்டிருக்கியா.... அந்த மாதிரிதான் நர்மதாங்கறதும்... ப்ளெய்ன் வாட்டர்... வேற எந்தக் கலரோ, டேஸ்டோ சேர்க்காமப் பாரு....''

''அப்படின்னு யாரையுமே இது ஆண், இது பெண்ணுன்னுந் நெனைச்சதில்லேங்கிறயா நர்மதா?''

''எல்லார்கிட்டயும் நான் அப்படி ஏன் இருக்கணும்? மத்தவங்கள்லாம் என்னோட.... என்ன சொல்லலாம்...ம்... தோழர்கள்... நீ என்னோட நண்பன்... தோழமைக்கும் நட்புக்கும் என்னோட டிக்ஷனரில இருக்கிற வித்தியாசம் உனக்குப் புரியுதா... அறிமுக மானவங்கள்லாம் நண்பர்களாயிட முடியாது. புரியுதா....?''

நர்மதா எழுந்து கொண்டாள். உடனடியாய் அவளுடைய உயரம் முகுந்தனைப் பாதித்தது. மனசுக்குள் தலையைச் சிலுப்பிக் கொண்டான். எழுந்தான்.

இருவருமாய் மெல்ல புல்முளைத்த ஜில் விட்ட மண்ணை மிதித்துக் கொண்டு சிமெண்ட் பாதைக்கு வந்து பூங்காவுக்கு வெளியே வந்தார்கள்.

சரியாய் ஒரு மாதத்துக்கு முன்னால் பார்த்தசாரதியின் கீதை உரையில் நர்மதா அவனுக்கு அறிமுகமானாள். சமஸ்கிருத கீதையை ஆங்கிலத்தில் விளக்கி, தமிழர்களைக் கவர்வது என்பது சுலபமான வெற்றியல்ல. பார்த்தசாரதிக்கு அது கைகூடி வந்திருந்தது. மெய் மறந்து அந்த உரையின் விரிவுகளின் ஆழத்தில் மூழ்கித் திளைக்கையில், கண்ணில்தென்பட்ட ஒவ்வொருவரிடமும் அதைப்பற்றி உரையாடி, விவாதித்து ருசிசேர்க்க வேண்டும் என்ற மனத்துடிப்பு உடம்பெங்கும் வியாபித்திருக்கையில்தான் நர்மதா



முஜனனா பூவனா..!

எதிர்ப்பட்டாள். அவ்வப்போது ஒரே ரூட் பஸ்ஸில் பார்த்த பரிச்சய முகம். நெருக்கமாய்ப் பழக்கமில்லே. இவளைப் பார்த்ததும்

அருள் வாக்கு...

ஜீவனத்துக்குப் பணம் அவசியம்தான்; வைராக்கியம், ஸந்நியாசம் என்று உபதேசித்தால் பிரயோஜனமில்லையென்றே அர்த்த சாஸ்திரத்தைக் கொடுத்தாற்போலவே, சரீர பலத்தாலும் ஆயுத பலத்தாலும் ரக்ஷித்துக் கொள்ள வேண்டியதும் அவசியம்தான் என்றே தநுர் வேதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆயுதம் இல்லாமலே குத்துச் சண்டை, மல்யுத்தம் முதலியனவும் தன்னுடைய சரீர பலம் ஒன்றை மாத்திரமே கொண்டு செய்வதுண்டு. மல்லர்கள் என்று மல்யுத்த வீரர்களைச் சொல்வார்கள். மகா மல்லன், மாமல்லன் என்றே நரசிம்ம வர்மா என்ற பல்லவ ராஜா பட்டப் பேர் வைத்துக்கொண்டிருந்தான். 'என்ன மல்லுக்கு நிற்கிறே?' என்று கேட்பதிலிருந்து இது பெரிய யுத்த தந்திரமாயிருந்தது தெரிகிறது. கிருஷ்ண பரமாத்மா, சாணூரன், முஷ்டிகன் என்பவர்களோடு மல் யுத்தம் பண்ணிக் கம்ஸன் சபையில் ஜயித்திருக்கிறார். ஜராஸந்தனோடு பீமசேனன் மல்யுத்தம்தான் பண்ணி அவனைக் கொன்றான்.

தர்ம ரக்ஷைக்காகவே இப்படிப் பல தினுசில் சரீரத்தைக் கொண்டும் ஆயுதத்தைக் கொண்டும், தன்னுடைய சரீரத்தையும் தன்நாட்டு மக்களின் சரீரத்தையும் ரக்ஷித்துக் கொள்வதற்குத தநுர் வேதம் வழி சொல்லிக்கொடுக்கிறது.

எந்தப் போர் முறையானாலும் இன்னின்ன ஒழுங்கு முறைகளின்படி செய்ய வேண்டும் என்று அதற்கு வியவஸ்தை பண்ணி ''தர்ம யுத்தம்'' என்று வைத்திருக்கிறது. இதிலே பெரிய தர்மம் 'ஸேனைக்கும், ஸேனைக்கும் தான் சண்டை. யுத்த பூமியிலேதான் அந்தச் சண்டை நடக்க வேண்டும். மற்ற பொது ஜனங்கள் எவரையும் தாக்கப்படாது. நாடு நகரங்களைப் பாதிக்கப்படாது என்று வைத்ததுதான். தற்காலத்திலோ ஸிவிலியன் பாபுலேஷன், குழந்தைகள், ஸ்திரீகள் எவரானாலும் குரூரமாகக் கொன்று குவிக்கிற விமானப் படையெடுப்பும், குண்டு போடுவதும் தான் போர் முறை என்றாயிருக்கிறது.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



அவளே புன்னகைத்தாள். ''ஹலோ'' என்றான். ''டெய்லி வரீங்களா... நேத்து உங்களைப் பார்க்கலியே...''

''இன்னைக்குத்தான் முதன் முதலா வரேன்... நீங்க?''

''நான் ஒரு நாள் கூட மிஸ் பண்ண இல்ல... இன்னிக்கு அபாரம். நாளைக்கு வருவீங்களா?''

''வருவேன்... ஐ டோண்ட் வாண்ட் டு மிஸ் இட்'' என்றான். ''நீங்க திருவல்லிக்கேணி இல்ல?''

''ஆமாம்... பெரிய தெரு'' என்றான். ''நீங்க?''

''டிரிப்ளிகேன்தான். பெல்ஸ் ரோடு... பஸ்ல பாத்திருக்கேன் உங்களை.''

''நானும்.''

''படிக்கிறீங்களா?''

''வேலைக்குப் போறீங்களா?''

''கல்யாணம் ஆயிடிச்சா?''

எதிரும் புதிருமாய் மாற்றி மாற்றி மெல்ல மெல்ல இருவரது பின்னணிகளும் பரிமாறிக் கொள்ளப்படக் கடற்கரை வரை நடந்து போனதில் ஏற்கனவே நிறைய வருடங்கள் ஒத்திகை பார்த்துப் பார்த்துப் பழக்கப்படுத்தி வைத்த மாதிரி இயல்பாய் இருவருடைய எண்ணங்கள், தேவைகள், எதிர்பார்ப்புகள், கோட்பாடுகள் எல்லாம் அவ்வளவு ஒன்றி இழைந்து கொண்டன. அடிக்கடி சந்தித்து இழையாய் நூற்கப்பட்ட நட்பு இந்த ஒரு மாசத்தில் இறுகிப் போயிற்று.

"அது என்னவோ முகுந்த்... உங்ககிட்ட மட்டும்தான் என்னால மனம் விட்டு எந்த விஷயத்தைப் பத்தியும் பேச முடியுது....''

உண்மைதான். நர்மதாவைப் பார்த்து முதலில் பழக ஆரம்பித்தபோது இத்தனை விஷயங்களை ஒரு பெண்ணின் மனசிலிருந்து புதையலெடுக்கப் போகிறோம் என்று முகுந்தனுக்குச் சற்றும் உதித்ததில்லை.

ஆண்களைப் பற்றி மட்டும் அவளுக்கு ஏராளக் குறை. ''உங்க வர்க்கம் பண்ற அட்டூழியத்தை நெனைச்சாத்தான் பத்திக்கிட்டு வருது.... இன்னிக்கு லேடீஸ் ஸ்பெஷல் பஸ்ல ஏறிட்டு எறங்க மாட்டேன்னு சிலது அடம் பிடிச்சது பாரு... எனக்கு வந்த ஆத்திரத்தில அத்தனையையும் பஸ்ஸுக்கடியில தள்ளி அரைச்சுடலாம் போல இருந்தது.''

ஓடிக்கொண்டிருந்த ஸ்கூட்டர் காற்றை வாங்கி வாங்கிப் பின்னுக்குத் தள்ளி விட்டாலும் கூட, நர்மதாவின் குரல் அவன் காதோரத்தில் வந்து உள் பாய்ந்தது.

''ஏன் நர்மதா? ஆம்பிளைங்களுக்குச் சமமாப் பொம்பிளைங்கன்னு சொல்லுவே... பஸ்ல மட்டும் நீங்கள்லாம் தனியா உரிமை கொண்டாடறது சரியா?''

''ஆணுக்குப் பெண் சமம்னு சொன்னா எல்லாத்தையும் விட்டுட்டு சின்ன சில்லறை விஷயத்தை வைச்சுக்கிட்டு ஆர்க்யூ பண்ணணுமா முகுந்த்.. சமம்னா சமுதாயத்தில அவங்களுக்கு இருக்கிற பங்கிலயும், உரிமையிலேயும், பொறுப்பிலேயும்னு ஏன் எடுத்துக்க



ஒவ்வொரு நாளையும்

டான்டெக்ஸ்®


அணிந்து துவக்குங்கள்

காலை முதல் இரவு வரை டான்டெக்ஸ்
அணிந்து மகிழுங்கள். அதன்
கச்சிதமான உடம்போடு ஒட்டும்
அமைப்பும், சிறப்பும் உங்களுக்கு நாள்
முழுவதும் இதமான சுகத்தை
அளிக்கிறது.

IS : 4964

ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்

ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ் • காஷீவெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள் • சிறுவர்களுக்கான ரகங்கள்



ttk தயாரிப்பு

Imageads-M- TT. 1568 Tam

மாட்டேங்கற? ஆம்பிளை சட்டை யில்லாம வருவான், நீயும் வாயேன்னு சொல்றதுலயும், ஆம்பிளை மாதிரி வெயிட்டைத் தூக்கிக் காட்டேன்னு சொல்றதுலயும் சம உரிமை கேக்கறவங்களை மட்டம் தட்டி மடக்கிட்ட மாதிரி நெனைச்சுக்கிற ஜாதில நீயும் சேர்ந்துடாதே முகுந்த். ஆம்பிளைங்களுக்குப் பிறப்பாலே கிடைச்சிருக்கிற பலத்தையோ, கம்பீரத்தையோ பொம்பிளைங்க கேக்கலே. எங்களுக்கும் தாடி மீசை முளைக்கணும்னு கேட்கலே... ஒரு வலிமையான ஜாதியோட நிழல்லதான் மென்மையான பொண்ணுக்குப் பாதுகாப்பு. அதை மறுத்துப் பேசலே யாரும். சமம்னு சொல்றதைக் கொச்சைப் படுத்தாதே... நாங்க சொல்றது ஒரு சமமான அந்தஸ்துதான். ஆம்பிள்ளை மாதிரி ஓடிப் போய் பஸ்ல ஏற முடியாத எங்களுக்கு ஏன் தனியா ஒரு பஸ் ஓட்டக் கூடாது?''

''ஓட்டட்டும்... அதில அவசரத்துக்கு ஒண்ணு ரெண்டு ஆம்பிளைங்க வந்து ஏறினதாலே என்ன கெட்டுப் போயிடிச்சு?''

''ஒரு கட்டுப்பாடுதான்... சினிமாத் தியேட்டர்லே ஆயிரம் பேருக்கு டிக்கட் வித்துட்டுப் படம் காட்டறப்ப, கூட இன்னும் ரெண்டு பேர் ஓசில பார்த்தாஎன்ன கெட்டுப்போகும்னு கேட்டுக்கிட்டு தியேட்டரிலே நுழைய முடியுமா என்ன..., அங்கங்க ஏதாவது ஒரு எல்லையில நிறுத்தி வச்சாத்தான் போட்ட ரூலுங்களுக்கு அர்த்தம் கெடைக்கும்...''

இவளோடு வாதம் புரிந்து ஜெயிப்பது சுலபமில்லே என்று தெரிந்தது முகுந்தனுக்கு.

ஆண்களின் பேரில் ஒரு அதிகப்படியான அளவு இவளுக்குக் கோபம் இருக்கிறது என்றுதான் தோன்றும். கடந்துபோன நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒன்று அவள் மனசை அப்படிக் கீறிவிட்டதோ?

மெலிதாய் அலை விட்டுப் பார்த்தான். அவளது பதில் அதற்கும் வேறாய் இருந்தது.

''ஆம்பிளைங்க பேரில எனக்குக் கோபமெல்லாம் ஒண்ணே ஒண்ணுலதான்... ஒரு பொண்ணு தன்னோட பாதுகாப்பில இருக்க வேண்டிய கட்டாயத்தில இருக்கிறாங்கறதை ஒரு பெருந்தன்மையோட எடுத்துக்கிட்டு அவளுக்குத் தேவையான மரியாதையைத் தரதுக்குப் பதிலா அத அவளோட 'வீக்னஸா' பாவிச்சிக்கிட்டு அதைதுஷ்பிரயோகம் பண்ணி அவளை அடக்கி ஆளறதுக்கும் இஷ்டப்படி வளைச்சுப் பிடிக்கிறதுக்கும் நம்பளைத் தட்டிக் கேக்க இவளுக்கு ஏது பலம்கற திமிரோட அவளை ஒரு அடிமையா நடத்துறதுக்கும் ஆசைப்படற ஆம்பிளைங்க பேர்லதான் என் கோபமெல்லாம்... மொத்தமா எல்லா ஆம்பிளைங்க பேர்லேயும் இல்ல... புரியுதா?''

ஆலங்கட்டி மழை பெய்த மாதிரி இருந்தது. கரடு முரடாய் வார்த்தைகளைப் போட்டுப் பேசினாலும் அதில் ஒரு குளுமை விரவிக் கிடந்தது.

''அதனாலதான் முகுந்த் ஒன்பேர்லஎனக்கு இந்தத் தனி ஈடுபாடு... நட்பு எல்லாம்... உசரமா, திடகாத்திரமா மார்ல மயிரோட இருக்கிறதுதான் கம்பீரம்னு நெனைக்கிற ஆம்பிளைங்க மத்தியில உன்னோட போக்கால, நடத்தையால, என்கிட்ட நீ காட்டற பரிவால நீ அவுங்களையெல்லாம் விட ஜாஸ்தி கம்பீரம் உடையவன்னு நிரூபிச்சிட்ட...ஆனா இன்னிக்கு அது கொஞ்சம் குறைஞ்சிட்ட மாதிரி தோணிடிச்சி... ஆனாலும் இப்பப் பரவாயில்லே... சரி நாளைக்கு எந்த இடம்?''

முகுந்தன் பதில் சொல்ல வாயைத் திறக்கு முன் ஸ்கூட்டர் 'கட' 'முடா' என்றது. கனைத்துக் கனைத்து வேகம் குறைந்து நின்று போயிற்று.

நர்மதா கீழே இறங்கி நின்றாள்.

முகுந்தன்ஸ்கூட்டரைஸ்டாண்ட் போட்டு நிறுத்திப் பக்க ஆடையை விலக்கிக் கண் பதிக்கையில் நர்மதா பார்வையை அலைய விட்டாள்.

''ஒண்ணுமில்ல ஒரு வயர் கனெக்ஷன் விட்டுப் போயிடுச்சி'' என்று சொல்லி நிமிர்ந்தான் முகுந்தன்.

நர்மதா அவனைக் கவனிக்காமல் பிளாட்பாரத்தில் அவளைக் கடந்து சென்ற ஜோடியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இளைஞன் 1: அந்தக் குழந்தை எவ்வளவு அசிங்கமா இருக்கு? ஏன் அதைக் கொஞ்சறே?

இளைஞன் 2: என்ன பண்றது? அதோட அக்கா அழகா இருக்காளே! வேற வழி?

''அட....'' என்றாள் அவனையறியாமல்.

''என்ன நர்மதா?'' என்றான்.

''அந்தப் பொண்ணு முகுந்தன்... பக்கத்து வீட்டுப் பொண்ணு... ரொம்ப சாதுவா இருக்கும்... இந்தப் பூனைகூடப் பால் குடிக்குமாங்கிற மாதிரி... அந்தப் பையன் தோள்லயே தொங்கிக்கிட்டுப் போவுது... அவன் யாரோ என்னவோ...? இதப் போய் நான் சின்னப் பொண்ணு, ஒண்ணும் தெரியாதுன்னு நெனைச்சேனே!''

முகுந்தனுக்குத் திகைப்பாக இருந்தது.

'பூனைப் பாரு, முன்னைப் பார்க்காதே' என்று அடிக்கொரு தரம் பேசுகிற நர்மதாவா இது? நர்மதாவுக்குக் கூட இந்த மாதிரி முன்னைத்தான் பார்க்க முடியுமா? விசால மனம், பரந்த அறிவு... ம்... அதெல்லாம் அப்புறம்...முதலில் நர்மதாவும் ஒரு பெண்..

முகுந்தன் அவளைப் பார்த்து அர்த்தத்தோடு புன்னகைத்தான்.

முதலீடு செய்பவர்களுக்கெல்லாம் ஓர் அமுதசுரபி இந்துவே


ஆம், இந்து பைனான்ஷியர்ஸிடம் முதலீடு செய்யப்பட்ட உங்கள் பணம் மிக பத்திரமாக இருப்பதோடு மட்டுமின்றி கணிசமானதோர் வட்டித் தொகையையும் — **18%** வரை ஈட்டுத்தருகிறது. இந்துவின் 'ஐஸ்வர்யா' டிபாஸிட்டில் உங்கள் முதலீடு ஐந்தே ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது. அதுமட்டுமல்ல நீங்கள் முதலீடு செய்யும் ரூ. 5000/- உங்களுக்கு அழகியதோர் வெள்ளிப் பரிசையும் பெற்றுத் தருகிறது.

வாடிக்கையாளர்களிடம் இந்து கொண்டுள்ள உன்னத விஸ்வாசம், குறித்த காலத்தில் உங்கள் பணம், மேலும் சீரிய உத்தரவாதம் எல்லாம் இந்துவை ஏனைய பதிவு செய்யப்பட்ட பைனான்ஸ் நிறுவனங்களிடையே ஒளி வீசும் ஒரு ரத்தினமெனத் திகழச் செய்கிறது.

இந்து உறுதியுடனும், உத்தரவாதத்துடனும், உங்கள் முதலீட்டினைக் கட்டிக்காத்து உங்கள் செல்வம் பெருகிட வழிகாட்டுகிறது. வற்றாது வழங்கும் அமுதசுரபியே இந்து.

கிளைகள்:
32, ரங்கநாதன் தெரு.
சென்னை-600 017
18, சிங்கண்ண நாயக்கன் தெரு
சென்னை-600 001
24, வடக்கு மாட வீதி, பூவிருந்தவல்லி,
சென்னை-600 056-போன்: 69566
41, தொப்பா முதலியார் தெரு
பெங்களூர்-560 001
போன்: 579585
194, வக்கீல் புதுத் தெரு,
மதுரை-625 001, போன்: 34940
106, பெரிய தெரு,
திருவண்ணாமலை-606 601, போன்: 681
22, வணிகர் தெரு,
காஞ்சிபுரம்-631 201, போன்: 3048

இந்துவுடன் சேர்ந்து வளம் பெறுங்கள்



இந்து பைனான்ஷியர்ஸ் (Regd.)

INDU FINANCIERS MADRAS-600017

H.O. 155, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராயநகர், சென்னை-600 017
போன்: 445529

S. Subbarayan, M.A.,
Managing Partner

UIPC: IF:208



அலை ஓசை-1

பிரியமான பிந்து.

எனக்கு ரொம்பப் பிடித்தமான விஷயங்கள்ல ஒன்று பீச்சில உட்கார்ந்துட்டு இந்த அலைகளையே பார்த்துக்கிட்டு இருக்கிறது தான். உனக்குக்கூட இது பிடிக்குமில்லையா?

நம்மைப் பிரமிக்க வைக்கிறதான ஒரு விஷயம் இந்தக் கடல் அலைகள். நம்ம கவிஞர்களுக்கெல்லாம் அதிகமா கை கொடுக்கிற விஷயங்கள்ல இதுவும் ஒன்று. 'சலிப்புக்கு அர்த்தம் புரியாத மட ஜென்மங்கள். எப்போதோ ஒரு முறை கிடைக்கும் நில மகளின் முத்தத்துக்காய் தொடர்ந்து ஏங்கும்..' —இப்படிப் புதுக் கவிதையா நிறைய நீ படிச்சிருக்கலாம். இந்த அலைகளைப் பதிக் கொஞ்சம் விஞ்ஞான பூர்வமான விவரங்களை இப்பச் சொல்லட்டுமா?

ஒரு விஷயத்தை நீ கவனிச்சிருக்கலாம். இந்த அலைகளோட தன்மை எப்பவும் ஒரே மாதிரி இருக்கிறதில்லைன்னு. ஒரு நாள் 18 அடி உயரமா அலைன்னு அடுத்த நாள் 19 அடி. இன்னொரு நாள் 17 அடி. இப்படி அலைகளோட அதிகப்பட்ச உயரத்தில் வித்தியாசங்கள் இருக்கிற மாதிரி குறைந்தபட்ச அளவிலேயும் வித்தியாசமுண்டு. இந்த இரண்டு நிலைகளுக்குமுள்ள வேறுபாடுகள் அதிகமாகி உச்சநிலைக்குப் போகிறப்பதான் கரையில வந்து மோதற. அல்லது சிறு கரைப் பிரிவுகளில் உட்புகுகிற அலைகளோட வேகமும், பலமும் அதிகமாகும். இதனால தான் மீனவர்கள் வலை விரிக்கிறப்ப இதையெல்லாம் கவனிப்பாங்க. இல்லேன்னு அலைகளோட வேகம் எல்லாத்தையும் அறுத்துட்டு அடிச்சுட்டுப் போயிடும்.

இன்னொரு சுவாரஸ்யமான விவரம் தெரியுமா? ஒரு நாள் அலைகளோட தாக்கம் குறைவா (அதாவது Low tide அதிகமா) இருக்கிற நேரம் காலை 4.45 மணின்னு வை. இதே நிலை அடுத்த நாள் 5.30 மணிக்குத் தான் இருக்கும். அதற்கடுத்த நாள் இன்னும் கொஞ்சம் தள்ளிப் போகும், 40லிருந்து 50 நிமிஷம்வரை. அட! அப்படியான்னு ஆச்சரியமா இருக்கில்லையா பிந்து? இப்படி தினமும் மாறிட்டே இருக்கிற — அதுவும் இதே போல 40 நிமிஷத்திலேருந்து 50 நிமிஷம் வரை — இன்னொரு விஷயமும் இருக்கு. சந்திரோதயமும் இப்படித்தான். அப்ப நிலாவுக்கும் அலைகளுக்கும் தொடர்பு இருக்குமோன்னு யோசிக்கிறயோ? கரெக்ட். இருக்கு.

நான் முன்னமே சொன்ன மாதிரி கடல்ல அலைகள் அதிக ஆர்ப்பரிப்பா இருக்கிறது. அலைகளோட வீர்யமும், தாக்கமும் அதிகமா இருக்கிறது. பௌர்ணமிக்கும் முதல் பிறை நிலா வர்ற அன்னைக்கும்தான். இந்த நாட்கள்லே பெரும்பாலும் யாரும் கடல்ல மீன் பிடிக்கவோ, நீச்சலுக்குப் போகவோ மாட்

டாங்க. கடற் கரையில சுகமா உட்கார்ந்துட்டு அந்த ஆவேச ஆர்ப்பரிப்பையே ரசிச்சு அனுபவிப்பதோட சரி.

மற்ற கிரகங்களுக்கும், நம்ம பூமிக்கும் எப்படி ஆகர்ஷண சக்தி இருக்கோ, அது மாதிரி சக்தி நிலாவுக்கும் உண்டு. பூமியை நிலா சுத்திட்டு வர்ற சமயத்தில நிலாவோட இந்த ஆகர்ஷண சக்தி (நிடப் பரப்பா இருக்கிற நிலத்தில் ஏற்படுத்தற பாதிப்பைவிட, இப்படி இல்லாம இருக்கிற) கடல் பகுதியை இழுக்கும்போது ஏற்படற விளைவுகள்தான் இந்த அலைகள். இப்ப ஏன் High tide அல்லது Low tide ஏற்படற நேரமும் சந்திரோதயத்தைப் போல ஒவ்வொரு நாளும் தள்ளிட்டே போறதுன்னு உனக்குப் புரியலாம்.

பூமியும் நிலாவும் ஒரே வேகத்தில சுத்தற தில்லே. அதனால்தான் 'அதிகப்பட்ச' அலைகள் ஏற்படற நேரமும் சரி, சந்திரோதயமும் சரி, ஒவ்வொரு நாளும் தள்ளிட்டே போகுது.

இப்ப இதிலே ஒரு சின்னப் பிரச்னே. மேலே சொன்னபடி பார்த்தா 'அதிகப்பட்சமா' அலைகள் ஏற்படறது ஒரு நாளைக்கு ஒரு தடவைதான் இருக்கணுமில்லேயா? ஆனா அப்படி இல்லே. கிட்டத்தட்ட ஒரே நாளில் இரண்டு தடவை 'அதிகப்பட்ச' அலைகள் ஏற்படுது. இந்த இரண்டாவது தடவை எப்போன்னு ஒரு இடத்தில் நின்னுட்டு ஓர் ஆள் அலைகளைக் கவனிக்கறப்போ, பூமியில அந்த ஆள் இருக்கிற இடம் நிலாவுக்கு நேர் எதிரே 180 டிகிரி கோணத்தில இருக்கிறப்பதான். விநோதமா இல்லேயா இது? இதுக்கு நிபுணர்கள் என்ன சொல்றாங்களாம்? ''இந்த அலைகளோட காரண காரியங்களை வெறும் ஆகர்ஷண சக்தி என்கிற ஒரு விஷயத்தை வச்சு மட்டும் சொல்ல முடியாது.''

வேடிக்கையா வேறு ஒரு விளக்கமும் சொல்றாங்க. அலைகள் ஏற்படறதைப் பத்தி. பூமியும் நிலாவும் ஒண்ணையொண்ணு ஆகர்ஷிச்சிட்டு சுத்தறது, கைகளைப் புடிச்சுட்டு டான்ஸ் ஆடறவங்க சுத்தற மாதிரின்னு. இப்படிச் சுத்தற வேகத்தில கடல்ல அலைகள் வெளி எழும்பி அடங்குகிறதாம். வேகமாப் போற கார்ல நாம இருந்தா கார் திருப்பத்தில திரும்பறப்ப நம்ம உடம்பு திருப்பத்துக்கு வெளிப் பக்கமா நம்மைஅழுத்தற மாதிரி இருக்கில்லேயா? அது போல நிலாவும் பூமியும் சுத்தறப்ப பூமியில் இருக்கிற கடல்லே இருந்து அலைகள் வெளிப் பக்கமா உந்திட்டு எழும்பறது.

விஞ்ஞானப் பக்கங்கள்...

சரி பிந்து அடுத்த தடவை பீச்சுக்குப் போறப்ப இதையெல்லாம் நினைச்சுக்க.... (ம்ஹூம்! நீ நினைப்பேன்னு தோணலே. அலைகள் ஓய்வதில்லேதான் உன் நினைவுக்கு வரும். இதெல்லாம் வராது.) இப்படிச் சீறி ஆர்ப்பரிக்கிற அலைகளுக்குப் பின்னால இவ்வளவு விஷயம் இருக்கிறதை சார்லி, பிரபு, ஜானிக்குச் சொல்லு. அப்புறம்....

கோபமா இருக்கிற அக்காவை லெட்டர் போட வையேன். உன் மாமா பாபு

— பாக்கியம் துரைசாமி

அலை ஓசை-II

பொதுவாக நாலு விதமான அடிப்படை ஒலிகள் இயற்கையாய் உருவாகின்றன. நெல் மணிகளைத் தெளிப்பது போன்ற மழைச் சப்தம், ஒருபுறம் தென்றலாய் இசைத்து மறுபுறம் பேய்க் கூச்சலோடு உயிர்களைப் பலிகொள்ளும் காற்றின் சப்தம். அர்ச்சுனன் அண்ட பிரதர்ளைத் துயிலைக்கழைக்க வைக்கும் இடியோசை. நான்காவது அலையோசை.

இந்த அலையானது பல குரல் மன்னன். மழை, காற்று, இடி ஓசைகளையும் தானே எழுப்பவல்லது. ஓசை எழுப்புவதில் அஷ்டாவதானி. காது கொடுத்துக் கேளுங்களேன்.

சின்ன மூணு மூணுப்பாய் ரகசியம் சொல்கிறது. கரைக்கு வந்து வந்து தேடி அலுத்து ஏமாந்த அலைகள் இரவு ஆகஆக பாம்பாய்ச் சீற ஆரம்பிக்கிறது. சிதறும் அலைகள் ஜலதரங்கம் இசைக்கின்றன. ஒருபுறம் ஜேம்ஸ் பாண்ட் படங்களை மிஞ்சும் துப்பாக்கிச் சப்தங்கள். இன்னொரு புறம்' ஆர்ப்பரித்து எழும் பெரிய அலை கீழே விழும்போது எழும் டிரம்ஸ் இசை ஒலிபிலாவை நினைவுறுத்தவில்லே? சீரான லயத்துடன் மத்தள ஓசை.


நேரத்துக்கு நேரம் புதிய அலைகள். புதிய ஓசைகள். உணர்ச்சிக்கேற்ப ஓசையை மாற்றிக்கொள்ளும் 'ஸ்டைல்' அலைகள். கோபம் வந்தால் உயர்ந்து தூரத்து இடியாய் முழங்கும். அடுத்த மணியில் நளினமாக. உடனே கவலையோடு ஜோவென்று மணலை இழுக்கிற சப்தம். பிறகு ராகத்தோடும் தாளத்தோடும் லயமான மெட்டோடும் பாட்டிசைக்கும் அலைகள். தனிமையான இரவில் பயமுறுத்தும் த்ரிட்சாக பட பின்னணி இசை.

அலைகளின் ஓசை அடங்காத ஓசை. குரலில் ஏற்ற இறக்கம் இருந்தாலும் நிற்காத இசை. நிமிடத்துக்கு நிமிடம் புதுப் புது ஓசைகளை எழுப்பும் அலைகளைக் கவனித்தால் கற்பனைக்கடங்காத இசைகள் புலப்படும். அதோ அந்த அலை ரகசியக் குரலில் அழைக்கிறது. போய்க் கேட்டுத்தான் பாருங்களேன்.

—நளினி சாஸ்திரி

புகைப்படம்: (கோவளம் கடற்கரை)

—எம். நடராஜன்



மொபைல்....
மொபைல் போலீஸ் ஸ்டேஷன்கள் சென்னையில் இயங்கப் போகின்றன!
காவல் நிலையம்
மொபைல் போலீஸ் ஸ்டேஷன்
''நட போலீஸ் ஸ்டேஷனுக்கு!''
''நான் ஏன் நடக்கணும்? மொபைல் போலீஸ் டேசன் ஒதே... அதைக் கொண்டா இங்கே!''
''ம்....ம்.... சீக்கிரம் ஏறுங்க.... மோபைல் ஸ்டேஷன்லே!... இந்த ரெண்டிப் பசங்க கடத்திக்கிட்டுப்போயிருக்கிற மோபைல் போலீஸ் ஸ்டேஷனைத் துரத்திக் கண்டு பிடிக்கணும்!''
மொபைல் போலீஸ் ஸ்டேஷன்
ஸ்டால்
''இன்னுது..... தொரைங்கள்ளாம் கஸ்டப்படுது! ஆளுக்கொரு பன், டீ, சாப்டுட்டு தள்ளிகினு போகலாம். துட்டு நான்தரேன்!..பாவமாகீது!''
''உனக்குச் சௌகரியமாப் போச்சு! கம்ப்ளெய்ன்ட் கொடுக்கப் போலீஸ் ஸ்டேஷன் போய் அலைய வேணும்! நம்மகிட்டயே குடுத்துடு!''
காவல் நிலை
மொபைல் போலீஸ் ஸ்டேஷன்
''சார்! என்னே மொபைல் ஸ்டேஷன்லே நிடி போட்டுடுங்க! என் பையனைக் காணல்லே! அப்படியே அவனையும் தேடிக்குவேன்!''


மொபைல்!
இப்படியும் சில மொபைல்கள்!
மொபைல் டுடோரியல் காலேஜ்
''பையன் ஊர் சுத்தறான்னு கவலைப் படவேணாம்!... ஊர் சுத்திக்கிட்டே படிச்சுப் பாஸ் பண்ணலாம்!''
மொபைல் ஹவுஸ்
''ஒரு கிச்சன், பாத்ரூம், ரெண்டு பெட்ரூம், ஒரு டைனிங் ஹால் மேலே டெர்ரஸ், ஒரு ட்ரெய்லர் வாங்கிக்குடக் கூலிக்கு விடலாம்!... மொபைல் ஹவுஸ் ஸார்!''
மொபைல் வோட்டுச்சாவடி
''மொபைல் போலிங் பூத் வந்தாலும் வந்துச்சு.... எலக்ஷன் சவாரியே பூட்சே!''
''நம்ம பொளப்புலே மண்ணு!''
மொபைல் சேம்பர்
''மொபைல் கோர்ட் ஆச்சு...மொபைல் போலீஸ் ஸ்டேஷன் ஆச்சு.. வக்கீல்களுக்கு மொபைல் சேம்பர்!''
மொபைல் ஜெய்ல்
''படா ஷோக் வாத்தியாரே! இப்படியே வேலூர் பக்கம் போ சாரு... நம்பமச்சான் அங்கதான் ரெண்டு வருசமா இருக்காரு! அப்படியே திருச்சி போனு... நம்ம மாமனைப் பாத்துட்டு அப்படியே கோயமுத்தூர் போயி....''

கவர்ச்சிகள்

கிருஷ்ணமணி

முன்கதை

இது ஒரு விளம்பரக் கம்பெனி. உரிமையாளர் ராமநாராயணன் சிறு வயதில் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காதவர். அல்லல் பட்டு, மனிதர்களின், வாழ்க்கையின் இயல்பைப் புரிந்து கொண்டு, படிப்படியாக முன்னேறி, இன்று 'மல்டி மில்லியனர்'.

ஹிரண்மயி, முரளி இவர்களிருவரும் 'கவர்ச்சிகள்' நிறுவனத்தில் வேலை பார்ப்பவர்கள். முரளி அவளைக் காதலிக்கிறான். அவள் அழகி. வங்காளிப் பெண். ராமநாராயணனின் மகன் சுரேஷ். செல்வந்தனுக்குரிய குணநலன்கள் அமையப்பெற்றவன். திருமணமாகியிருந்த போதிலும், ஹில்டா ஜான்ஸன் என்ற பெண்ணைத்தன் ஆசை நாயகியாக வைத்திருப்பவன்.

ராஜாமணி சர்க்கார் காரியாலயம் ஒன்றில் குமாஸ்தாவாக வேலை பார்ப்பவன். சித்ரலேகா என்னும் பெண் அவனுடன் வேலை பார்ப்பவள். அவள் இலாகா தேர்வில் வெற்றி பெற்று, சூபரின்டென்டெண்ட் ஆகப்பதவி உயர்வு பெறுகிறாள். ராஜாமணி ஓர் அறிவு ஜீவி. சித்ரலேகா அவனிடம் மனத்தைப் பறி கொடுக்கிறாள்.

பம்பாய் ஸேட் ஒருவரின் மூலம் தம் நிறுவனத்திற்குப் பல லட்ச ரூபாய் விளம்பரம் மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்பிருப்பதை அடைய, ராமநாராயணன், தம் ஆபீஸ் கேஷியர் குப்புசாமி என்பவரின் துணையோடு ஹிரண்மயியை அந்த ஸேட்டின் இச்சைக்குப் பலியாக்குகிறார். இதை ஹிரண்மயி முரளியிடம் துக்கம் பொங்கத் தெரிவித்து, அவர்களிருவரின் காதல் அஸ்தமித்துப் போக வேண்டிய கட்டாயத்தையும் சொல்கிறாள்.

ஹில்டா ஜான்ஸன் கருவுற்றிருக்கிறாள். சுரேஷ் அதை அழித்துவிடும்படி சொல்கிறான். பணம் தருவதாக ஆசைகாட்டுகிறான். சிசுவைத் தான் எக்காரணம் கொண்டும் அழிக்க முடியாது என்று கூறுகிறாள் ஹில்டா ஜான்ஸன்.

ஹில்டாவைத் தூண்டிவிட்டு, தனக்கு இழைக்கப் பட்ட அநீதிக்குப் பழிவாங்க நினைக்கிறான் முரளி. ஆனால் ஹில்டா வேலையை ராஜிநாமா செய்யப் போவதாகக் கூறுகிறாள்.

ராமநாராயணன் குப்புசாமியின் வாயிலாக ஹில்டா-சுரேஷ் அசம்பாவிதத்தைச் சமாளிக்க முயல்கிறார். குப்புசாமி ஐயாயிரம் ரூபாய் பணத்துடன் அந்த வேலையை முடிக்கக் கிளம்புகிறார்.

முரளி ஹிரண்மயியினால் ஏற்பட்ட மனச் சங்கடத்தில் வேலையை ராஜிநாமா செய்ய ராம்நாராயணன் அறைக்கு விரைகிறான்.

இனி, மேலே கதையைத் தொடரலாம்.

21

அந்த அரசாங்க அலுவலகத்தில் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. காரணமிருந்தது. பலரும் கூடிக் கூடிப் பேசினர். ராஜாமணியை அவனுடைய சகா ராவ் சமிக்ஞை காட்டி அழைத்தான். ராஜாமணி பேசாமல் எழுந்து வெளியே சென்றான்.

ராவ் பேச்சைத் துவங்கினான்: ''சேதி தெரியுமா? ஓர்க்ஸ் செக்ஷன் நிர்மலா, அந்த சுகுமாரை லவ் பண்றாளாம்.''

''ஓஹோ!''

''ஓஹோ, என்ன ஓஹோ! இப்ப அவ மூணு மாசம் முழுகல்லியாம்!''

''போடா! வேற பேச்சே கிடையாதா?''

''ஃபூல்! சொல்றதைக் கேளுடா! அவன் ஏற்கனவே கல்யாணமாகி மூணு குழந்தை பெத்தவன்.''

''அவளுக்கும் அது தெரியுமோன்னோ?''

''ம்... தெரியாம! ரெம்ப அன்பாப் பழகினாளும். சினிமா, பீச்சுன்னு அழைச்சிக்கிட்டுப் போயிருக்கான். வெறும் பேச்சுன்னு ஆரம்பிச்சு விஷயம் இப்படி ஆகிவிட்டது. கர்மம்... இதுகளெல்லாம் ஏன்தான் ஆபீஸுக்கு வருதோ!''

''ஷட் அப் மேன்! பிறத்தியாருடைய பெர்ஸனல் லைஃபைப் பத்திச் சொல்றதுக்கு உனக்கு என்ன உரிமை இருக்கு? டேய் ராவ் உன்னைக் கேக்கிறேன்டா! சத்தியமாகச் சொல்லணும். அதே நிர்மலா அவன் கிட்ட பழகினதுக்குப் பதிலா உன்கிட்டப் பழகியிருந்தாள்னு வச்சுக்க. நீ என்னடா செஞ்சிருப்பே? என்கிட்டே பேசாதேன்னு சொல்லிடுவியோ? ஒவ்வொருத்தனும் எந்தப் பெண்ணும் மத்தவன் கிட்டப் பழகினா அவளை நடத்தை கெட்டவள்னு சொல்லத் தயாரா இருக்கான். தன்கிட்டப் பழகறச்சே மட்டும் அவ சீதையாகவும் நளாயினியாகவும் மாறிடுவா! போடா! பெரிசாச் சொல்ல வந்துட்டான்!'' என்றான்.

''சுகுமாரனுக்கு வரும்படி போறலே! இவளையும் வலைச்சுப்போட்டா மாசம்கூட அறுநூத்தைம்பது ரூபாய் கிடைக்கும். அதனால தான் அவ தன்னை மீறிப் போகாம இருக்க குழந்தை கொடுத்திட்டான்! சரியான ஆள் தான்.''

''ராவ்! இந்த மாதிரியெல்லாம் பேசாதே. வாழ்க்கையிலே இரண்டு மனித உள்ளங்களிலே எப்படிப் பிணைப்பு ஏற்படறதுன்னு சொல்ல முடியறதில்லே. காரண காரியம் பார்த்தோ, லாப நஷ்டம் பார்த்தோ இதெல்லாம் ஏற்படறதில்லே. ஒரு விபத்து மாதிரி நிகழ்ந்து போறது. அவளுக்குப் பிடிச்ச பண்புகள் அவன் கிட்டே இருக்கலாம். அவனோட மனசை அறிஞ்சு அவன் நடந்திருக்கலாம். இல்லேனா மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனை ஒருத்தன் கிட்டே திருமணம் ஆகாத ஒருத்தி, அதுவும் தன் வாழ்க்கைக்கு யாரையும் சார்ந்து நிற்க வேண்டிய கட்டாயமில்லாத ஒருத்தி, மனசைப் பறி கொடுத்திருக்கான்னு சொன்னா அதிலே அவளுக்கு ஒரு வித கவர்ச்சி ஏற்பட்டிருக்குதுன்னுதான் அர்த்தம். இது அந்த ரெண்டு பேரோட தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்னை. இந்தப் பிரச்னையை எதிர்நோக்கிச் சமாளிக்கிறது அவங்க சாமர்த்தியம். இதிலே அவங்களைப் பத்தின அபிப்பிராயம் சொல்றதே சரியில்லேன்னுதான் சொல்லுவேன்.''

''அதில்லே ராஜாமணி! அவங்க ரெண்டு பேரும் சட்டப்படி புருஷன் மனைவியா வாழ முடியாதே?''





"சட்டமும் சம்பிரதாயங்களும்தான் வாழ்க்கையா? இல்லேடா. அதுகளெல்லாம் வாழ்க்கைக்குத் துணைதான். மனித மனசு தான் வாழ்க்கைக்கு அடிப்படை. திருமணம் செஞ்சுக்காமலே அவங்க புருஷன் மனைவியா வாழக் கூடும். திருமணம்கிறது கூட ஒரு சடங்குதானே. அந்தச் சடங்கு அவங்களைப் பொறுத்தவரை தேவையில்லாத ஒண்ணாப் போயிட்டது."

"பேஷ்! நீ எதுக்கெடுத்தாலும் ஒரு வாதிக் சொல்லுவியே!"

"மண்டு! இப்ப இருக்கிற சமுதாயத்திலே இதெல்லாம் ஏற்படறது சகஜம். இந்த மாதிரி காலம் காலமா ஏற்பட்டுக்கிட்டுத் தானிருக்கு. நம்ம கண் முன்னால நடக்கிற தினாலே நமக்குத் தெரியுது. அதிசயமா இருக்கு. பட் திஸ் இஸ் ப்யூர்லி தெயர் பெர்சனல் மேட்டர்...."

"இருக்கலாம். அதனால சமுதாயம் அவங்களைப் பத்திப் பேசாமல் இருக்கணும்கிறது என்ன நியாயம்? சமுதாயத்தோட சம்பிர தாயங்களை மீறி நடக்கறவங்களை விமரிசனம் செய்யறது தப்பா? சொல்லப்போனா அந்த மாதிரி ஆட்களை பகிஷ்காரம் செய்யறது கூட தப்பில்லேன்னேன்" என்றான் ராம்.

"பேஷ்! சமுதாயத்தோட ஆத்மக் குரல் உன்னுடையதுதான்டா. ஏன்டா நீ சொல்கிற சமுதாயம் ஒரு பெண் ஒரு ஆணைத் திருமணம் செஞ்சிக்கணும்னு வரதட்சிணை, நகை, பந்தல், மேளம், ஜானவாசத்துக்குக் கார் செலவு, ஊரைக் கூட்டிச் சோறு போடற செலவு இதையெல்லாம் எத்துக் கணும்னு சொல்றதை ஒத்துக்கினதாத்

தெரியலையே. சாதாரணக் கல்யாணத்துக்கே முப்பது நாப்பதாயிரம் ரூபா செலவு பண்ண வேண்டியிருக்கே. எத்தனை பெண்களுக்கு இந்த மாதிரி சோஷல் அனக்ரானிஸத்திலே கல்யாணம் ஆகாம இருக்கு. தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு எந்த விதமான ஒத்தாசையும் செய்யாத சமுதாயத்தைச் சில பெண்கள் தைரியமா ஒதுக்கித் தள்ளுவாங்க. தே டோன்ட் கேர் ஃபார் யுவர் ப்ளடி சொஸைட்டி! நீங்க என்னடா அவாளைப் பகிஷ்காரம் பண்றது? அவாதான் உங்களைச் சட்டை பண்ணலியே. கூடிக் கூடிப் பேசுவீங்க. இளிச்சுப்பீங்க.

நாளாவட்டத்திலே பழகிப் போயிடும். உங்களுக்கும் அவாளுக்கும்தான். போடா! பெரிசாப் பேச வந்துட்டே!'' என்றான் ராஜாமணி.

ராஜன் பேச முடியவில்லை. ராஜாமணி சொல்வதில் இருந்த உண்மை அவனை உறுத்தியது. அவனுடைய தந்தை, மகள் கல்யாணத்துக்காகப் பட்ட கடனை இவன் இன்னமும் அடைத்துக் கொண்டிருந்தான். இருந்தாலும் தன் தோல்வியை ஒப்புக்கொள்ளாதவன் போலப் பேசினான்: ''ஸோ! ஆபீஸ்லே உத்தியோகம் பார்க்க வரேன்னுட்டு புருஷனைத் தேடிக்கிறதா?''

''யெஸ்! இட் இஸ் எ நெஸஸிட்டி. ஆண் பெண் சிநேகத்தையே கொச்சைப்படுத்திட்டோம் நம்ம நாட்டிலே. ஒரு ஆணும் பெண்ணும் மனம் விட்டுப் பழகி நண்பர்களாகவே இருக்க முடியாதுங்கறது நம்முடைய சித்தாந்தமாப் போயிட்டது. அதுக்கு அடிப்படையா உடலுறவு இருக்கணும். சில சந்தர்ப்பங்களிலே அப்படியும் ஏற்பட்டுப் போறது. இப்போ நீ சொன்ன நிர்மலா—சுகுமாரன் விஷயத்திலே நடந்ததுன்னு சொன்ன மாதிரி அதிலே கூடத் தப்பிருக்கிறதா எனக்குப் படல்லே. பயலாஜிகல் நெஸஸிடி. ஒரு சந்தர்ப்பத்திலே ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்பட்டுப் போறது. போகட்டுமே. அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை யொருத்தர் மனசார நேசிக்கும்போது நமக்கென்னடா வயத்தெரிச்சல்!''

''இந்த நாட்டிலேதாண்டா ராஜாமணி ஸ்ரீராமனும் சீதையும் வாழ்ந்தாங்கன்னு கேள்விப்பட்டிருக்கோம். பெண்களுக்குக் கற்பு தேவையில்லையா? சினிமாக்காரி போல சமுசாரிப் பெண்களும்...''

''நிறுத்துடா! என்னடா உளர்றே! நானே ஒருத்தியை, வேலை பார்க்கிற பொம்பிளை ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கிறேனு வச்சிப்போம். தினம் பொழுது விடிஞ்சா அவ ஆபீசுக்குப் போக வேண்டியிருக்கும். பஸ்ஸிலே ஏறும்போதும் இறங்கும்போதும் ஜன நெரிசல்லே அவளும் சிக்கித் துவையலா போகத்தான் வேணும். எந்த ஆடவனோட உடம்போட ஸ்பரிசமும் தன் மீது படக் கூடாதுன்னு நினைச்சால் தினம் அவ ஆட்டோவிலோ டாக்சியிலோதான் போகணும். அது முடியாத காரியம். இன்னிக்கு எத்தனை ஆம்பிளை கை உன் மேலே பட்டுதுன்னு நான் கேட்க முடியுமா? இல்லே பஸ்லே போய் வர பொம்பளைங்க அத்தனை பேரும் கற்பிழந்தவங்கன்னு சொல்லிட முடியுமா? ஜமதக்னி முனிவர் தன் பெண்டாட்டி கந்தர்வன் ஒருத்தனோட உருவத்தைத் தண்ணிலே தெரிஞ்ச பிரதிபலிப்பிலே கண்டு வியந்தாள்னு தன் பிள்ளை பரசுராமனைக் கொண்டு தலையைச் சீவினாராம். இன்னிக்கு அந்த மாதிரி ஆரம்பிச்சால் மெட்ராஸ்லே நூறு பொம்பளை தேற மாட்டா. என்னு இப்போ சீதாபிராட்டிகளும் இல்லே, ஸ்ரீராமன்களும் இல்லே. காலத்தோட விசையான போக்குக்கு ஏத்தாப்பலே நாமும் நம்முடைய மனு தர்மங்களை மாத்திக்



கதா பிரசங்கம் சாம்பசிவன்

கதா காலட்சேபம் மலையாள மொழியில் செய்கிறார் சாம்பசிவன். ராமாயணமோ, பாரதமோ இல்லை. கிளியோபாட்ரா, ஒத்தெல்லோ போன்ற ஷேக்ஸ்பியர் கதைகள், டால்ஸ்டாயின் அன்னு கரினினு, விமல் மித்ரா, வள்ளத்தோள், பொற்றேகாட்டின் கதைகள் முதலியன!

''கீழ்மட்டத்தில் படிக்காதவர்கள் அதிகம் பேர். அவர்களுக்குப் புரியும் விதமாகப் பெரிய, புதிய, நல்ல விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டேன். சொல்கிறேன்.'' என்கிறார்.

ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள். நூறு, ஐம்பது என்று கட்டணம் செலுத்தி பலர் இவருடைய கதாப்பிரசங்கங்களைக்கேட்கிறார்கள். 'டேப்' செய்து கொண்டு போகிறார்கள்.

எமர்ஜன்ஸியின்போது, 'இருபதாம் நூற்றாண்டு' பிரசங்கம் நடத்தினார். இந்த அரசியல் சடையர், அப்போதைய உள்துறை அமைச்சர் திரு கருணாகரன் நேரே வந்து கேட்கும் அளவு பிரபலமானது. விளைவு? ''சாம்பசிவன் நன்றாகவே கதை சொல்கிறார். ஆனால் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல'' என்று சொல்லித் திருவனந்தபுரம் பூஜப்புரா சிறைக்குப் பத்து மாதம் அனுப்பி விட்டார்கள்.

ஐம்பது வயதைக் கடந்த இவருக்குத் தலையில் ஒரு முடிகூடக் கிடையாது. மேடையில் 'விக்' வைத்துக் கொள்வார்.

-தி. சு. இளஞ்செழியன்



அருள்மிகு

சுப்ரமண்யசுவாமி

திருக்கோயில்

திருத்தணிகை

ஆடி பரணி 11-8-82

ஆடிக் கிருத்திகை 12-8-82

தெப்பல் திருவிழா

12-8-82 முதல் 14-8-82 வரை

சிறப்பு இன்னிசை நிகழ்ச்சிகள்

12-8-82 முதல் நாள்	தெப்பம்	திருப்பாம்பரம் சகோதரர்கள், தமிழ்நாடு அரசவை கலைஞர்கள், திரு டி. கே. எஸ். சுவாமிநாதன், திரு டி. கே. எஸ். மீனாட்சிசுந்தரம் நாதசுரம் தவுலிசைச் செல்வர் கீழ்வேளூர் திரு கே. ஆர். கோவிந்தராஜன் தனித்தவுல்
13-8-82 இரண்டாம் நாள்	தெப்பம்	இசைப் பேரறிஞர், கலைமாமணி டாக்டர் மதுரை சோமசுந்தரம் குழுவினர் இன்னிசை
14-8-82 மூன்றும் நாள்	தெப்பம்	ஏழிசை ஏந்தல், திரை இசை மன்னர் கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன் வயலினிசை

அனைவரும் வருக — அருள் பெற்றுச் செல்க

து. நாகராஜன் பி.எஸ்.ஸி.
உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி

பி. ஜோதி
அறங்காவலர் குழுத்தலைவர்

அறங்காவலர்கள்

எஸ். சண்முகம்
எம். முனுசாமி

இராஜகோபால்
கே. கிருஷ்ணன்

கிறேம். இல்லேன்னு வாழ்க்கை நரகமாப் போயிடும். புரிஞ்சுதாடா. நீ ஸ்ரீராமனு இருக்கத் தயாரா யிருக்கியா? நிச்சயம் உன் மனைவி சீதாபிராட்டியா இருப்பா! கற்புங்கிறதே ரெண்டு பேருக்குமே பொதுவானதுதான்டா! பொம்பளைக்கு மட்டும் அது பொருந்தும், ஆணுக்குக் கிடையாதோ? சொல்லேன்டா!''

''ஆண் கெட்டுப் போனால் தெரியாதுடா! பொம்பிளை விஷயம் அப்படி இல்லையே!''

''என்னைப் பொறுத்தவரைக்கும் நிர்மலா கெட்டுப்போனவ இல்லே. அவ தன் வாழ்க்கைக்குத் துணைவனைத் தேடினா. அவ இன்னொருத்தியோட புருஷனை வரிச்சது சரியில்லேன்னு சொன்னாகூட, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு அவ ஆளாகிட்டான்னு பார்க்கும் போது அதுவும் மன்னிக்கக் கூடியதுதான். ஏன்னா சுகுமாரனோட வருமானத்தினாலதான் இவ பிழைக்கணும்கிறது இல்லே. அதனால அவனோட முதல் மனைவியோட பொருளாதார உரிமையை இவ தட்டிப் பறிக்கல்லே. சுகுமாரன்கிற ஆடவனோட உடம்புக்கும் உள்ளத்துக்கும் பங்கு கேட்கிறா. இது பெரிய தப்பில்லை. அவனோடமுதல் மனைவியும், தனக்கும் தன் குழந்தைகளுக்கும் வாழ்க்கைக்கு வேண்டியதுகள் கிடைக்கும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டதினாலே இதுக்கு முதல்லே மறுப்புச் சொல்லி யிருந்தாலும் இப்போ போகட்டும் போன்னு சமரசம்செய்துக்குவா. இதையே அவன் திருட்டுத்தனமாச் செஞ்சிருக்கலாம். நிர்மலாவும் வெறும் உடலுறவுக்கு மட்டும் ஆசைப்பட்டிருந்தா கருத்தரிக்கிறதைத் தவிர்த்திருக்கலாம். நீ சொன்னியே கற்பு அது தடுப்பு முறைகள் கண்டு பிடிக்கப்பட்ட நாளிருந்தே தன்னோட முக்கியத்துவத்தை இழந்துட்டதுங்கிறதை தெரிஞ்சுக்கோ. நௌ இட் இஸ் எ டிஃபரண்ட் கன்ஸெப்ஷன். புரிஞ்சுதா. சரி சரி நான் என் சீட்டுக்குப் போறேன். தீர யோசனை செஞ்சு பாரு!'' என்று சொல்லிப் போனான்.


ரால் வாயடைத்துப் போனான். ராஜாமணியுடன் இன்னும் சிறிது நேரம் பேசினால் தானும் சுகுமாரனைப் போல வேறொருத்தியைத் தன் இரண்டாம் மனைவியாக்கிக் கொள்ள ஆசைப்பட நேரிடும் போல் தோன்றியது! உள்ளூர அத்தகு எண்ணமே ஆண்களுக்கு ஒரு மகிழ்ச்சியைத் தோற்றுவிப்பது போல் அவனுக்குத் தோன்றியது. தன்னுடைய ஆண்மையின் செருக்கினால்தான் ஒவ்வொருவனும் அவ்விதம் எண்ணுகிறானோ இல்லை பெண்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு இவ்விதம் செயல்படுகிறானோ? ராஜாமணி சொன்னது போல நிர்மலா. கெட்டுப் போனவள் இல்லைதான். இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அவள் கருவைச் சிதைத்திருக்கலாம். மாறாக, ஒரு தீவிரமான போக்கோடு சமுதாயத்தின் ஏச்சையும், பேச்சையும் பொருட்படுத்தாது தன் பெண்மையின் பூரணத்துவத்தை மிகுந்த மனோ திடத்துடன் ஏற்றுக் கொண்டு தன்னைப் போன்ற பெண்களின் வாழ்க்கைக்கு வழி காண இயலாத சமுதாயத்தைச் சவாலுக்கு அழைப்பது போன்று அவள் செய்கை இருப்பதாக இப்போது அவன் மனத்தில் பட்டது.

(தொடரும்)

இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வழியே வந்தவர்:
''என்னப்பா சண்டை?''
ஒரு ஆள்: ''எங்களுக்குள் ஆயிரம் இருக்கும்.''
வந்தவர்: ''ஆளுக்கு ஐந்நூறு எடுத்துக்க வேண்டியதுதானே! எதுக்காகச் சண்டை?''

—அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் சொன்ன ஜோக்





உலக சாதனைகள்பற்றிய தொகுப்பான ''கின்னஸ் புக் ஆஃப் வோர்ல்டு ரெகார்டில்'' வீரமணியின் பெயர் இடம் பெற்றால் என்ன?
எப்படி?
பாவம்! மனிதர் சளைக்காமல் ஒரு குறிப்பிட்ட இனத்தாரைத் தாக்கிக் கொண்டே இருக்கிறாரே! சாதனைதானே அது?

—மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனில் இருவர் பேசிக்கொண்டது.

இலவசம்!! அரிய வாய்ப்பு!!

ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் இலவசம்!

ரூ. 250—ஐ எம்மிடம் 3 ஆண்டுகளுக்கு நியாயமான வட்டிக்கு முதலீடு செய்பவர்களுக்கு (இந்தியாவில் உள்ளவர்களுக்கு மட்டும்) ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக உடனடியாக அனுப்பிவைக்கப்படும். முழு விவரங்களுக்கும், விலைப் பட்டியலுக்கும், விண்ணப்பத் தாளுக்கும் எழுதுக.

பயன்தரும் லிப்கோ புத்தகங்களில் சில :

	ரூ. காசு
1. பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்	15-00
2. நாமக்கல் கவிஞர் பாடல்கள்	9-25
3. என்ன செய்யப் போகிறீர்கள்?	3-00
4. மஹாத்மாவின் மஹத்வம்	3-00
5. இயேசுவின் இதயம்	2-50
6. வள்ளுவர் வாய்மொழி — குறள் மூலம்	1-50
7. உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும்	3-00
8. உடல் மச்சங்களும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2-00
9. ஆங்கில ஆசிரியன்	12-00
10. குழந்தைக்குப் பெயரிடுதலும் சீராட்டுதலும்	1-30
11. குழந்தை வளர்ப்புக் கலை	5-00
12. சமைப்பது எப்படி?	4-00
13. இந்தி ஆசிரியன்	5-80
14. ஸுந்தர காண்டம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	14-00
15. ஸுந்தர காண்டம் — மூலம் தமிழில்	5-60
16. ஸுந்தர காண்டம் — ஸ்ரீ C.R.S. தமிழ் மொழிபெயர்ப்பு	16-50
17. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் ஸ்ரீமத் திராவிட வேதங்களும் (ஸ்தோத்ரமாலையுடன்)	9-50
18. ஸ்தோத்ரமாலை	3-00
19. கம்ப ராமாயணம் — வசனம்	9-50
20. ரகுவம்ச மஹாகாவ்யம் 1-19 ஸர்க்கங்கள் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்-உரையுடன்	55-00
21. ஸ்ரீமத் பகவத் கீதை — மூலம் தமிழில் — உரையுடன்	8-00
22. ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரமாலா — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் — உரையுடன்	60-00
23. மாங்கள்ய ஸ்தவம்	1-50

	ரூ. காசு
24. ஸ்ரீலக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1-50
25. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் (அர்த்தத்துடன்)	10-00
26. பஞ்ச ஸூக்தங்கள்	0-80
27. ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0-60
28. ஸ்ரீ முகுந்தமாலா	1-50
29. பஜ கோவிந்தம்	1-25
30. கௌரீ கல்யாணம் வைபோகமே	7-20
31. அபிராமி அந்தாதி — மூலமும் உரையும்	2-00
32. ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ — மூலமும் உரையும்	2-90
33. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	4-50
34. பெரிய புராணம் (சுருக்கம்)	1-50
35. திருவிளையாடற் புராணம் (சுருக்கம்)	1-50
36. ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7-50
37. ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1-20
38. ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0-90
39. நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	6-60
40. திருப்புகழ் மஞ்சரி	2-00
41. ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள்	7-50
42. இயற்கை தரும் இன்மருந்துகள்	8-00
43. குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1-00
44. விரத பூஜா விதானம்	7-20
45. குடும்ப ஜோதிடம்	7-20
46. விவாஹ மந்த்ரார்த்தபோதினி	2-50
47. ரிஷிகளும் கோத்ரங்களும்	6-50
48. ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2-00
49. ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10-50
50. தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி	13-00

விவரங்களுக்கு :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028
தியாகராயநகர், சென்னை-600 017

போன் : 441538

53 ஆண்டுகள் பொன்னான சேவை!

ஒரு குற்றம் பரிசு பெறுகிறது

வேறு ஒன்றும் ரமேஷால் செய்ய முடியவில்லை. எதிர்பாராத விதமாக அங்கு அப்படி மாட்டிக் கொண்டான். அந்த விநாடியிலேயே ஸ்தம்பித்துப் போனான்.

அடுத்து—

அவனுடைய இதயமே அவனிடமிருந்து விடுபட்டு ஓடிவிடுமோ என்கிறதான பதற்றத்துக்கு ஆளானான்.

எதிரே—

அரை பர்லாங் தூரத்தில் ரயில் வந்து கொண்டிருந்தது. அவன் தண்டவாளங்களின் மத்தியில் உணர்வுகள் நொறுங்கிப்போய் நின்றபடி தத்தளித்தான்.

பூட்ஸ் அணிந்திருந்த அவனுடைய பாதங்களில் ஒன்று மரக்கட்டையின் அடியில் வசமாக மாட்டிக் கொண்டிருந்தது அவனால் முடிந்தால் அந்தப் பாதத்தையே வெட்டிப் போட்டுவிட்டு எட்டிக் குதித்துப் போய்த் தப்பித்துக்கொள்ளவும் செய்வான் என்பதை முகத்தில் வியாபித்திருந்த படபடப்பும் அதிர்ச்சியுமே காட்டின.

இதுதான் அவன் அடைந்த கஷ்டங்களில் மிக மிக உச்சகட்டமானது. இதற்கு முன்பு வரை கனவில்கூட அப்படியொரு நெருக்கடியில் மாட்டிக் கொண்ட அனுபவம் இல்லை.

ரயில் கூவிக்கொண்டு நெருங்கிக்கொண்டிருந்தது. அது அவனுடைய உயிருக்கான மரண ஓலம் என்பதை முடிவு செய்து விட்டான்.

கடைசியாகப் பலத்தை யெல்லாம் ஒன்று சேர்த்து மரக் கட்டையின் கீழ் மாட்டிக் கொண்ட அந்த வலது பாதத்தை இழுத்துப் பார்த்தான்.

'ம்...ஹூம்' — அது இந்த ஜன்மத்தில் நடக்கிற காரியமாகப் படவில்லை.

ரமேஷ் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

ஓரிரு விநாடிகளே பாக்கி!

ரயில் நின்றது!

அவனுக்கும் ரயிலுக்கும் இடையே இருபத்தைந்து அடிகள் என்று சொல்லும்படியான சின்ன தூரம்.

கண்களைத் திறந்தான்.

மீண்டும் மறுபிறவி எடுத்து வந்த உணர்வுதான் வந்தது.

கால் விரல்களை அசைத்துப் பார்த்தான். பாதத்திலிருந்து கெண்டைக்கால் வரை அழுத்தமாக வலித்தது. எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு 'டம்' பிடித்து பாதத்தை இழுத்து... மூச்சுத் திணறலோடு விடுபட்டு எட்டிக் குதித்துத் தூரத்தில் போய்ப் புரண்டடித்து விழுந்தான்.

மல்லிகைப் பூவின் மணம் அவனுடைய நாடி நரம்பும் பின்னல்களிலெல்லாம் காற்றாக நுழைந்தது.

பூக் கூடைகளைச் சுமந்துகொண்டு சில பெண்கள் போய்க் கொண்டிருப்பது லேசாக அவன் கண்களுக்குத் தெரிந்தது.

அதைத் தொடர்ந்து—

ரயிலின் முன் பெட்டியிலிருந்து இறங்கி ரயில்வே அதிகாரிகளில் சிலரும், டிரைவர்கள் உட்பட பிரயாணிகள் கூட்டமும் ரமேஷை நோக்கி வேகமாக ஓடிவந்தது.

அவனைத் தூக்கி நிறுத்திய அதிகாரியிடம்—

''சார்...சார்... இதே ஆள்தான் சார்! ...தூங்கிக்கிட்டிருந்த என் கையைத் திருகி வாட்சைப் பிடுங்கிக்கிட்டு ரயிலிலிருந்து கீழே குதிச்சவன்!''

அந்த வார்த்தைகளில் இழப்பின் துடிப்பு அடித்தது. உடனடியாக அதிகாரி ரமேஷின் துணிகளைச் சோதனை போட்டார்.

பேண்ட் பாக்கெட்டில் இருந்த கடிகாரத்தை எடுக்கும்போது அவருடைய முகம், அவனை எரிக்கிற மாதிரி பார்த்தது.

''இதே கடிகாரம்தான் சார்!''

அந்த நடுத்தர வயதுக்காரர் அதிகாரியிடம் அவசரமாய்ச் சொன்னார். பக்கத்தில் அவருடைய பத்து வயதுப் பையன் அழாத குறையாகப் பேந்தப் பேந்த விழித்தபடி நின்றிருந்தான்.

அதிகாரி கடிகாரத்தைத் திருப்பி இரண்டு மூன்று முறை பார்த்துவிட்டு அந்த ஆளிடம் கொடுத்தார். கூட்டம் சலசலப்போடு ரயில் பெட்டிகளில் நுழைந்தது.

அவனைக் கையோடு பிடித்துக்கொண்டு போய் ரயிலில் உட்கார வைத்துக்கொண்ட பின்னர் அது புறப்பட்டது.

அடுத்த ஸ்டேஷனில் அவன் போலீஸில் ஒப்படைக்கப்பட்டான்.

ரயிலில் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, கைதாகி அங்கு உட்கார வைத்திருந்த நிமிஷங்கள்வரை அவன் மனசு எந்த விதத்திலும் வருந்தவில்லை.

அதற்கு மாறாக—

நிதானமாக யோசித்தது!

சின்னாபின்னமாகத் தன் உடல் போகாமலிருக்க அந்த ரயில் நின்ற அதிசயத்தையும் தன்மீது என்னென்னவோ சொல்லி இப்போது இங்கே கைதியாகப் பண்ணியிருக்கிற நிதர்சனத்தையும் அவன் மனசு யோசித்தது.

மெதுவாக மூச்சு விட்டது.

தன் கடிகாரம் பறிபோனதைப் பற்றித் துளியும் கவலை கொள்ளவில்லை.

அன்று மதியத்திலிருந்து வயிறு சரியில்லாமல் தொந்தரவு செய்ததால் வரும் வழியில் லெட்ரீன் போனது ஞாபகம்வந்தது. கைகால் கழுவிவிட்டுப் பாக்கெட்டில் போட்ட வாட்சை எடுத்து மறுபடியும் கட்டிக்கொள்ளாமல் மறந்து விட்டதும் இப்போதுதான் 'சுருக்'கென்று தைத்தது. ஊசியாய் மூளையைத் தொட்டது.

ஆனால் அந்த ஆள் என்னவோ சொல்லிப் பின்பு கடிகாரத்தை அடையாளம் காட்டி

யதும் அதைத் தன்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டதும். பின்பு போலீஸ் ஸ்டேஷனில் இப்படி உட்கார வைக்கப்பட்டிருப்பதும்—

எத்தனை வேகமான நிகழ்ச்சிகளாய் நடந்து முடிந்து விட்டன!

ரமேஷ் வருத்தமில்லாமல் ஜெயிலுக்குப் போனான்.

தண்டனைக் காலம் மூன்று மாதங்கள்.

● ● ●

உயிருக்குக் கிடைக்கவேண்டிய தண்டனையிலிருந்து மீண்டு விடுதலை ஆனதற்காக—தனக்குக் கிடைத்த தண்டனையை உடல் நடை சொல்லாமல் ஏற்றுக் கொண்டது.. அனுபவித்தது....!

ரமேஷ் ஜெயிலிலிருந்து வெளியே வந்தான்.

சில வாரங்களுக்குப் பின் கோயமுத்தூர் பெரிய கடை வீதியில் அவன் போய்க்கொண்டிருந்த போது எதிரே வந்தவர் ''...சார் சார்! பிளீஸ் கொஞ்சம் நில்லுங்க! உங்களைப் பார்க்கணும்னு இத்தனை நாளா துடிதுடிச்சுக்கிட்டு இருக்கேன்'' என்றார்.

அவரை ஏற இறங்கப் பார்த்தான்.

அவரே சொன்னார்:

இந்த இதழில் வெளியாகியிருக்கும் துணுக்குகளை வழங்கியிருப்பவர்

'628'

''...சார், மூணு மாசத்துக்கு முன்னாலே அந்த ரயில் சம்பவம் ஞாபகமிருக்குங்களா? நான் உங்களுக்குப் பண்ணின துரோகத்தை நெனைச்சுப் பலவாட்டி அழுதிருக்கேன்.''

அவர் சொல்வதை அவன் கவனமாய்க் கேட்டான். வீதியில் ஓரமாய்த் தள்ளி நின்று கொண்டனர். அவர் தொடர்ந்தார்.

''என்னுடைய பாழாப்போன மகன் செஞ்ச வேலை அன்னிக்கு... அவனோட குறும்பு புடிச்ச கையைச் சும்மா வெச்சுக்

சூர்யகாந்தன்



கிட்டு இருக்காமே ரயில் பெட்டியிலிருந்த அபாயச் சங்கிலியைப் புடிச்சு இழுத்திட்டான்! ஒடனடியா ரயில் நின்னு போச்சு! நாங்க இருந்த பெட்டிக்கு அதிகாரிங்க வந்து விசாரிக்கையில் எனக்கு என்ன சொல்றதுன்னு தோணலே! அந்த வேளைக்கு மனசுக்குப் பட்ட பொய்யை... வாய் வழியா ஒளறிட்டேன்....!

''என்னோட கையிலிருந்த கடிகாரத்தைத் திருடிக்கிட்டுக் கீழே குதிச்சு ஓடிப்போய் நீங்க விழுந்து கிடக்கிறதா' அவங்ககிட்டச் சொன்னதுமில்லாம உங்களுக்குத் தண்டனையும் வாங்கிக் குடுத்த பாவியா நான் ஆகிவிட்டேன்... என்னை மன்னிச்சுடுங்க...''

அவர் கேவிக் கேவி அழுதுவிடுவார் போல் இருந்தது.


''உங்க கடிகாரத்தைப் பத்திரமா வீட்டுல பெட்டிக்குள்ளாற வெச்சிருக்கேன். அதைப் பார்க்கிறப்பதெல்லாம் உங்க முகத்தைப் பார்க்கிறதா நெனைச்சுக் கிட்டுத் தொட்டுக் கும்பிட்டுக்கிட்டு இருக்கேன்....

''இப்பவே நீங்க வீட்டுக்கு வரோணும். என்னை மன்னிச்சு அதை வாங்கிக்கணும்''— வற்புறுத்தி வேண்டிக் கொண்டார்.

''உங்க வீட்டு விலாசத்தைக் கொடுங்க. நான் இரண்டொரு நாளில் கண்டிப்பா வர்றேன். இப்ப நான் அவசரமாப் போக வேண்டியிருக்கு. மறுபடி நிச்சயம் சந்திக்கலாம்.''

அவரிடமிருந்து விலாசத்தை வாங்கிக் கொண்டு அவன் அங்கிருந்து நெகிழ்ச்சியோடு புறப்பட்டான்.

'சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தித் தன் உயிரைக் காப்பாற்றிய அந்தச் சிறுவனின் கரத்துக்கு ஒரு அருமையான புது கடிகாரத்தை வாங்கிப் பரிசாகக் கொடுத்தே ஆகவேண்டும்' என்கிற முடிவோடு அவன் கடையை நோக்கி வேகமாக நடந்தான்.



வட்ட மேஜை

● 'வேலை இல்லையே, வாழ்க்கைப் பயணத்தை எப்படித் தொடங்குவது என்று நான் கல்கியில் எழுதிய முகூர்த்தமோ என்னவோ மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் உதவியால் அரசு நிறுவனம் ஒன்றில் தட்டெழுத்தர் வேலை கிடைத்திருக்கிறது. இதை மகிழ்ச்சியுடன் கல்கிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு எரிமலையும் என்னைப் போல் பனி மலையாக மாறும் காலம் வருமா?

குரோம்பேட்டை பெருமாள்தாய்

● கல்கி இதழில் என்னைப் பற்றிய விவரம் வெளியிட்டது கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். தங்கள் இதழில் வெளிவந்ததும் எனக்கு வேலை கிடைத்ததுதான் ஆச்சரியம். மகிழ்ச்சியான செய்தி கூறி, தங்கள் இதழுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அம்மையப்பன் ச. குமாரன்

● நீங்கள் கேட்டவை பகுதியில் ''ஜெயில் சிங் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரானதால்....'' என்று கலைஞர் குறிப்பிட்டதாகக் கூறியிருக்கிறீர்கள். ஜெயில் சிங் தாழ்த்தப்பட்டவர் அல்ல. அவர் விஸ்வகர்மா.

மதுரை

எஸ். ராஜு
தலைவர், மதுரை தெலுங்கு
விஸ்வகர்ம சபை

● 'உங்களுக்காக ஒரு நிமிஷம் ஒதுக்கியிருக்கிறேன்' என்று கலைஞர் கூறியபோது திரு சாவி துணுக்குற்றதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் கலைஞர் ஏதோ ஒரு மனநிலையில் வார்த்தையைத் தவறவிட்டுப் பின்னர் தன்னைச் சுதாரித்துக் கொண்டு 'இருங்கள் டிபன் சாப்பிட்டுவிட்டுப் போங்கள்' என்று கூறியதையும் கேளாமல், அந்த ஒரு நொடியில் தனது பத்து வருட கால நெருக்கத்தையும் மறந்து வந்த சாவியின் நட்பின் ஆழத்தை என்னவென்பது? மேலும், கலைஞர் அவருக்குப் பிடிக்காத பத்திரிகைக்கு அவருக்குத் தெரியாமல் பேட்டி அளித்திருப்பதைச் சாடியிருக்கிறார். அரசியல்வாதிகளுக்குப் பத்திரிகைகள் ஒரு வலுவான ஆயுதம் என்பது சாவி அறியாததா? அங்ஙனம் இருக்க, இதுகாறும் எதிர்த்து வந்த அந்தப் பத்திரிகைக்கு கலைஞர் பேட்டியளித்ததில் வியப்பென்ன? தனக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, தன்னைச் சார்ந்த கட்சியின் நலனை உத்தேசித்து கலைஞர் அந்தப் பேட்டியை அளித்திருக்கலாம் அல்லவா? ஏட்டிக்குப் போட்டி போல் தனது சொந்தப் பத்திரிகையில் 'தோட்டம் முதல் கோட்டை வரை' கட்டுரையில் எம். ஜி. ஆரை ஆதரித்த சாவியின் செயலானது 'தனி மனிதர்களைப் பற்றி நினைக்காமல் பிரச்னைகளை ஆராய்ந்து அதன்படிதான் எழுதுகிறோம்' என்ற அவர் சொல்லுடன் பொருந்தவில்லையே.

சென்னை அனகை சந்தர்

● சாவி அவர்கள் தான் பொறுப்பேற்றுக்கொண்ட வேலையைத் தன்னலமில்லாது உயர்வடையச் செய்பவர். யாருக்காக உழைத்தாலும்மனநிறைவோடு உழைப்பவர். அவரைப். பேட்டி கண்டு அவரை அட்டையிலும் போட்டுப் பெருமைப்படுத்தியிருக்கிறீர்கள்.

கும்பகோணம் டி. எஸ். சீதாராமன்

● ''வாஷிங்டன் திருமணத்திற்குப் பிறகு உங்கள் கதைகள் ஒன்றும் பிரபலமாகவில்லையே? கேட்கப்பட வேண்டிய கேள்வி. பிரியனுக்குப் பாராட்டுக்கள். இவரது கேள்விக்குசாவி அவர்கள்வேகப்படாமல் கொடுத்த பதில், 'பண்பில் அவர் கனிந்து விட்டார்' என்பதைக் காட்டியது.

மதுக்கூர் ஞானும்பாள் செல்வம்

● சத்துணவு பற்றிய தலையங்கத்தில் எதிர்காலத்தில் இத்திட்டத்தினால் வரும் பொருளாதாரப் பற்றுக்குறையை நிவர்த்திக்க 'வரி' விதிக்க அவசியம் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டி, அதற்காகத் தாங்கள் கூறியிருக்கும் யோசனை சத்துள்ளவை! பின்பற்ற வேண்டியதும் கூட.

மதுரை-20 ரவிராஜ்

என்னதான் இருந்தாலும் நம்பிண்டன் வீரர்கள் ஆடுவதில் இருக்கும் 'த்ரில்' விம்பிள்டன் வீரர்களின் ஆட்டத்தில் இருக்காது தான் சார்!

கல்கத்தா-26 கே.கே. பாலசுப்பிரமணியன்

''ஓடிப்போன மகள்'' சிறுகதை மனத்தை நெகிழ வைத்தது. கதையை எழுதிய பிரதிபா ராஜகோபாலனுக்குப் பாராட்டுக்கள்.

பவானி பா.சே. நாகராஜ்

இவ்வாரக் கல்கியில் திருசாவி அவர்களின் சுவாரஸ்யமான பேட்டியைப் படித்து மிகவும் மகிழ்ந்தேன். ஆனால் அதன் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி 1932ல் ''பாரத தேவி'' என்றொரு பத்திரிகை இருந்ததா?

இராசிபுரம் ப. தனுஷ்கோடி

(ஸாரி, பாரதஜோதி என்று திருத்திக் கொள்ளவும். -ஆசிரியர்)

முதல் குழந்தையா...
இன்பம் இன்பம்...





ஆனால் அடுத்ததும் உடனடியாக வந்துவிட்டால் துன்பம். இதைத் தவிர்க்க,

அடுத்த குழந்தையின் வரவை, விரும்பும் வரையில் ஒத்திப்போட நிரோத், ஒரு நம்பகமான, சௌகரியமான கருத்தடைச் சாதனம். அரசு ஆதரவு காரணமாக மிக மலிவானது.

நிரோத் உபயோகியுங்கள் உயர் ரக கருத்தடைச் சாதனம்

davp 81/234

விநியோகஸ்தர்கள்: ப்ரூக் பாண்ட், லிப்டன், ஹிந்துஸ்தான் லீவர், யூனியன் கார்பைட், ஜூடிபோல், ஸ்மித் ஸ்டெய்ன்ஸ்ட்ரீட், இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், அசாக் மேட்ச் இண்டஸ்ட்ரி.

நக்ஸலைட்டுக்கு நீதி....?



"நக்ஸலைட்டைத் தேடி..." என்ற தலைப்பில் 11-7-82 இதழில் வெளிவந்த டி. ஐ. ஜி திரு தேவாரத்தின் பேட்டி தொடர்பாக, திருப்பத்தூரில் வாழ்ந்து வரும் சமூக ஊழியரும், மக்கள் நல உரிமைக் கழகத் தலைவருமான வழக்கறிஞர் பி. வி. பக்தவத்சலம் கூறுகிறார் :


"திரு தேவாரம் போலீஸுக்கு யாரையும் வீணாகத் துன்புறுத்தவோ கட்டுக் கொல்லவோ ஆசை கிடையாது என்று கூறுகிறார். ஆனால் நக்ஸலைட்டுகள் என்று கூறப்படும் 20 பேருக்கு மேற்பட்ட இளைஞர்கள் போலீஸாருடன் மோதல்களில் இறந்ததாகக் கூறப்படுகிறது. இந்த மோதல்கள் மலைகளிலும் காடுகளிலும் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் கட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்கள், வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டுக் குரூரமானமுறையில் கட்டுக்கொல்லப்பட்டது. அவ்விளைஞர்களைப் பற்றி அறிந்த மக்களுக்கு நன்கு தெரியும் இது குறித்து. நீதி விசாரணை வேண்டும் என்று பி. யூ. ஸி. எல்., மக்கள் நல உரிமை கழகம் போன்ற அமைப்புகள் பல முறை அரசை வற்புறுத்தி இருக்கின்றன. போலீஸ் தரப்பில் கூறப்படும் விஷயங்கள் உண்மையாக இருக்குமானால் அரசு விசாரணைக் கமிஷன் அமைத்து இருக்கலாமே?

உண்மை நிலையைக் காண வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபர்களான டி. என். கோபாலனும், சந்திரசேகரும், திருப்பத்தூர் காவல் நிலையம் முன்பாகவே மப்டி போலீஸாரால் தாக்கப்பட்டார்கள். வெளி மாநிலங்களிலிருந்து உண்மை நிலையைக் கண்டறிய வந்த ஆய்வுக் குழுவினர் மீதும் போலீஸாரின் தூண்டுதல் பேரில் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்களது உடைமைகள் சூறையாடப்பட்டன. சர்வோதயக் குழுவினர்கூட தாக்குதலில் இருந்து தப்ப முடியவில்லை.

இந்திய சமூகத்தில் சட்டங்களை மீறும் பெரிய அமைப்பாக போலீஸ் மாறியிருப்பது, அபாயகரமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

நக்ஸலைட்டுகள் ஏன் உருவாகிறார்கள்என்ற அடிப்படைப் பிரச்னையைக் கவனித்துத் தீர்வு காணாமல், திருந்திய நக்ஸலைட்டுகளுக்கு வேலை கொடுத்துப் புரட்சி செய்துவிட்டதாக திரு தேவாரம் கூறியிருப்பதுநாற்றமெடுக்கும் புண் மேல் சந்தனம் பூசி மகிழ்வது போலத்தான்!"

-பேட்டி: ப்ரியன்



சரணம் கணேசா!


1


கதை: ரா. கணபதி
படக்கதை அமைப்பு: வாண்டு மாமா

புதிய சித்திரக் கதை

சித்திரம்: விஜு




அறுந்த விநாடி தலை தனியாகவும் உடல் தரையிலும் சரிந்தது.
ஹா, இதென்ன? பரமேசுவரா இதென்ன அக்கிரமம், எனக்கே இக்கொடூரம் நிகழலாமா?


பார்வதி குழந்தையின் உயிரற்ற உடலைச் சிவபெருமான் முன் கிடத்திப் புலம்புகிறாள்.
பார்வதி வருந்தாதே. இந்தக் குழந்தையை உருவாக்கி உயிர் கொடுத்த வேலை சரியில்லை.


சனி பகவான் மிக உக்கிரமான வேளையிலிருக்கும் போது நீ குழந்தைக்கு உயிர் தந்தாய். அதனால் அவன் இப்படிச் செய்து விட்டான். இதுவும் நன்மைக்குத்தான்....
நன்மைக்கா எப்படி?
அது ஒரு கதை சொல்கிறேன் கேள். கஜமுகாசுரன் என்ற ஒரு அசுரன் பிரம்மாவை நோக்கிக் கடும் தவம் புரிந்தான்....
கஜமுகா. உனக்கு என்ன வரம் வேண்டும்?
பிரம்மதேவா! ஆண் தொடர்பில்லாமல் பிறந்த குழந்தையால்தான் எனக்கு மரணம் ஏற்பட வேண்டும். அது மட்டுமல்ல....
....அந்தக் குழந்தை மனித இனமாகவும் இருக்கக் கூடாது. மிருகமாகவும் இருக்கக் கூடாது. எவ்வித ஆயுதத்தினாலும் அக்குழந்தை என்னைக் கொல்லக் கூடாது.
இப்படியொரு விபரீதமான வரம் பெற்ற அந்தக் கஜமுகாசுரனுக்கு இதோ நீ படைத்த இந்தக் குழந்தையால் வாழ்வு முடியப் போகிறது.
அதெப்படி பிரபோ?

(தொடரும்)



எஸ்.வி.சேகர்

ஓ

அகர வரிசைப் பேட்டி:

ஓவர் ஆக்டிங்

எனக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்லை. ஆக்டிங்குக்கும் எனக்குமே தொலை தூரம் என்று மற்றவர்கள் பேசிக் கொள்கிறார்கள். கதாபாத்திரத்தோடு ஒட்டிய மிதமான நடிப்புத்தான் எனக்குப் பிடிக்கும்.

ஒப்போல்

இந்த மலையாளப் படத்தில் நடித்த மேனகாதான் என்னோடு 'நிஜங்கள்' படத்தில் நடிக்கிறார். ஒப்போல் படத்திற்குப் பரிசு கிடைத்த மாதிரி இந்தப் படத்துக்கும் பரிசு கிடைக்கும் என நம்புகிறேன். மேனகா என் நாடக ரசிகை. எந்த நாடகமாக இருந்தாலும் வந்து முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டு சிரித்து ரசிப்பார்.

ஓலைக் கொட்டகை

திருவான்மியூரில் உள்ள தியாகராஜா தியேட்டர் ஒரு காலத்தில் ஓலைக் கொட்டகையாக இருந்தபோது அதில் நிறையப் படங்கள் பார்த்திருக்கிறேன். அநேகமாக அத்தியேட்டரின் ஒரு சுவர் நான் வாங்கிய 60 பைசா டிக்கெட்டுகளால் எழுந்த கைங்கரியமாகத்தான் இருக்கும்.

ஓட்டம்

'ஸ்பரிசம்' படத்துக்காக நானும் கதாநாயகியாக நடிக்கும் ஸ்ரீலட்சுமியும் ஒரு நாள் முழுவதும் மகாபலிபுரத்தில் ஓடியிருக்கிறோம். இப்படத்தில் மாடு எங்களைத் துரத்துகிறது. க்ளைமாக்ஸ் காட்சிக்காகவும் ஓடியவாறே நடித்தோம். மறக்க முடியாத ஓட்டம். படமும் அப்படி ஓட வேண்டும் என்பதே என் ஆசை.

ஓம்புரி

அகில இந்திய சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி விருது இவருக்குக் கிடைத்தது தெரியும். மற்றபடி இவர் எப்படி இருப்பார் என்று கூட எனக்குத் தெரியாது.

ஓமர்ஷெரீப்

இவருடைய மீசை என்னைக் கவர்ந்தது. இவர் நடித்து நான் பார்த்த மறக்க முடியாத படங்கள் இரண்டு.

ஒன்று: லாரன்ஸ் ஆஃப் அரேபியா, மற்றொன்று மெக்கன்னஸ் கோல்ட்.

ஓநாய்

ஓநாயை நேரில் பார்த்ததில்லை. ஓநாய் மனிதனை ரேடியோவில் கேட்டேன். அகில பாரத நாடகமான இது மறக்க முடியாதது.

ஓசி

வாங்கியது இல்லை. ஆனால் நிறையக் கொடுத்திருக்கிறேன். என் நாடகம் நடைபெறும் சமயங்களில் எல்லாம் ஓசி டிக்கெட் கொடுப்பதைத்தான் சொல்கிறேன்.

ஓ.கே.

சினிமா ஷூட்டிங்லே சகஜமான வார்த்தை! நடிக்கும்போது அது எத்தனை டேக்கிலே ஓ.கே. ஆகுதுன்னு நான் கவலைப்படறதில்லை.

ஓடம்

ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையினிலே (பாடிக் காட்டுகிறார்) எனக்குப் பிடிச்ச அருமையான பாட்டு சார்.

ஓடி விளையாடு பாப்பா

'ஏழாவது மனிதன்' படத்திலே வைத்தி லக்ஷ்மண் இந்தப் பாட்டுக்கு அருமையான மியூசிக் போட்டிருக்கிறார். இதே படத்தில் எனக்குப் பிடிச்ச இன்னொரு பாட்டு 'காக்கைச் சிறகினிலே'

— திலகராணி

ஒரு துளி சந்தோஷம்

சேதுராமன்-ரியல் எஸ்டேட் மாக்னெட் என்று தொழில் வட்டாரத்தில் ,பிரசித்தி பெற்றவர் — வீடு திரும்பும்போது, இரவு மணி பன்னிரண்டுக்கு மேலாகி விட்டது. ஹோட்டல் பத்மினியில் ஒரு 'காக் டெய்ல்' பார்ட்டி. — எட்டு ஆண்டுகள் பூர்த்தியானதை யொட்டி நடந்த இந்தப் பார்ட்டி வெகு அருமையாக முடிந்துவிட்டது. ரொம்பத் திருப்தி சேதுராமனுக்கு.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில் முன் பின் தெரியாத இளைஞன் அவர் முன் நின்ருன். "ஸார் நீங்க ஆர்ட்டிஸ்ட் சேது இல்லே? உங்க படமெல்லாம் பிரமாதமா இருக்கும் ஸார். நெஞ்சைப் பறி கொடுத்திருக்கிறேன்."

சேதுராமன் முகம் சுருங்கியது. 'அந்தப் படம் பிரமாதம்'! கார்ட்டூன் எக்ஸலன்ட்' — இவையெல்லாம் பைசா பெருத சமாச்சாரங்கள். பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய்ப் போனவை. "ஓ.. தாங்க்யூ" என்று மெதுவாகத் தம்மை விடுவித்துக் கொண்டார்.

"ஹ ஹா! அவர் உங்க கிட்டேதானே ஃபினாட் வாங்கிஞர்!"

யாரோ உரக்கச் சிரித்தார்கள். கை குலுக்கினர்கள்.

பங்களாவுக்கு வந்து காலிங் பெல்லே அழுத்தினர். பக்கத்தில் 'சேதுராமய் ரியல் எஸ்டேட்' என்ற பலகை தெரிந்தது. ஆர்ட்டிஸ்ட் சேதுவாம்! சட்... சென்றதினி மீளாதுடா மடையா!

இன்னமும் கதவு திறக்கப்படவில்லே. மல்லிகா ஆழ்ந்த நித்திரையில் லயித்திருந்தாள் போலும். மறுபடியும் ஒரு தடவை அழுத்தப் போன சமயம், வராந்தாவில் லேசான ஒளி மினுக்கியது. தொடர்ந்து சட் சட்டென்று பல்புகள் எரிந்தன. எங்கு நோக்கினும் ஒளித் திரள்!

"ஏன் இவ்வளவு நேரம்? சாரதி தூங்காது விழித்துக் கொண்டிருந்தான். ஒரு முக்கிய விஷயம் பேசணும்."

"ஷட் அப்!" என்று உரக்கக் கத்தி மலேவியை மேலே பேச விடாது தடுத்தார். என்ன சொல்ல வரப் போகிருள் என்பது அவருக்குத் தெரியும். சாரதியைச் சொல்லிக் குற்றமில்லே. இள வயது. கண்டவளேப் பார்த்து இரண்டாவியும் ஒன்ருகும் என்று வசனம் பேசுகிற வயசு; ஒருவேளே 'இதோ பார் கன்னத்து முத்தமொன்று' என்பது வரைக்கும் போய் விட்டானே?

மல்லிகாவின் முகம் வாடிப் போயிற்று. அவளேத் தேற்றும் நோக்கத்துடன், இடை. யில் கைகொடுத்து உள்ளே அழைத்துப் போனார்.

"ஏதோ கனவு வந்தது. கெட்ட கனு. நான் கூப்பிடக் கூப்பிட நீங்கள் தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கிறீர்கள். திடீர்னு பெல் சப்தம் கேட்டதும் பயந்து போய்விட்டேன்." லேசாகத் தேம்பினுள்.

"நோ மல்லிகா, தேம்பல் வேண்டாம்! தேம்புவதில் பயனில்லே. இந்தச் சாரதி சமாசாரம்தானே உன்னே அலேக்கழிக்கிறது? ஐ'ல் சால்வ் இட்!"

மல்லிகா விடவில்லே. "அவன் ஜாதகத்தைக் காண்பித்தேனே! பாலத்துச் சோசியன் இரகம் படுத்துமென்று சொன்னர்."

உரக்கச் சிரித்தார் சேதுராமன். "மல்லிகா! நான் ஒரு ரியல் எஸ்டேட் மாக்னேட். என்னிடம் கிருகத்தைப் பற்றிச் சொல்லுகிருயே... இப்ப மணி என்ன ஆகிறது தெரியுமா?"



மல்லிகா அமைதியடையவில்லே. எவனிருல் செலுத்தப்பட்டவள் போல அனிச்சையாகக் கணவனேப் பின்தொடர்ந்தாள்.

காலேயில்விழிக்கும்போது பொழுது நன்கு விடிந்து விட்டது. வானம் லேசாக மூட்டம் போட்டிருந்தது. சூரியன் முகத்தில் இருள் படர்ந்தாற்போல். சேதுராமனுக்கு உற்சாகமாக இருந்தது. டைனிங் டேபிளில் உட்கார்ந்தார். ஸாண்ட்விட்சைக் கடித்துக் கொண்டே, "எங்கே சாரதி?" என்ருர்.

"அவன் எழுதருன்."

"ஃபூல்" என்று பல்லேக் கடித்தார்.

அடுத்த நிமிடம் சாரதியே முன் வந்து நின்ருன். "செய்யும் தொழிலே தெய்வம் எனக்கு" என்று புன்னகை செய்தான்.

"கரெக்ட். இப்போ நம்ம தொழில் என்ன தெரியுமோ? ரியல் எஸ்டேட்! கதை எழுதுவது இல்லே!"

"அது உங்களுக்கு. எனக்கு இல்லே" என்று முறுக்கிக் கொண்டு நின்ருன் சாரதி.


சேதுராமன் சில நிமிடங்கள் மகனேயே கூர்ந்து கவனித்தார். இவன் வேறு ஜெனரேஷன். மெல்லத்தான் அவன் போக்கை மாற்ற வேண்டும். ''வா, இப்படி உட்கார்டீ சாப்பிடு.''

உட்கார்ந்தான். ''நேற்று பேப்பரில் பார்த்தாயா—அந்த பங்களா விளம்பரத்தை? பத்து வருஷத்தில் இந்த மாதிரி எந்தக் கம்பெனியும் முன்னுக்கு வந்தது இல்லே!'' என்று ஆரம்பித்தார்.

''ஓ, பார்த்தேனே, உங்க பிஸினஸ், விளம்பரம், பணம் எல்லாம் மாயை!'' என்று ஆவேசமாகச் சாரதி வெடித்தான்.

''மை டியர் சாரதி! இதோ பார், இந்தக் கார், வீடு இவை யெல்லாம் பொய்யா? அற்ப மாயைகளா? காட்சிப் பிழைதானு? சொல்! உன் தொழிலில் நிச்சயம் பணம் வராது. பைத்தியம்!''

சாரதி மௌனமாக இருந்தான். அப்பா சொன்னதில் உள்ள நிதரிசனமான உண்மை புரிந்தது. ஆனுல் படிக்கும்போது, எதைக் கண்டாலும் எழுத கை ஊறுகிறுற்போன்ற



உணர்ச்சி முகிழ்த்ததே, அது பொய்யா? விசையுறு பந்தினைப் போல் விறு விறுவெனக் கவி எழுதும் ஆர்வம் துளித்ததே அது பொய்யா? அந்தக் கவியில் மனத்தைப் பறிகொடுத்து, காதலித்து ரத்தமும் சதையுமாக உருக் கொண்டு நிற்கும் ஜோதியுடன் தன்னை மறந்த லயம் தன்னில் இருந்தோமே — அது மெய்யில்லையா?

''என்னைப் பைத்தியம் என்று சொன்னீர்களே? நீங்களும் ஒரு காலத்தில் பைத்தியமாகத்தானே இருந்தீர்கள்?''

சேதுராமன் உதட்டில் புன்னகைக் கீற்று தெளித்தது. ''யெஸ்... ஒரு காலத்தில்... ஆனால் பழைய பைத்தியம் படீலென்று தெளிஞ்சது!''

அவர் எங்கோ கனவில் லயித்திருப்பவர் போல் இருந்தார். ஓவியராகத் தொடங்கி நடுவில் பிஸினஸ்மேனாக மாறிய ரசவாதம் இப்போதுதான் நடப்பது போல் அவர் கண் முன் விரிந்தது.

அப்போது 'சேது' என்ற பெயரில் பத்திரிகை உலகில் கார்ட்டூன் வரைபவராக இருந்தார். ஆனால் பெயர்தான் பெத்த பெயரே தவிர, வருமானம் போதுமானதாக இல்லை.

ஒரு நாள் 'மரகதம்' பத்திரிகை ஆபீசிலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது.

ஆசிரியர் புன்னகையுடன் வரவேற்று, ''நீங்க என் தொடர்கதைக்குப் படம் போடறீங்க. இதோ முதல் அத்தியாயம்... ரெண்டு 'வீச்கவேஷ'னுக்குப் போட்டுக் கொண்டு வாங்க'' என்றார்.

சேதுராமன் பெருமிதத்துடன் திரும்பினார். கனி கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானா என்ன? அன்றிரவே உட்கார்ந்து மூளையைக் கசக்கிப் படம் போட்டு மறுதினம் எடுத்துக் கொண்டு போனார்.

''நீங்க 'ட்ரை' பண்ணினால் நல்லா வருகிறதே'' என்று ஆசிரியர் பாராட்டினார். 'சேது'வின் படத்துடன் தொடர் வருகிறது என விளம்பரப்படுத்தப்பட்ட அந்த நாட்கள்! சேதுவின் படம் வித்தியாசமாக இருக்கிறது என்று மற்றப் பத்திரிகைகளும் இவரை நாடி வந்த நாட்கள்! அவரைப் பாராட்டவென்று ஒரு சிறு கூட்டமே வரும்.

''மல்லிகா, ஒவ்வொரு தடவையும் படம் சரியாக வரவேண்டுமே என்று பயத்துடன் போடுகிறேன். அப்படி இருந்தும் என்ன பிரயோஜனம்?''

''ஏன் மனதை இப்படி உழப்பிக்கொள்கிறீர்கள்? உளைவதிலே பயனொன்றுமில்லை. நான் அல்லும் பகலும் பராசக்தியைத் தான்வேண்டுகிறேன். நிச்சயம் நல்வழிசேர்ப்பித்து நம்மைக் காப்பாள்!''

அப்படியே நடந்தது. தானாக ஒரு வாய்ப்புக் கிட்டியது. சேதுராமனின் கனவு மெய்ப்பட்டது. கைவசமாயிற்று.

பிரபல ரியல் எஸ்டேட் பிரமுகர் ஒருவர் தம் கம்பெனி விளம்பரத்துக்காகச் சேதுராமனை நாடினார். ஒவ்வொரு விளம்பரத்திலேயும் சில கார்ட்டூன்கள் மாதிரி போட்டால் தேவலை என்று தோன்றிற்று. விதவிதமான முகபாவங்களில் குடித்தனக்காரரை வரைந்தார். அந்த விளம்பரம் சிறிது பிரபலமாயிற்று. பத்திரிகைஉலகைத்தாண்டி அவர் பெயர் தெரிய ஆரம்பித்தது. அப்போதுதான்—

அந்தத் திருப்பம் நிகழ்ந்தது. விதி வகுத்த பொழுது அது.

அன்றையத் தினம் மடமடவென்று வழுக்கைத் தலை மனிதர் சேதுராமனைப் பார்க்க வந்தார். வெளியூர்க்காரர். ரியல் எஸ்டேட் ஏஜெண்டைப் பார்க்க வந்தாராம். அவர் இல்லை. குறிப்பிட்ட இடத்தில் வீட்டை முடித்துத் தருமாறு சேதுராமனை வேண்டினார்.

சேதுராமன் சிரித்தார். ''என்னிடம் வருகிறீர்களே! நான் வெறும் ஆர்ட்டிஸ்ட் அவ்வளவுதான்!''

''இப்ப அவர் இல்லியே! நீங்க கூட வாங்க. படம் எல்லாம் வரைஞ்சிருக்கீங்க. வந்து எப்படியாவது வீட்டை முடிச்சுக் கொடுங்க.''

பேரம் முடிந்துவிட்டது.

சந்தோஷம் இரட்டிப்பாக மாறுமளவு மறு வாரம் பணம் வந்தது. ஆயிரம் ரூபாய்!

சேதுராமன் துணிந்து இறங்கினார். ரியல் எஸ்டேட் பிசினஸ் துவக்கினார். பேச்சு ஒன்றுதான் மூலதனம். பொய்கள், யாரையும் பாதிக்காத சிறு பொய்கள் —வளர்ச்சிக்கு எரு. மனத்தில் ஒரு தைரியத்தை — நம்பிக்கையை எழுப்பக் கூடிய அளவுக்கு வியாபாரம் வளர்ந்தது. குடிபோன வீடு சொந்த வீடாக மாறியது. ஸ்கூட்டரை விற்றுக் கார் வாங்கினார்.

இப்போது அவர் ரியல் எஸ்டேட் சேதுராமன். ஆர்டிஸ்ட் பணியை அடியோடு மறந்து போனார்.

இத்தனை வருடம் கழித்துத் தவப் புதல்வன் சாரதி ஞாபகம் ஊட்டுகிறான்.

மெத்த வெளிச்சமின்றி ஒற்றை விளக்கின் கீழ் இரவு வெகு நேரமாகியும் கிறுக்கிக் கொண்டிருந்தான். தொலையட்டும். ஆனால் அந்தஸ்து பார்க்காமல் யாரோ ஜோதி என்பவளைக் காதலித்து மணம் புரிகிற அளவுக்குத் துணிந்து விட்டானே.

கடைசி அஸ்திரத்தைப் பிரயோகம் செய்தார்: சேதுராமன்: ''சொத்தில் பைசா கிடையாது ஜோதியை மணந்தால்!''

சாரதி புன்னகைத்தான். ''நீங்கள் ஒரு டிபிகல் தந்தை! நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால் நன்று என்கிறீர்கள்; வீட்டினிலே காதல் என்றால் உறுமுகிறீர்கள். அந்த ஜோதி என்னிடம் மட்டுமல்ல, என் பாட்டினிலும் அன்பு செய்கிறாள்!''

''அன்பு; பாட்டு; கவிதை! எல்லாம் பொருளற்றவை. பணத்தைப் பெருக்க உதவாதவை.'' என்று கூவி வெறிபிடித்தவர் போல் சாரதி எழுதியவைகளைக் கிழிக்கப் போனார். மல்லிகா ஓடிவந்தாள். குறுக்கே நின்று தடுத்தாள்.

செய்தி வெளியே பரவி விட்டது. எது வீட்டில் இல்லாவிட்டாலும் எங்கும் புரக அறையும் சேவகர்கள் — இந்தத் தூள் பறக்கும் செய்தியை விட்டு வைப்பார்களா? கண், காது, மூக்கு வைத்து வெளியே பரப்பி

னார்கள். யாரைக் கண்டாலும், ''என்ன ஸார் உங்க பிள்ளை...'' என்று இழுத்துப் பேசினார்கள். சேதுராமன் அவமானமாக உணர்ந்தார்.

கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. யார் என்று நிமிர்ந்து பார்த்த அதே நிமிடத்தில் காலில் ஸ்பரிசம் பட்டது. திடுக்கிட்டுக் கவனித்தார்.

''யார் நீ?''

''என் காதலி ஜோதி அப்பா!'' சாரதியின் குரல்.



கல்கி - பாரதி நூற்றாண்டு போட்டி-1

இந்தச் சிறுகதையில் பாரதியாரின் **கவிதை**களிலிருந்து பல வார்த்தைத் தொடர்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. எத்தனை வார்த்தைத் தொடர்களை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறது? கீழே உள்ள கட்டத்தில் எழுதி இப்பகுதியைக் கத்தரித்து அனுப்புங்கள். சரியான விடை எழுதியவருக்கு

பரிசு ரூ. 500

ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

முடிவு தேதி: ஆகஸ்டு 18

உறையின் மேல் கல்கி – பாரதி நூற்றாண்டு போட்டி [1] என்று குறிப்பிடவும்.

சிறுகதையில் இடம்பெற்றுள்ள பாரதி வார்த்தைத் தொடர்களின் எண்ணிக்கை :

என் பெயர்: ....

விலாசம்: ....

கையெழுத்து ....

''உன் காதலிதான் கவிதை ஆயிற்றே?'' என்றார் சேதுராமன் கிண்டலாக.

''பாட்டுக் கலந்திடவே அங்கேயொரு பத்தினிப் பெண் வேணுமே!... உங்கள் ஆசீர்வாதம் பெற வந்திருக்கிறோம்.''

''நோ, நோ, என் ஆசி வேணுமென்றால் தனியாக வா. அதுவும் கவிதை, மண்ணாங்கட்டி இல்லாமல்!'' என்று பளிச்சென்று சொல்லிக் காலை உதறி அறைக்குள் புகப் போனார் சேதுராமன்.

ஓர் உறுதியான கரம் அவரை நிறுத்தியது. திரும்பினார். மல்லிகா.

''வாருங்கள். மனப்பூர்வமாக ஆசீர்வாதம் செய்யலாம்.''

''மல்லிகா! நீ என்ன உளர்றே? நான் இப்போ யார் தெரியுமா? ரியல் எஸ்டேட் கிங்! முதல்லே அவர்களை வெளியே போகச் சொல்.''

மல்லிகா பதறாமல், ''அப்போ நானும் போய் வருகிறேன்!'' என்றாள்.

சேதுராமன் திகைத்தார். ''மல்லிகா! அன்னிக்கு பார்ட்டியிலே யார் யார் வந்து இருந்தாங்கள் தெரியுமா? மினிஸ்டரின் பி.ஏ., பாங்க் ஜெனரல் மானேஜர், லீடிங் டாக்டர்... எல்லாரும் எதற்கு வந்தார்கள்? இந்த ரியல் எஸ்டேட் 'கிங்'கை வாழ்த்த என்றோடீ. அந்தஸ்து என்ன, கௌரவம் என்ன!'' என்று படபடத்தார்.

''இந்தக் கௌரவம் அந்தஸ்து எல்லாம் எதற்கு? நாமும் நம் குழந்தைகளும் நன்றாக இருக்க வேண்டும் என்றுதானே?''

''சாரமற்ற வார்த்தை!''

மல்லிகா லேசான விசும்பலுடன் தொடர்ந்தாள்: ''நீங்கள் சொன்னீர்களே புகழ், பெருமை, கௌரவம், அந்தஸ்து என்று, எல்லாம் சரி. ஆனால் சந்தோஷம்? அது இருக்கிறதா? மனத்தைத் தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள்! ஓர் ஐப்பசி மாசத்தில் லேசாக மழை தூறிக் கொண்டிருந்தபோது, பத்திரிகையிலிருந்து தீபாவளி மலர் பிரதி உங்களுக்கு முதன் முதலாக வந்ததே – அந்தத் துல்லியமான மகிழ்ச்சி இப்போது இருக்கிறதா? ஒரு சமயம் ரயிலில் போகும்போது, யாரோ முன் பின் தெரியாத ரசிகன் உங்களை ஆர்ட்டிஸ்ட் என்று கண்டுகொண்டு ராஜோபசாரம் செய்தானே அப்போது ஏற்பட்ட சந்தோஷம் இப்போது எங்கே? ஏதோ தற்செயலாய் சாரதிக்கும் இதுபோன்ற கலையில் பற்றுப் பிறந்திருக்கிறது. நாம் அனுபவித்த சந்தோஷத்தில் ஒரு துளியாவது அவனும் அனுபவித்துப் போகட்டுமே! வயசாக ஆக, புத்தி மழுங்கிப் போவது இருக்கவே இருக்கிறது. இப்போது அந்தச் சந்தோஷத்தில் நாம் குறுக்கே நிற்பானேன்?''

சேதுராமன் தாக்குண்டது போல் நின்றார். கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டார். மல்லிகா சொன்னவை மனத்தில் நிழற் படம் மாதிரி ஓடின. கழுத்தைத் திருப்பி, ''வா சாரதி! நீயும் வாம்மா!'' என்று கனிவுடன் அழைத்தார்.

சாரதியும் ஜோதியும் அவருக்கு விழுந்து நமஸ்கரித்தார்கள்.

சோழ நாடு தன் புராதனப் பெருமை இழந்து பல்லவரிடம் அடிமைப்பட்டுச் சிற்றரசாக இருந்த காலம். மன்னன் குமாராங்குசன் சோழ தேசம் தனது பண்டைப் பெருமைகளைத் திரும்பவும் அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு மகன் விஜயாலயனை மாவீரனாக வளர்க்கிறான்.

தலைநகர் பழையாறையில்படை வீடுகளுள் ஒன்றில் தீப்பிடித்துக்கொள்ள மக்களைக் காக்கும் பணியில் அஞ்சா நெஞ்சினனாக ஈடுபடும் விஜயாலயன் தன் முகத்தின் ஒரு பகுதியில் தீப்புண்களைப் பெறுவதுடன் ஒரு கண் பார்வையையும் இழக்கிறான். விகாரங்களை மறைத்துத் தலையணி புனைகிறான்.

முத்தரையர் குலமகள் உத்தமசீலியின் பேரழகு பற்றிக் கேள்விப்பட்டு அவளை அடைய எண்ணித் தூது அனுப்புகிறான் விஜயாலயன். ஆனால் உத்தமசீலியின் அண்ணன் திவாகரன் விஜயாலயனை அழகற்றவன் என ஏளனம் செய்து பேச இவளும் சிரித்துவிடுகிறாள்.

திரும்பி வந்த தூதன் கூறியதைக் கேட்டு ஆத்திரமடைகிறான் விஜயாலயன். பழிவாங்கும் முகமாக முத்தரையருக்குச் சொந்தமான தஞ்சை நகரைக் கைப்பற்றி அதனையே தன் தலைநகராக்கிக் கொண்டு சோழ ராஜ்யத்தை விஸ்தரிக்க எண்ணுகிறான்.

ஆயின் முத்தரையரும் பல்லவரின் கீழ் சிற்றரசராக இருக்கும் நிலையில் பல்லவ மேலாதிக்கப் படைகள் தன் முயற்சியைத் தடுக்கும் என்பது அவனுக்குத் தெளிவாகிறது.

எனவே பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையில் பரம்பரையாக இருந்து வரும் பகைமையைப் பயன்படுத்தித் தந்திரம் செய்கிறான். இந்த முயற்சியில் சென்றன் ஒரு மல்லனும் குறிஞ்சி நிலமகள் குவளையும் அவனுக்கு உதவுகின்றனர். விஜயாலயனும் ஓர் அராபியக் குதிரை வியாபாரியாக வேடம் புனைந்து தஞ்சை சென்று அங்குள்ள தன் நண்பன் ஜெயசிங்களையும் அழைத்துக் கொண்டு முத்தரையர் தலைநகரான சந்திரலேகையை அடைகிறான். அங்கு வணிகர்கள் என்ற முறையிலேயே முத்தரையரையும் உத்தமசீலியையும் திவாகரனையும் சந்திக்கின்றனர். நிகர விளைவாக முத்தரையர் பாண்டியருடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்கிறார்.

இந்த ஒப்பந்தம் பற்றிய செய்தி பல்லவேந்திரரை எட்டுகிறது. உத்தமசீலியால் நிராகரிக்கப்பட்ட விஜயாலயன் பழிவாங்கத் தஞ்சையைத் தாக்க உத்தேசித்துப் படை திரட்டுவதும் அவருக்குத் தெரிய வருகிறது.

இந்த யுத்தத்தில் தலையிடாமல் வாளாவிருந்து விடுவார் பல்லவேந்திரர் என்று விஜயாலயன் எதிர்பார்க்கிறான். 'விஜயாலயன் தோற்றால் தமக்கு ஒரு நஷ்டமும் இல்லை. விஜயாலயன் வென்றாலோ தம் அனுமதியின்றிப் பாண்டியருடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்ட முத்தரையருக்குப் பாடம் கற்பித்ததாகும்!' - இப்படி பல்லவ சக்கரவர்த்தி கணக்குப் போடுவார் என்று விஜயாலயன் நம்புகிறான்.

தனது படைகள் தஞ்சை மீது திடீர்த் தாக்குதல் நடத்தும்* சமயம் அங்கே இந்திர விழா நடந்து கொண்டிருக்க வேண்டும் என்றும் அதை நடத்தித் தர உத்தமசீலியும் திவாகரனும் வந்திருக்க வேண்டும் என்றும் திட்டமிட்டு இதையும் தன் நண்பன் ஜெயசிங்கன் மூலமாக நிறைவேற்றிக் கொள்கிறான் விஜயாலயன்.

29

சித்திரைத் திங்கள் நிறைமதி நாளுக்கு ஒரு வார காலம் முன்னதாகவே தஞ்சை இந்திர விழாக் கோலம் பூண்டது.

திரும்பின பக்கமெல்லாம் மங்கலமான பூரணகும்பச் சித்திரம் பதித்த கொடிகளும் தோரணங்களும் பட்டொளி வீசிப் பறந்தன.

வீடுகள் புதிதாக வர்ணப் பூச்சுப் பெற்றுப் பொலிந்தன.

வீதிகளைப் பூரண கும்பங்களும் பாவை விளக்குகளும் அணி செய்தன.

வீட்டு வாசல்கள் பெரிய பெரிய வண்ணக் கோலங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

மாதேவன் கோயில், மாலோன் கோயில், முருகன் கோயில், இலக்குமி கோயில், திகம்பர சூதனி கோயில் போன்ற அனைத்திலும்சிறப்பு வழிபாடுகள்.

பொன் கலசத்தில் காவிரி நீரை ஏந்தி வந்துஇந்திரனுக்கு அபிஷேகம் செய்தார்கள்.

புத்தாடை, பட்டாடைகளைப் புனைந்த மக்கள் கோவில்களில் பூவும் பொங்கலுமிட்டு வணங்கினார்கள்.



ரவிக்குல திலகன்

பல்வேறு நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதை உணர்த்த முரசங்கள் அதிர்ந்தன. ஆலய மணிகள் ஒலித்தன.

நிறைவு நாளன்று இந்திரனையும் பூரண கும்பங்களையும் யானை மேல் பவனி வரச் செய்து ஆலயத்தில் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் செய்வதென்றும் அன்று மாலை நகரின் பிரதான கலா மண்டபத்தில் முத்தரையர் குலமகள் உத்தமசீலியின் நடனம் என்றும் ஏற்பாடு. அந்த உச்ச கட்ட நிகழ்ச்சியை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அதற்கு முன்பாகப் பருவ மழையையும் உயிர் தரும் சூரிய ஒளியையும்—இரவையும் பகலையும் தீயையும் காற்றையும் வழங்கும் தேவர்களின் மனம் குளிர யாகங்கள் நடந்தன.

மன்னனுடைய செங்கோல் ஓங்கவும், பசியும் பிணியும் பகையும் நாட்டிலிருந்து நீங்கவும் வரமருளும்படி மக்கள் வேண்டினர்.

கலா மண்டபங்கள் சிறப்பான சித்திரக் கோலம் பூண்டிருந்தன. ஒரு மண்டபத்தில் கவிஞர்கள்தமது ஆற்றலை வெளிப்படுத்தினர். வித்யா மண்டபத்தில் அறிஞர்கள் விவாதங்களை நிகழ்த்தினர். மற்றொரு மண்டபத்தில் நடனக் கலைஞர்கள் மக்களை மகிழ்வித்தனர். வேறு ஒரு அரங்கில் இன்னிசை வல்லுநர்கள் அமுத கீதம் பொழிந்தனர். ஓவியர்கள் தங்கள் கலைத் திறனைக் காட்சிப் பொருளாக்கினர். வீரர்கள் தோள் தட்டி மற்போர் செய்தனர். வாட்போரும் நடத்திக் காட்டினர்.

இவற்றையெல்லாம் நாளைக்கு ஒன்றாகக் கண்டு மகிழ முன்வந்த மக்கள் தங்களை மிகச்



சிறப்பாக அணி மணிகளால் அழகுபடுத்திக் கொண்டனர்.

அறவோருக்கும் அதிகாரிகளுக்கும் அரச குடும்பத்தினருக்கும் வணிக குமாரருக்கும் வேலைகள் மிகுதியாக இருந்தன. குதிரை பூட்டிய தேர்களில் அவர்கள் இங்குமங்கும் விரைந்தபோது அவ்வாகனங்களில் கட்டித் தொங்கிய மணிகள் கண கண கண கண வென்று நாதம் எழுப்பின.

• • •

பல்லவேந்திரர் அனுமதித்த அளவில் தனது படைவீடுகளில் வசித்து, நாடு காக்கச் சபதமேற்றிருந்த வீரர்கள் மட்டும் போதா தென்று கானகத்தில் ரகசியமாகப் போர்ப் பயிற்சி பெற்று வந்த தனது வீரர்களையும் சென்று பார்வையிட்டான் விஜயாலயன்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களை வெற்றிகரமாகத் தயாரித்து மேடையேற்றிய பிரிட்டிஷ் நாட்டு டைரக்டர் பீட்டர் ப்ருக் மகாபாரதத்தைப் பெரிய அளவில் மேடை ஏற்ற முடிவு செய்திருக்கிறார். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கு பெறுவார்கள்.



அவர்களிடம் சுதந்திர சோழ ராஜ்யத்தை நிறுவும் தருணம் நெருங்குவதையும் அதற்கு முதற் படியாகத் தஞ்சையைக் கைப்பற்றி அதனைத் தலைநகராக்கிக் கொள்ளப் போவதாகவும் கூறி ஆயத்தமாயிருக்கச் சொன்னான். இவர்களுக்கு முன்பாக ஏற்கனவே போர்ப் பயிற்சியும் மருத்துவப் பயிற்சியும் பெற்றுப்பின்னர் சோழ நாடெங்கும் சாதாரணக் குடிமக்களாகவே சந்தேகத்துக்கு இடம் தரா வண்ணம் வாழ்ந்து வந்தவர்களுக்கும் தகவல் தெரிவிக்கச் சொன்னான்.

''இனியும் வனத்தில் ஒளிந்திருந்தும் ஊரில் மறைந்திருந்தும் வாழத் தேவையில்லை. புறப்படுங்கள், பழையாறையில் ஒன்று கூடுங்கள்!'' என்று ஆணையிட்டான்.

பல திங்களுக்கு முன்பாக ஒரு நாள் தான் ஆவேச வெறியுடன் அந்தக் காட்டுக்கு வேட்டையாட வந்ததும், குவளையைச் சந்தித்ததும், ரகசியமாகப் படை திரட்டும் யோசனை உதயமானதும் நினைவில் நிழலாட, அவன்கால்கள் அவனைக்கானகத்தை ஊடுருவி கழித்து ஓடிய ஆற்றங்கரைப் பக்கம் அழைத்துச் சென்றன.

உடன் வந்த குவளையிடம் அவன் சொன்னான்: ''கண்ணே! எனக்கு விடை கொடு! சித்திரா பௌர்ணமியன்று நமது படை வீரர்கள் கோழிக் குஞ்சு மீது பாயும் கழுகு போலத் தஞ்சையைத் தாக்குவார்கள்!''

''விடை கொடுப்பதாவது? நால் வகைப் படைகளுக்கு நீங்கள் தலைமை தாங்கிச் செல்கையில் மருத்துவர் படையில் நான் பங்கேற்காமல் இருப்பேனா?''

''மெய்யாகத்தான் சொல்கிறாயா குவளை! போரின் பயங்கரங்களைக்கூட என் பொருட்டு நீ சகித்துக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறாயா?''

''ஏன்? ஒரு பெண்தானே என்பதால்கேட்கிறீர்களா? போரின் பின் விளைவான உங்கள் மகிழ்ச்சியின் பொருட்டு உங்களையே துறக்க நான் சித்தமாக இருக்கும்போது போரின் துன்பங்களைத் தாங்குவதா பெரிய காரியம்?'' என்ற குவளை முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள். அவள் உடல் இலேசாகக் குலுங்கக் கண்ட விஜயாலயன், ''அசடே! அழுகிறாயா என்ன?'' என்று கேட்டுப் பரிவுடன் அவளைப் பற்றித் தன்னை நோக்கச் செய்தான். ''இதோ பார்! போரின் பின் விளைவாக நான் தஞ்சையை மட்டுமின்றி உத்தமசீலியையும் அடையத்தான் போகிறேன். என்றாலும் இரண்டையுமே நான் அடைய உறுதுணையாக இருந்த உன்னை நான் எப்படி மறக்க முடியும்? மறக்கவே முடியாது என்னும்போது என்னை நீ துறப்பது தான் எவ்வாறு சாத்தியம்?''

உத்தரீயத்தால் கண்ணீரை ஒற்றி எடுத்து ஆதரவாக அவள் தலையைத் தன் நெஞ்சில் சாய்த்துக் கொள்ள, குவளையின் இடக் கரம் உயர்ந்து அவன் தோளைப் பற்றியது. ''இந்த உறுதிமொழியைப் பெற்ற என்னை விட பாக்கியசாலி யார்?'' என்றாள். விம்மல் வெடித்தது. விஜயாலயன் பிடி இறுகியது. ''கண்ணே! குவளை!'' காதருகே அன்பில் தோய்ந்த வார்த்தைகள் மிதந்தன.

''சீக்கிரமே போர் முரசு கொட்டும்'' என்றான்.

அப்போது அவள் இதயமே முரசாக அதிர்ந்து கொண்டிருந்தது.

இது கடைசி சந்திப்பு போலவும் ஏதோ ஒரு சக்தி அவனிடமிருந்து தன்னைப் பிரிக்கப் போகிறது என்று அஞ்சியவளாகவும் ஒண்டிக் கொண்டாள்.

கானகத்தில் மரத்தைச் சுற்றி வளைத்த கொடியும், பின்னிப் பிணைந்து கொண்ட பாம்புகளும் ஆற்று நீரை அலைத்துச் செலுத்தியபடுகையும் அவர்களிடம் தோல்வியுற. மான்கள் அவர்களைத் தனியே விட்டுச் சென்றன. முயல்கள் குழிகளில் மறைந்தன. கிளிகள் பறந்து சென்று அமர வேறு இடம் பார்த்தன.

• • •


பாலுஸேரி மூலமாக
தங்கள் சேமிப்பினைக்
பெருக்கிக் கொண்டவர்கள்
ஏராளம்!
ஏன்?

தஞ்சை இந்திரவிழாவில் உத்தமசீலிக்கும் திவாகரனுக்கும் பொறுப்பும் பெருமையும் அளிக்க விரும்பிய முத்தரையர் தாமும் வந்தால் அவர்களுடைய முக்கியத்துவம் குறைந்துவிடும் என்பதால் சந்திரலேகையிலேயே பின்தங்கிக் கொண்டார். தேர்ந்தெடுத்த மெய்க் காவலர்களையும் ஒரு சிறு படையையும் அவர்களுடன் தஞ்சைக்கு அனுப்பியதுடன் தஞ்சையிலேயே இருந்த தமது எல்லைக் காவல் படையையும் எச்சரித்துத் தளபதிக்குச் செய்தி அனுப்பினார்: ''நானே வந்தால் எவ்வளவு கவலையும் கருத்தும் கொள்வாயோ அப்படி கலை அரசி உத்தம சீலியைக் காக்க வேண்டும்!''

இந்திர விழாவைக் காணவும் தலைமை தாங்கி நடத்தித் தரவும் வந்து அரச மாளிகையில் தங்கிய அண்ணன் தங்கையைத் தன் மாளிகைக்கும் எழுந்தருளக் கோரி வரவேற்று உபசரித்தான் ஜெயசிங்கன்.

சந்தனம் மணக்கும் மார்பினனாக திவாகரனும் அகில் மணக்கும் கூந்தலாளாக உத்தமசீலியும் வந்தனர். மரகத மணியோடு வைரம் இழைத்த ஆபரணங்கள் தவழ்ந்த நெஞ்சகமும், முத்தும் பவழமுமான சரங்கள் அணி செய்த கொண்டையும் எடுப்பான மேனியின் எழிலோடு ஒட்டியதான பட்டாடையுமாக அவள் ஜொலித்தாள்.

''எங்கு சென்று எதில் பங்கு பற்றுவது என்று புரியாத அளவில் ஏகப்பட்ட நிகழ்ச்சிகள்! இத்தனை ஏற்பாடுகளையும் கவனித்துச் செய்ய ஏகமாகப் பொருட் செலவாகியிருக்குமே'' என்று வியந்தாள்.

''கலையரசி வந்திருந்து நடத்தித் தருவதாக ஒப்புதல் அளித்த பிறகு செலவைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க முடியுமா? தங்கள் கௌரவத்துக்கிணங்க சிறப்புச் செய்ய வேண்டாமா? என் வணிக நண்பர்கள் உதவியிருக்கிறார்கள். முத்தரையரின் மானியமும் கிட்டியிருக்கிறது.''

''வர்த்தகர்களின் வளமையுடன் ஒப்பிட்டால் சிற்றரசர் ஏழைதான்'' என்றான் திவாகரன் குத்தலாக. ''மானியமும் அந்த அளவில்தான் இருந்திருக்கும்.''

''மன்னரின் பெருமை அவருடைய கருவூலத்தில் எடை போடப்படுவதில்லை. அவரது வெற்றிகளைக் கொண்டும் கணக்கிடப்படுவதில்லை. எத்தனை மக்களுடைய மனங்கள் அன்பினால் அவரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன என்பதைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது!''

''இந்தப் பேச்சுத் திறனின்றி வாணிபத்தில் எவ்வாறு நீங்கள் கொழிக்கமுடியும்?'' என்று கூறிச் சிரித்தாள் உத்தமசீலி.

''உப்பரிகையில் அமர்ந்து சாவகாசமாகப் பேசலாம்; என் வாசாலகத்தை மேலும் உணர்த்துகிறேன்'' என்று புன்னகைத்த ஜெயசிங்கன், ''அதற்கு முன்பாக என் மாளிகையின் பல பகுதிகளிலும் தங்கள் திருப்பாதம் படவேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தான்.

• • •

படை கிளம்புவதற்கு முதல் நாள் ஆகவமல்லன் வந்து சேர்ந்தான். புலி இலச்சினையும் குழூஉக்குறி மொழியும் வழி உண்டாக்கக் காவலர்களைக் கடந்து சுரங்கப் பாதை வழியே சோழ மாளிகையில் இளவரசரின் இருப்பிடத்தை அடைந்தான். ஜடாமகுடதாரியான ஒரு சிவனடியார் திடுமெனத் தன் முன் முளைக்கவும் விஜயாலயன் ஒரு கணம் திகைத்துப் போனான்.

''பிரபோ! மன்னிக்க வேண்டும். தாங்கள் தாமதமின்றிச் செய்தி அறிய விரும்புவீர்கள் என்பதால் வேடம் களையாமலே வந்தேன்.''

''வீண் வார்த்தைகள் எதற்கு? காயா பழமா?'' என்று பரபரத்தான் விஜயாலயன்.

''இளவரசே! தாங்கள் ஒன்று நினைக்க அதன்படி நடக்காமலும் போகுமா?'' என்ற ஆகவமல்லன் விஜயாலயனின் முகம் மலர்ச்சியுறக் கண்டதும் துணிவு பெற்றவனாகத் தான் ஆற்றலோடு செயல்பட்டு வெற்றி கண்டதை விரிவாகவே கூறிக்கொண்டான்.

பாராசிரயனால் அனுப்பி வைக்கப்பட்ட தூதன் ஆகவமல்லனுக்கு ஏற்கனவே அறிமுகமானவன்தான். அவனது குடும்ப விவகாரங்கள் சிலவும் இவனுக்குத் தெரியும். எனவே தூதன் காஞ்சியிலிருந்து திரும்பும் இடைவழியில் அவனைச் சந்தித்து ஒரு ஞானி போல் நடித்து அவன் கடந்த கால நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறவும், தூதனுக்குச் சிவனடியாரிடம் பெரு மதிப்பும் மரியாதையும் உருவாகிவிட்டன. பல்லவேந்திரரிடம் மிக முக்கியமான செய்தியுடன் சென்று விடேல் விடுகுடன் அவன் திரும்புவதாகவும் ஞானதிருஷ்டியில் சிவனடியார் கண்டு கூற தூதன் அவரை வழிபடவே ஆரம்பித்துவிட்டான்! நம்பிக்கை தந்த மன அமைதியும் பயணக் களைப்பும் ஒன்று சேர்ந்து இரவு அவன் அயர்ந்து தூங்கக்காரணமாயின. அப்போது ஆகவமல்லன் விடேல் விடுகினை உருவி எடுத்துப் படித்துவிட்டுத் திரும்பவும் அவன் இடையிலேயே செருகியும் விட்டான். விஜயாலயனின் கணிப்பு சரியாக இருப்பதைத் தெரிந்து கொண்ட பின் எங்கும் தாமதியாமல் விரைந்து பழையாறை திரும்பினான்.

''நல்லது ஆகவமல்லா! ஓய்வெடுத்துக் கொள்! நாளை நான் படைகளுக்குத் தலைமை தாங்கிப் புறப்படுகிறேன். கூப்பிடு தூரத்திலேயே வந்துகொண்டிரு. உன் உதவி எப்போது எதற்குத்தேவைப்படும் என்று சொல்வதற்கில்லை.''

''சித்தம் பிரபோ!'' என்று கூறி விடை பெற்றான் ஆகவமல்லன்.

• • •

ஜெயசிங்கனின்திருமாளிகையில்பல பகுதிகளையும் பார்வையிட்டு அதன் செல்வச் செழிப்பிலும் கலை நேர்த்தியிலும் வியந்ததுடன் புது மெருகு குன்றாது பாதுகாத்த அவனது திறனிலும் மனத்தைப் பறிகொடுத்து அவனைப் புகழ்ந்து கொண்டே நடந்தாள் உத்தமசீலி. சிற்ப ஓவியக் கூடத்தில் பல கலைப் பொக்கிஷங்கள் இருந்தன. உலோகத்தா

லான தெய்வப் படிமங்கள், வேலைப்பாடு மிக்க பாவை விளக்குகள், கற்சிலைகளாகச்சில அழகிகளின் நடனத் தோற்றங்கள், திரைச் சீலைகளில் வண்ணச் சித்திரங்களாக உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சிலரது ஓவியங்கள். அவற்றுள் ஒன்று தன்னுடையதாக இருக்கவும் நின்று ரசித்தாள் உத்தமசீலி. ''உடை மட்டும் வித்தியாசப்படாதிருந்தால் பிரதி பிம்பத்தைத்தான் காண்கிறோமோ என்று நினைக்கும்படி அத்தனை தத்ரூபமாக இருக்கிறதே!'' என்றாள்.

'' 'அழகின் அழகு' என்று இந்த ஓவியத்துக்குப் பெயர் சூட்டியிருக்கிறேன், ஒப்புவமையற்ற அழகானதால்! விலை மதிக்க முடியாத இந்த ஓவியத்தைத் தீட்டியவனுக்கு நூறு பொற்கழஞ்சுகளை அன்பளிப்பாக வழங்கினேன்!''

''உங்களையும் ஒரு ஓவியம் தீட்டி வைத்திருக்கிறீர்களா? அதற்குப் 'புகழ்ந்துரை அழகு' என்று நான் பெயர் சூட்டுகிறேன்!'' என்று கூறியபடியே புன்னகையுடன் திரும்பிய உத்தமசீலியின் கண்கள் ஒரு கம்பீரமான உருவத்தைப் பார்த்து அப்படியே நிலைகுத்தி நின்றன! அதிலே ஓர் ஆணழகன் பரந்த மார்பும், திரண்ட தோள்களும் நெடிதுயர்ந்த தோற்றமும் கொண்டு நின்றான். அவன் உடலில் முறுக்கேறித் திரண்டிருந்த தசைநார்களின் ஓட்டமும் நெளிவுகளும் கூட ஓவியத்தில் உணர முடிந்தது. ஒட்டிய வயிறும், அதைச் சுற்றிய பட்டாடையும் நெஞ்சினை அணி செய்த ஆபரணங்களும் காதுக் குண்டலங்களும் முறுக்கி விடப்பட்ட கூர் மீசையும் முகத்தின் ஒரு பக்கத்தையே மறைத்து மிளிர்கின்ற வினோதத் தலையணியும் அவனை வன்மை மிக்க ஆணழகனாகக் காட்டின. கறுப்புப் பட்டையாக அவன் வலது கண்ணை மறைத்த ஒரு பட்டுத் துணிகூட அவன் கவர்ச்சியை அதிகரித்துத்தான் காட்டியது.

''இவர்....இவர்....'' என்று பதிலை எதிர்பார்த்துத்தயங்கிய உத்தமசீலி, பதில் வராது போகவே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல், ''இளவரசர் விஜயாலயனா?'' என்று கேட்டேவிட்டாள்.

''ஆமாம்'' என்று வருத்தப் புன்னகையுடன் கூறினான் ஜெயசிங்கன். ''இந்த ஓவியத்துக்கு 'வீரத்தின் அழகு' என்று பெயர் வைத்திருக்கிறேன்!'' என்றவாறே மேலே நடந்தான். ''இதோ இங்கு முத்தரையரும் பல்லவேந்திரரும் கூட இருக்கிறார்கள்....''

உத்தமசீலி அவனைப் பின்தொடராமல் அங்கேயே நின்றாள். ''அண்ணா! இவரையா அழகற்றவர் என்று அன்று அரசவையில் கேலி செய்தாய் நீ?''

திகைத்துத் திரும்பினான் ஜெயசிங்கன். 'என்ன சொல்கிறாள் இவள்?'

''அநீதி இழைத்து விட்டாய் அண்ணா! உன் பரிகாசத்தைக் கேட்டு நானும் சிரித்து வைத்தேனே! எவ்வளவு பெரிய குற்றம்!''

''பெரிய தலைப்பாகையால் விகாரங்களை மறைத்து விட்டால் அழகனாகி விடுவானா என்ன?'' என்றான் திவாகரன்.

''அந்த விகாரங்கள் எதனால் எப்படி ஏற்பட்டது என்பதை அறிந்தால் 'வீரத்தின் அழகு' என்று நான் இந்த ஓவியத்துக்குப் பெயர் சூட்டியதன் பொருத்தம் புரியும்'' என்றான் ஜெயசிங்கன்.

''சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன்'' என்று உத்தமசீலி கேட்கவும் ஜெயசிங்கன் சுருக்கமாக விஜயாலயனின் வாலிபப் பருவ சாகஸங்களையும் அப்போது திப்புண்கள் ஏற்பட நேர்ந்த சம்பவங்களையும் விவரித்தான்.

கேட்டுக் கொண்டே இருந்த உத்தமசீலியின் கண்கள் விஜயாலயனின் ஓவியத்தை விட்டு அகலவே யில்லை!

ஜெயசிங்கன் பேசி முடித்ததும் அவள் சொன்னாள்: ''நீங்கள் மறுபடி வியாபார நிமித்தம் பழையாறை செல்லும்போது இளவரசரைச் சந்தித்து என் சார்பில் மன்னிப்புக் கோர வேண்டும்; செய்வீர்களா?''

நாத் தழுதழுக்க கண்கள் பனிக்க அவள் கூறுவதைக் கேட்ட ஜெயசிங்கன், ''கலையரசி! நீங்கள் இப்படி மனம் வருந்திப் பேசுவதைப் பார்த்தால்....'' என்றான்.

''பார்த்தால்....?''

''நீ இந்த ஓவியத்தைப் பார்த்துவிட்டு விஜயாலயனிடம் காதலே கொண்டு விட்டாயோ என்று ஜெயசிங்கன் சந்தேகிக்கிறான் போலிருக்கிறது!'' என்று கூறிச் சிரித்தான் திவாகரன்.

''இவர் சந்தேகம் என்னவோ நான் அறியேன். ஆனால் எனக்குச் சந்தேகமின்றித் தெரிகிறது. அன்று இளவரசர் விஜயாலயன் அனுப்பிய தூதனை அவமானப்படுத்தி அனுப்பியது பெரும் தவறு என்று. அண்ணா! உன்னுடைய ஆணவமும் என்னுடைய கர்வமும் சேர்ந்து என் எதிர்காலத்தையே நாசமாக்கி விட்டதோ என்று அஞ்சுகிறேன்!''

அவள் முகத்தில் கலக்கத்தைக் கண்டு திவாகரன் திகைத்தான்.

ஜெயசிங்கனோ, 'இது என்ன விபரீதம்! இவள் தன் காதலை உணர்கின்ற இதே நேரத்தில் விஜயாலயன் தஞ்சையைத் தாக்கப் படை திரட்டிப் புறப்பட்டிருப்பானே' என்று எண்ணினான். அந்தக் கவலைக் கூடமே அவன் முன் சுழன்றது! (தொடரும்)

டி. வி. நிலைய அதிகாரி (பாடகரிடம்): மறுபடி டி.வி.யிலபாடினு உதை விழும்னு உங்களுக்கு நிறைய லெட்டர் வந்திருக்குங்கிறதுக்காக முகமூடியெல்லாம் போட்டுக்கிட்டு நீங்க பாடணும்கிறதை அனுமதிக்க முடியாது சார்.''



நீங்கள் கேட்டவை தராசு

⌘ ஏரகலான், சென்னை-17.

? தனிமனிதன் சுதந்திரம் இன்று எந்தஅளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளது?

! நமக்கு உள்ள கருத்துச் சுதந்திரம் பிறருக்கும் உண்டு என்று ஒப்புக்கொள்ளவிரும்பாத ஓர் ஆரோக்கியமற்ற வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 'கடவுள் இல்லை' என்று கூற ஒருவனுக்கு அபிப்பிராய சுதந்திரம் உண்டு. ஆனால் கடவுளை நம்புகிறவன் முட்டாள்' என்று சொல்லும்போது அடிப்படை சுதந்திரம் துஷ்பிரயோகமாகிறது. வீரமணியின் கருத்துக்களைத் தாக்கத் தனிமனிதன் சுதந்திரம் உண்டு; ஆனால் காரை வழிமறித்து அவரைத் தாக்க யாருக்கு உரிமை உண்டு?

⌘ வெ. வைத்தியநாதன், களஞ்சேரி.

? அரசியல்வாதியும் இலக்கியவாதியும் எந்த விஷயத்தில் ஒன்றாக இணைந்து செயல்படுகிறார்கள்?

! எம். ஜி. ஆர். என்ற உருவத்தில்! 'கள்ளச் சாராயத்தை ஒழித்த பின் மது விலக்கை மீண்டும் அமல் படுத்துவேன்' என்ற அவரது அறிக்கை இதையே உணர்த்துகிறது. அலை ஓய்ந்த பின் சமுத்திர ஸ்நானம்!

⌘ ப. சந்திரன், இரா. புதுப்பட்டி.

? எதிரியை எப்படி எடை போடவேண்டும்?

! புத்திசாலித்தனமாக. 'டெலிஃபோனை டாப் பண்ணி உரையாடலை ஒட்டுக்கேட்கும் அளவுக்கு கன்று அவ்வளவு முக்கியமான மனிதரா என்ன?' என்று அமைச்சர் ஸ்டபன் கேட்டது போல் அசட்டுத்தனமாக எடை போடக் கூடாது. இதன் மூலம் முக்கியஸ்தர்களின் டெலிஃபோன்களை டாப் செய்து ஒற்றுடல் புரிவதை ஒப்புக்கொண்டிருக்கிறார் அமைச்சர்.

⌘ மா. மோகன், கோவை.

? இவ்வளவு சிறந்த ஸ்போர்ட்ஸ்மென்கள் இருந்தும் இந்தியா ஏன் எந்த விளையாட்டுத் துறையிலும் சேம்பியனாக முடியவில்லை?

! ரமேஷ் கிருஷ்ணன் என்று கேள்விப்பட்டதில்லையா? அண்மையில் அவர் கிராண்ட் ப்ரீ டென்னிஸ் சாம்பியனாகி நாட்டுக்குப் பெருமை தேடித் தந்ததை மறக்கலாமோ?

⌘ பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.

? நீங்கள் முன்கோபியா?

! மீனம்பாக்கம் விமானநிலையத்தில்போயிங் விமானத்தை இறக்கி ஏற்றப் பயிற்சி அளிப்பதாகக் கூறிக்கொண்டு ஒரு 707 நாலு நாட்கள் தொடர்ந்து செவிப்பறையைக் கிழித்தபோது தாங்க முடியாத கோபம் வரத்தான் செய்தது. ஆனால் இதைத் தடுக்க ஒருவர் 'திமன்றமே ஏறியிருக்கிறார் என்று தெரிய வந்தபோது. 'சரி, நம்மை விடவும் கோபமும் ரோஷமும் உடையவர் ஒருவர் இருக்கிறார்' என்பதில் ஒரு திருப்தி, மகிழ்ச்சி!

⌘ ஏ. எம். பழனிச்சாமி, அரியநாச்சிபாளையம்.

? சிறந்த சிந்தனையாளர் யார்?

! ஆறாவது வகுப்பு மட்டுமே படித்து 13வது வயதில் திருமணம் செய்து கொண்டு விட்டபோதிலும் அந்தப் பெண் தனது சொந்த முயற்சியால் ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி ஆகியவற்றில் பட்டம் பெற்றார். தமிழ் இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தார். பிறகு நான்கு மொழிகளிலும் சேர்ந்து லட்சத்துக்கு மேற்பட்ட வரிகளில் ஏராளமான கவிதைகளை எழுதிக் குவித்தார். அவை முப்பதுக்கு மேற்பட்ட நூல்களாகப் பிரசுரமாயின. எண்பதுக்கு மேற்பட்ட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இத்தனைக்கும் பிறவியிலிருந்தே அவரை உடல் ஊனமொன்று வாட்டியது. 54வது வயதில் மறைந்த அவருக்கு ஆகஸ்டு 24ல் மணிவிழா. ''இலக்கிய எரிமலை'' என்று இந்தப் பத்திரிகையால் வர்ணிக்கப்பட்டுள்ள அவர்: தேசபக்தர் ஹாலாஸ்யத்தின் மகளும் கர்மயோகி பி. எஸ். கிருஷ்ணஸ்வாமியின் மனைவியுமான திருமதி ஹா. கி. வாலம்.

⌘ எஸ். லதா, ஈரோடு.

? சாவி - கோபுலு தகராறு என்ன ஆச்சு?

! சாவி — சுஜாதா தகராறு என்ன ஆச்சோ அதுவே ஆச்சு! சண்டையும் சமாதானமும் சாவிக்குப் பூட்டும் திறவுகோலும் போல!

⌘ கே. எம். கணேசன், குப்புச்சிப்பாளையம்.

? நீங்கள் எப்போது சலிப்படைந்திருக்கிறீர்கள்?

! இ. மு. க. ஊழியரின் உண்ணு விரதத்தை எதிர்த்து அ. இ. மு. க. தொண்டர்கள் உண்ணும் விரதத்தை மேற்கொண்டு பிரியாணி முதல் பிஸ்கட் வரை பலவற்றை ஊரறிய நாள் முழுவதும் தின்று தீர்த்த அநாகரிகத்தைப் பற்றிப் படித்தபோது ரொம்ப ரொம்ப சலிப்!

✖ ஆர். ராகவாச்சாரி, கொரட்டூர்.

? ஜெயில் சிங்கு, ஜைல் சிங்கு — எது சரி?

! விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றபோது சிறை அதிகாரி பெயர் வினவ இவர் பெருமையாக 'ஜெயில் சிங்' என்றாராம். அதுவே நிலைத்து விட்டது. எனவே ஜெயில் சிங் என்பதே சரி.

✖ வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

? வீக்லியில் கருணாநிதி-எம். ஜீ. ஆரைக் கிண்டல் பண்ணி சோ எழுதியிருக்கும் கட்டுரை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! 'சோ இந்திராவையும் கடுமையாக விமரிசிப்பவர்தானே? வீக்லி ஒரு கட்டுரை கேட்டு வாங்கிப் பிரசுரிக்குமா?' என்று நினைத்தேன்.

✖ எஸ். பாஸ்கரன், சென்னை-14. ★

? கோயில்களில் தமிழில் அர்ச்சனை பற்றி உங்கள் கருத்தென்ன?

! பக்தர்கள் விரும்பிக் கேட்கும் மொழியில் நடக்கட்டும். அந்த ஒரிடத்திலேனும் தகுதி உடையவர்கள் மட்டுமே நியமனமாகட்டும்

✖ நாகுவேலன், மதுரை-15.

? கண் சிமிட்டுதல் நல்லதா, கெட்டதா?


! யாரைப் பார்த்துக் கண்சிமிட்டுகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. வம்பில் மாட்டிக் கொள்ளாதவரை அடிக்கடி கண் சிமிட்டுவது நல்லதே. கண்களுக்கு அதிகமாக வேலை கொடுக்கும் புரூப்ரீடர்,




✖ ஹா. இ. வாலம்



✖ டி. எம். எஸ்.



✖ ஸ்டீபன்



✖ ரமேஷ்கிருஷ்ணன்

சினிமா எடிட்டர் போன்றுர் கண் சிமிட்டுதல் மட்டும் போதாது; தேவையில்லா நேரங்களில் (தூங்கிவிடாமல்) கண் மூடியிருக்கவும் பயிலவேண்டும். கண்களுக்கு இதுவே போதிய ஓய்வு இட்டும். சிவக்காது.

? சமீபத்தில் படித்த புத்தகம் எது? ரசித்த நாடகம் எது?

இரண்டும் ஒன்றே! Streamers என்ற நாடகம். வியட்நாம் போரில் ஈடுபட்டிருந்த சில வீரர்களைப் பற்றியது. யுத்தத்தில் அவர்களுடைய ஈடுபாடின்மை, பயங்கள், மன விகாரங்கள், துயர்கள் முதலியவற்றை பிட்டுப் பிட்டு வைத்த சோக நாடகம். வியட்நாம் யுத்தம் நடத்திய ஜனாதிபதி ஜான்ஸனை ஹிட்லருக்கு ஒப்பிடும் அளவுக்குத் துணிந்து எழுதப்பட்ட இந்த நாடகத்தைப் படித்தபோது எனக்குத் தோன்றியது: எமெர்ஜன்ஸி காலத்தை வைத்து யார் எப்போது இங்கு நாவலோ நாடகமோ எழுதப் போகிறார்கள்?

✖ பி. எல். பரமசிவம், மதுரை

? டி. எம். சௌந்தர ராஜன், பாலமுரளிகிருஷ்ணு, மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன்-நால்வரில் பக்திப்பாடலை சிறப்பாகப் பாடக் கூடியவர் யார்? வரிசைப் படுத்தவும்!

! பாலமுரளி குரலினிமையில் ஃபர்ஸ்ட்; சோமு பக்தி வசப்படுவதில் முதல்; சீர்காழி உச்சரிப்பில் வ. ஒன்; டி. எம். எஸ். பாவபூர்வமாகப் பாடுவதில் டாப். நம்மை உருக்குவதிலோ நால்வருமே சாம்ப்ஸ்!

★ ரூ. 10/- பரிசு பெறுபவர்:
எஸ். பாஸ்கரன்,
36, பூரம் பிரகாச ராவ் சாலை
பாலாஜி நகர், சென்னை-14.

ரூ. 3125 3 ஆண்டுகளில் ரூ. 5000 ஆகிறது!

ஸ்ரீராம் அளிக்கும் மறுமுதலீட்டுத் திட்டம்.

சேருபவர்களுக்கு 10 கிராம் வெள்ளிப் பதக்கம் அன்பளிப்பு*



17% வட்டி, 3 ஆண்டுகளுக்கு ஸ்ரீராம் அளிக்கும் பிக்செட் டெபாஸிட் திட்டம்.

(குறைந்தபட்ச டெபாஸிட் ரூ. 3000)

எத்திட்டத்தில் வேண்டுமானாலும் சேரலாம் பலன் பெறலாம்.

வட்டி விகிதங்கள்:

வட்டி விகிதம் / டெபாஸிட் காலம்	மாதாமாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற	மறு முதலீட்டுத் திட்டத்தில் மொத்தமாக வட்டி பெற
1 ஆண்டு	**14.0%**	**15.0%**	**15.5%**
2 ஆண்டுகள்	**14.5%**	**16.0%**	**17.5%**
3 ஆண்டுகள்	**15.0%**	**17.0%**	**20.0%**

சலுகைகள் :

உங்கள் டெபாஸிட் தொகை பன்மடங்காகப் பெருகுகிறது. அவசரத் தேவைகளுக்கு கடன் பெறலாம்.

உத்தரவாதம் :

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் பதிவுசெய்யப் பெற்ற பார்ட்னர்ஷிப் (Registered Partnership) நிறுவனம். இந்த நிறுவனம் மோட்டார் வாகனங்களை தவணை முறையில் வாங்குபவர்களுக்கு கடன் உதவி செய்கிறது. இத்துறையில் 15 வருட அனுபவமும் திறமையும் மிக்கவர்களால் நிர்வகிக்கப் படுகிறது.

SHRIRAM INVESTMENTS

YOUR FINANCIAL FRIEND IN NEED

உங்கள் டெபாஸிட்டை அனுப்பும் முகவரி:

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001
போன்: 28545/37890

கிளைகள்:

- தி. நகர்: 54, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017
- அண்ணா நகர்: A7, அண்ணா நகர் ரவுண்டானா (கனரா பாங்க் அருகில்), சென்னை 600 102
- மயிலாப்பூர்: 21, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை 600 004
- பெங்களூர்: பிரவுனம்மா டவர் (Cellar Floor), 70/1, மிஷன் ரோடு, பெங்களூர் 560 027

*ஸ்ரீ லக்ஷ்மி திருஉரு பதித்த இப்பதக்கம் உங்கள் பூஜை அறையிலும், பணப்பெட்டியிலும் பாதுகாக்க உகந்தது.


ADWAVE SI 2094

"ஒருமையுடன் நினது மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று கூறியபடி தனது 747 ஜம்போ'வை ஓட்டத் தொடங்கும் ஏர்-இந்தியா விமானி காப்டன் பாலசுப்பிரமணியம். நான் முதன் முதலில் 'தமிழன்' பிறகுதான் 'விமானி' என்கிறார் நண்பர்களால் பாலா என்று செல்லமாக அழைக்கப்படும் இவர். கம்பராமாயணம், திருக்குறள், திருவாசகம் இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். படிக்காத புத்தகங்களே இல்லை. படித்தது மட்டுமின்றி அவைகளில் ஆராய்ச்சியே செய்து வைத்திருக்கிறார்.

விமான ஓட்டியாக உலகத்தின் பல பாகங்களுக்கு விமானத்தை ஓட்டிச் செல்வதால் ஏற்படும் அனுபவங்களைக் கேட்கலாமென்று போனால் தமிழாகிய பெருங் கடலிலிருந்து இவர் கரையேறினால்தானே!

இளம் வயதில் பாலா ராணுவத்தில் ஜூனியர் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். இவருக்கு மேலதிகாரியாக இருந்த ஆங்கிலேயருடன் ராணுவ விமானத்தில் முதன் முதலாகப் பிரயாணம் செய்தார். மேலதிகாரி விமானத்தில் செய்த வித்தைகளைப் பார்த்து இவருக்கும் விமானி ஆகும் ஆசை ஏற்பட்டது. இந்திய விமானப் படையில் ரேடார் ஆபரேட்டராக ஒரு வருஷம் டிரெயினிங். அதில் முதல் ரேங்கில் வந்தார். விமான ஓட்டி டிரெயினிங்குக்காக காப்டன் பாலா ஜோத்பூர் சென்றார். இவர் படித்ததோ தமிழ் மீடியம். இவர் படிக்க வேண்டிய புத்தகங்களோ தொழில் நுட்ப வார்த்தைகள் நிறைந்த ஆங்கிலப் புத்தகங்கள்.

காப்டன் பாலா





இருந்த இடமோ மிகக் கடுமையான கட்டுப்பாடுள்ள ராணுவ முகாம். இரவு பத்து மணிக்கு மேல் விளக்குகள் கூடாது. பகல் பூராவும் டிரெயினிங். இரவு குளியலறையில் விளக்கு வைத்துக் கொண்டு படிப்பாராம். இந்த டிரெயினிங்கிலும் முதலில் வந்தார்.

இப்பொழுது ஹிந்தி, உருது, தெலுங்கு கன்னடம், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்ச் முதலிய மொழிகளில் சரளமாகப் பேசும் காப்டன் பாலாவுக்கு அப்பொழுது ஷூலேஸ் கட்டிக்கொள்ளக் கூடத் தெரியாது! எப்படியோ விமான ஓட்டியாகி, 1954ம் ஆண்டு அஸ்ஸாம், நாகாலாந்து, திபெத் ஆகிய இடங்களுக்கு டெகோடா விமானத்தை ஓட்டிச்சென்று அங்குள்ளராணுவத்தினருக்கு உணவு, தபால் சப்ளை செய்வார். பூமியிலிருந்து சுமார் 18000 அடி உயரத்தில் திபேத்தில் 'காரகோரம்' ரேஞ்சில் 'தௌலத் பெக் ஓல்டி' என்ற விமான நிலையத்துக்கு 'ரன்வே' சர்வே செய்து கொடுத்தது இவரது திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

1957 முதல் ஸ்ரீநகர், காஷ்மீர் எல்லைப்புறத்தில் இருந்தார். இவருக்கு விடுமுறையே கிடைக்காது. எனவே தமக்குத் திருமணம் என்று திருமணப் பத்திரிகை அச்சிட்டுக் காட்டி விடுமுறை வாங்கிச் சொந்த ஊர் சென்றார்.

1961ல் உண்மையாகவே திருமணத்திற்கு விடுமுறை பெற மேலதிகாரிகளை நம்பச் செய்ய மிகவும் கஷ்டப்பட்டார்.

'இன்று ஏர் இந்தியாவில் விமானியாக இருக்கும் காப்டன் பாலா ரம்பை, ஊர்வசிகளான விமானப் பணிப் பெண்கள் என் மனைவி சொர்ணத்தின் கால் தூசிதான் என்கிறார்.

விடை:

அந்தப் படத்தில் இருப்பவர் இவர் தான்!

1955-ல் எடுக்கப்பட்ட சுருளி ராஜன் புகைப்படம் அது!



கோவா விடுதலைப் போரின் போது நல்ல கும்மிருட்டில் ராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு பம்பாய்க்கும், கோவாவுக்கும் இடையே ரன்வேயில் விளக்குகள் கூட இல்லாமல், விமானம் ஓட்டினார். 1962ல் சீனா – இந்தியா போரில் இவர் ஓட்டிய விமானத்தைப் பகைவர்கள் தாக்க விமானத்தில் கூட இருந்த நாலைந்து ராணுவ இளைஞர்கள் இவர் கண் முன்பாகவே குண்டுகளால் துளைக்கப்பட்டு விமானத்திலேயே உயிர் துறந்துவிட விமானம் எரியும் நிலையில் நமது எல்லையில் கொண்டு வந்து சாமர்த்தியமாக இறக்கிய பாலா தம்மைக் கைகுலுக்க வந்த மேலதிகாரியின் கையை நிராகரித்துவிட்டுக் கதறிக் கதறி அழுதார்.

நண்பர் ரமண மகரிஷிகளின் புத்தகம் ஒன்றை இவருக்குப் படிக்கும்படி அளித்தார். அதைப் படிக்கப் படிக்க அதுவரை கடவுள் நம்பிக்கை இல்லாமலிருந்த காப்டன் பாலா 'அவனன்றி ஓரணுவும் அசையாது! கூட விமானத்தில் இருந்த நால்வர் மேல் பாய்ந்த குண்டுகள் தன்மேல் ஏன் பாயவில்லை? எனவே எல்லாவற்றுக்கும் மீறிய சக்தி ஒன்று உண்டு' என்று நம்ப ஆரம்பித்தார்.

1964ம் ஆண்டு ராணுவ விதவைகள் நிதிக்காக கோயம்புத்தூரில் ''கண்ணீர்த் துளிகள்'' என்ற தமிழ் நாடகத்தைத் தாமே எழுதி டைரக்ட் செய்து, ஒரு நடிகர் வர இயலாதபோது தாமே நடித்து சுமார் 72000 ரூபாய் வசூல் செய்து கொடுத்தார். இந்த நாடகத்தின் முடிவில் இவர் எழுதிய ஒரு பாட்டு, அதாவது ஒரு மேஜர் வந்து விதவைகளுக்கு ஆறுதல் கூறும் காட்சியில் ''அறிஞனும் கடவுளும் அழிவதில்லை மரணம் பிரித்திடினும் அவன் நிலை அழிவதில்லை'' என்று தொடங்கும் பாடல் கவிஞர் கண்ணதாசனின் பாராட்டைப் பெற்றது.

1968ல் ஏர்-இந்தியாவில் துணை விமானியாகச் சேர்ந்த காப்டன் பாலா இப்போது 747 கமாண்டராக ஜம்போவைச் செலுத்துகிறார்.

''உலகம் முழுவதையும் இணைக்கும் மொழி ஆங்கிலம்தான்'' என்கிறார். ''747 ஜம்போவை இயக்கும் உங்களால் காரவல், ஏர்பஸ் போன்ற விமானங்களை ஓட்ட முடியுமா?'' என்று கேட்டதற்கு, ''கஷ்டம்தான்'' என்கிறார். ''டாக்டருக்குப் படித்த ஒருவர் ஏதாவது ஒன்றில் ஸ்பெஷலைஸ் செய்துவிடுவது போலத்தான் நாங்களும் குறிப்பிட்ட விமானம் ஓட்டுவதில் ஸ்பெஷலைஸ் செய்கிறோம்.'

கம்போடியா சென்று அங்குள்ள பிரும்மாண்டமான தமிழ் கல்வெட்டுக்களை ஆராய்ச்சி செய்து ஒரு நூலை எழுதியிருக்கிறார்.

இவர் பெருமைப்படும் விஷயம், இன்று இந்திய ராணுவத்தில் இருக்கும் சுமார் 1500 விமானிகளைத் தாம் பழக்கி இருப்பது குறித்து.


—லட்சுமி கண்ணன்

ஒரே டீலக்ஸ் டிவி TS62

சீரான உன்னத ஹை-ஃபை ஒலிக்கு 10 வாட் ஒலிபெருக்கியும், 20 செ.மீ. டியூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்ட ஒரே டீலக்ஸ் டிவி சாலிடெர் TS62. இத்துடன் உங்கள் ரெக்கார்டு பிளேயர், டேப் ரெக்கார்டர், எப்எம் ஏஎம் (FM AM) டியூனர் முதலியவற்றை இணைத்து, டிவியில் நிகழ்ச்சி இல்லாத நேரங்களிலும் சாலிடெர் டிவியை உபயோகிக்கலாம்.

செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட தெளிவாகத் தெரியும் படத்தோற்றம். இதில் சாலிடெருக்கு நிகர் சாலிடெர் ஒன்றே.

இது மட்டுமின்றி, துரிதமான, சிறந்த சர்வீஸ் அளிப்பதில் பிரசித்திப் பெற்றது சாலிடெர்



HE/189 A

சாலிடெர்

காணாமல் போன கோப்பு

கி. ராஜேந்திரன்



கூவோ ஆயில் என்ற ஷாங்காங் நிறுவனத்திடமிருந்து இந்திய அரசு 175 கோடி ரூபாய்க்குப் பெட்ரோலியம் எண்ணெய் வாங்கியதில் சர்வதேச மார்க்கெட் நிலவரத்துடன் சம்பந்தமில்லாத அதிக விலை தர ஒப்புக் கொள்ளப்பட்டது என்றும் இதனால் பாரத மக்களுக்கு 10 கோடி ரூபாய்வரை நஷ்டமாகியுள்ளது என்றும் ஒரு குற்றச்சாட்டை அருண்ஷோரி சுமத்தப் போக நாடாளுமன்றத்தில் ஏக அமர்க்களம்!

இது தொடர்பான முறைகேடுகள் தாமதங்கள் முதலியன பற்றி யெல்லாம்நாடாளுமன்றம் விவாதிக்கையில் அவை மக்களுக்குப் புரியாமல் போய்விடுமோ என்ற கவலையில் ஏ. என். சிவராமன் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, பின்குறிப்பு எல்லாம் எழுதி வருகிறார்.

நானும் என் பங்குக்குக் கடமையாற்றத் தீர்மானித்து, பழுத்த அனுபவமுள்ள ஆளும் கட்சி அரசியல்வாதி கோப்புலால் ஃபைல்வாலாவைப் புது தில்லி சென்று சந்தித்துப் பேசினேன்.

• • •


''மிஸ்டர் ஃபைல்வாலா! கூவோ ஆயில் பேரத்தில் பாரத மக்களுக்கு இந்திரா காங்கிரஸ் அரசு 10 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தி விட்டதாகக் கூறப்படுகிறதே!''


ஃபைல்வாலா என்னை ஒரு துரும்பு போலக் கருதி அலட்சியமாகப் பார்த்தார். ''பிசாத்துக் காசு பத்துக் கோடி ரூபாய்! இதற்குப் போய் அந்த அருண்ஷோரிதான் ஏகமாக அலட்டிக் கொள்கிறான் என்றால் நீ வேறு எதற்குத் துள்ளுகிறாய்?''

''என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்!''

''பிறகென்னய்யா! பத்துக் கோடி நஷ்டம் பிரமாதமா? நமது அரசுத் துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்குப் பத்துக்கோடி ரூபாய் நஷ்டப்படக் கூடிய ஆற்றல் உள்ளவை தெரியுமில்லையா? மாருதியைத் தேசிய உடைமையாக்கியதில் ஒரே நாளில் ஒரு அவசரச் சட்டம் மூலம் பல கோடிகளைப் பிரதமர் பாரத மக்களுக்கு நஷ்டமாக்கிய சாதனைக்கு இதெல்லாம் ஈடாகுமா? ஆசிய விளையாட்டு என்ற சில நாள் ஆர்ப்பாட்டத்துக்குச் செலவாகும் ஆயிரம் கோடியில் பெரும் பகுதி நஷ்டக் கணக்கில்தானே சேர வேண்டும்? ஏன் உங்கள் மாநிலத்திலேயே வீராணம் திட்டம், கூவம் மணக்கும் திட்டம் இவற்றால் ஏற்பட்ட நஷ்டங்களை மக்கள் சுமக்கவில்லையா? இன்னும்....''

''போதும், மிஸ்டர் கோப்புலால், போதும்! எனக்குத் தலை சுற்றுகிறது... நான் வேறு கேள்வி கேட்கிறேன்:





''அரசுத் துறை நிறுவனங்களெல்லாம் ஒழுங்காக நடக்கின்றனவா என்று மேற்பார்வையிட ஒரு பார்லிமெண்டரி கமிட்டி இருக்கிறதே. அது இந்த குவோ ஆயில் விவகாரம் பற்றி விசாரிக்க முற்பட்டபோது அதற்கு அரசின் ஒத்துழைப்பு கிட்டவில்லையே! கோப்பு காணாமல் போய்விட்டதாகக் கூறப்பட்டதாமே!''

ஃபைல்வாலா பெரிதாகச் சிரித்தார். ''ஏனய்யா இது ஒரு அதிசயமா? நாடெங்கும் மத்திய மாநில அரசாங்கங்களில் உள்ள லட்சோப லட்சம் ஃபைல்களில் எத்தனையோ ஆயிரம் ஃபைல்கள் அவ்வப்போது காணாமல் போவதும் சம்திங் உதவியுடன் அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பதும் அன்றாட நிகழ்ச்சிகள்தானே. சில சமயங்களில் துரதிர்ஷ்ட வசமாக பல கோப்புகள் தீப்பற்றி எரிந்துவிடுவது கூட உண்டு என்று கேள்விப்பட்டிருப்பீரே! அவ்வாறிருக்க சம்திங் உதவியின்றியும், தீக்கிரையாகாமல் காத்தும் பதினைந்து மாதங்களானாலும் விடாப்பிடியாகக் கோப்பைத் தேடிக் கண்டுபிடித்து, அரசுத்துறை நிறுவனங்கள் பற்றிய பார்லிமெண்டரி கமிட்டியினிடம் கொடுத்தோமே, அதைப் பாராட்டி ஒரு வார்த்தை யாருக்கும் கூறத் தோன்றுது! ஹூம்!''

''அதென்னவோ வாஸ்தவம்தான்'' என்று ஒப்புக்கொள்வது தவிர எனக்கு வேறு வழியில்லை. அடுத்த கேள்வியைப் போட்டேன்: ''நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்னை எழுந்தபோது அரசுத் துறை நிறுவனப் பார்லிமெண்டரி கமிட்டியின் மினிட்ஸ் என்ற சுருக்கத்தை மட்டும் தாக்கல் செய்து, 'கோப்பு காணாமல் போனது பற்றி கமிட்டியில் யாரும் பிரச்னை கிளப்பவேயில்லை' என்று அரசு சார்பில் கூறப்பட்டிருக்கிறதே!''

''இதிலென்னய்யா தப்பு?'' என்று பாய்ந்தார் ஃபைல்வாலா. ''மினிட்ஸைத் தாக்கல் செய்து பிரச்னை எழுப்பப்படவில்லை என்று கூறும்போது அந்த மினிட்ஸைப் பொருத்தமட்டில் அதில் யாரும் ஃபைல் பிரச்னையைக் கிளப்பவில்லை என்று கூறுவதாகத்தானே அர்த்தம்? கமிட்டியின் முழு அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டு யாரும் ஃபைல் பிரச்னையை எழுப்பவில்லை என்று கூறியிருந்தால் தப்புத்தான்; ஆனால் அவ்வாறு நடக்கவில்லையே!''



''ரொம்ப சரி'' என்று நான் தலையாட்டியதும் அடுத்த கேள்விக்குத் தயார் என்று நிமிர்ந்து உட்கார்ந்தார் ஃபைல்வாலா.

''அரசு முழு அறிக்கையைத் தாக்கல் செய்யவில்லை. ஆனால் எதிர்க் கட்சியினரே அரசுத் துறைக் கமிட்டியின் முழு அறிக்கையைப் பார்லிமெண்டில் தாக்கல் செய்திருக்கிறார்களே!''

''இது ஒரு பெரிய சாதனையாக்கும்! ஏதோ பார்லிமெண்டின் நேரத்தை வீணாக்கவேண்டாம் என்பதற்காக முழு அறிக்கைக்குப் பதில் மினிட்ஸைத் தாக்கல் செய்தோம். இந்தச் சுருக்கம் போதாது; முழு அறிக்கையையும் படித்து மண்டையை உடைத்துக் கொள்ளத்தான் செய்வோம் என்று சில எம். பி.க்கள் பிடிவாதம் பிடித்தால் நாங்கள் என்ன செய்வது? நன்றாக மூளையைக் குழப்பிக் கொள்ளுங்கள் என்று விட்டுவிட வேண்டியதுதான்!''

''முழு அறிக்கையில் காணாமல் போன கோப்பு பற்றி விவாதிக்கப்பட்டது என்பதற்கும் அந்தக் கோப்பு பிரதமர் வீட்டில் தான் காணாமல் போனது என்பதற்கும் ஆதாரம் இருக்கிறதே!''

''இருந்துவிட்டுப் போகட்டுமே ஐயா! என்ன மோசம் போய்விட்டது? பிரதமர் வீடு என்ன வங்கியின் ஸேஃப் டெபாஸிட் லாக்கருக்குள்ளா கட்டப் பட்டிருக்கிறது? அவர் இல்லத்தில் ஏராளமான ஃபைல்கள் குவிகின்றன. சப்ராஸிகள் தூசு தட்டும் போது இடம் மாற்றி வைத்து விடலாம்; அல்லது பெருச்சாளிகள் ஓரிரு ஃபைல்களை இழுத்துக் கொண்டு போய்விடலாம்!''

''இப்படி பிரதமர் வீட்டிலேயே ஃபைல்கள் காணாமல் போய் 15 மாதங்கள் கழித்து அகப்பட்டால் அது பற்றி மக்கள் மனசில் ஏதேதோ விரும்பத் தகாத சந்தேகங்கள் எழலாம் இல்லையா? இதைத் தவிர்க்கவும், கோப்புக்கள் காணாமல் போகாமல் இருக்கவும் பிரதமர் வீட்டில் ஏதாவது ஏற்பாடு செய்யக் கூடாதா?''

''இது நீங்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரிய வேண்டுமாக்கும்? நாங்கள் ஏற்கெனவே இது பற்றி நடவடிக்கை எடுத்து விட்டோம்!''

''அப்படியா? என்ன செய்தீர்கள்?''

'' 'ஃபைல்கள் காணாமல் போகும் மர்மம் ஆய்வுக் கமிட்டி' ஒன்று நியமித்தோம். கமிட்டி சுறுசுறுப்பாய் இயங்கிச் சீக்கிரமே ஒரு அறிக்கை தயாரித்து அளித்து விட்டது!''

''ரொம்ப சந்தோஷம். அந்த அறிக்கை எப்போது வெளியிடப்படும்?''

''ஃபைல்கள் காணாமல் போகும் மர்மம் பற்றிய ஆய்வுக் கமிட்டியின் அறிக்கை அடங்கிய ஃபைல் காணாமல் போன மர்மம் விடுவிக்கப்பட்டவுடன் அதை வெளியிட்டு விடுவோம்'' என்றார் கோப்புலால் ஃபைல்வாலா.

(கடைசிப் பக்கத்தில் முதல் தரமான சில கடைசி அனுபவங்கள் தொடர்ந்து இடம் பெறும்!)



உச்சி வெயில் வேளை. போக் ரோடு. மத்தியான நித்திரையில் அத்தனை பங்களாக்களும் ஆழ்ந்திருக்க – ஒரே ஒரு பங்களாவில் மட்டும் படு சுறுசுறுப்பு. ஆபூர்வ ராகங்களை ஹிந்தியில் காமிராவுக்குள் சுற்றிக்கொண்டிருந்தார் பாலச்சந்தர்.

அவரிடம், ''கடைசியாக நீங்கள் எழுதிய நாடகம் எது?'' என வினவியதும், ''என்னுடைய கடைசி நாடகத்தை நான் இன்னும் எழுதவில்லை'' என்று பதில் கூறினார். ''திரைத் துறையிலேயே நான் நிலைத்திருப்பேன் என்பதில் எனக்கு இன்னும் நிச்சயம் ஏற்படவில்லை. திரைத் துறையில் கிடைக்கும் புகழ் சீஸனல்தான். என்னைப் பொறுத்த வரையில் திரைத் துறை புகுந்த வீடுதான்... புகுந்த வீடு என்னைக் கைவிடும்போது பிறந்த வீடான நாடகத் துறைக்குச் செல்வேன்.

கடைசி நாடகம்

ஆகவே என்னுடைய கடைசி நாடகத்தை நான் இதுவரை எழுதவில்லை'' என அவர் கூற, ''திரைத் துறைக்கு வருமுன்னர் நீங்கள் எழுதிய கடைசி நாடகம் எது?'' என என் வினவை மாற்றியபோது...

''நவக்கிரஹம்....''

''அதன் கதையை எழுதுவதற்கு உங்களுக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்ச்சி ஏதாவது....?''

''ஐந்து விரல்களும் ஒன்றாக இருப்பதில்லை. அதுபோல் மனிதர்களின் குணநலன்கள் மனத்துக்கு மனம் மாறுபடுகிறது. ஒன்றையொன்று நேருக்கு நேர் சந்திக்காத நவக்கிரகங்கள் போல் முரண்பட்ட குண நலன்களைக் கொண்ட மனிதர்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாடகம் எழுதினால் என்ன என்று நான் எண்ணியதன் விளைவே ''நவக்கிரகம்''. வித்தியாசமான அதன் கதையமைப்பின் மூலம் என்னை வித்தியாசமானவனாகக் காட்டிக்கொள்ள வாய்ப்பு அளித்தது நவக்கிரகம்தான். மேலும் ஏற்கெனவே புகழ் பெற்றிருந்த மனோரமா மேலும் புகழ் பெறுவதற்கும் நாகேஷ், ஸ்ரீகாந்த், மேஜர் ஆகியோர் திரைத் துறையில் நுழைவதற்கும் காரணமாக அமைந்தது நவக்கிரகம்.''

''நவக்கிரகத்துக்குப் பிறகு நீங்கள் நாடகம் எழுதாமைக்குக் காரணம்....''

''நேரமின்மைதான்.''

''திரைத் துறையில் ஈடுபட்டுள்ள பலர் நாடகத் துறையிலும் ஈடுபடும்போது – நேரமில்லை என்று கூறுவது....?''

'' 'நேரம் தவறாமை' என் உயிர் மூச்சு. ஆறு மணிக்கு நாடகம் தொடங்கும் என்று அறிவித்தால் சரியாக ஆறு மணிக்கு நாடக மேடையின் திரை விலகியாக வேண்டும். இல்லையெனில் ஏதோ ஒரு குற்றத்தைச் செய்து விட்டது போல் என் மனச்சாட்சி என்னை உறுத்தும். திரைத் துறையில் நுழைந்த பிறகு பங்க்சுவாலிட்டியை என்னால் காப்பாற்ற முடியவில்லை. அதே நிலைதான் என் நாடகங்களில் வழக்கமாக இடம்பெறும் நாகேஷ், மேஜர், ஸ்ரீகாந்த் ஆகியோருக்கும். எனவே நாடகத் துறையைக் கைவிட வேண்டியதாயிற்று.''

''நவக்கிரக நாடகத்தின்போது நடந்த இனிய அல்லது இன்னல் செய்தி ஏதாவது?''

''நவக்கிரக நாடகத்தின் போது நாகேஷ்.....'' என இழுத்த இயக்குனர் சிகரம், 'தட் இஸ் ப்யூர்லி பெர்ஸனல்'' எனப் பாதியில் நிறுத்திக் கொள்கிறார். நாகேஷை 'அவன்' என ஒருமையில் பாசத்துடன் குறிப்பிடும் பாலசந்தர் சொல்ல வந்ததைச் சொல்லாமல் நிறுத்த அதை மறுபடியும் அழுத்திக் கேட்பது நாகரிகமல்ல என நான் விடைபெறும்போது...

தம் எதிரே சான்ஸ் கேட்டுத் தாடியுடன் நின்றுகொண்டிருந்த இளைஞரை முதுகில் தட்டிய பாலசந்தர்....

''இவீட்டை நான் தாடியுடன் அறிமுகப் படுத்தியதிலிருந்து என்னிடம் சான்ஸ் கேட்டு வருபவர்கள் அனைவரும் தாடியுடன் வந்து நிற்கின்றனர்'' என்று கூறிச் சிரிக்கிறார்.

– ஏ. வி. எம். கணேஷ்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran


சிவசங்கரி
நட்பு
முழுநாவல்

இடைவேளை.

'ஆர்ட் ஃபிலிம் கணக்கா படம் வந்திருக்கு. அவசியம் பாருங்க சாரங்கன்' என்று படத் தயாரிப்பாள நண்பர் தொண தொணத்ததை நம்பிக்கொண்டு வந்தது தப்பாகப் போய்விட்டது. படம் ரொம்ப சுமார். கொஞ்சம் அழுகை, கொஞ்சம் வசனம், கொஞ்சம் தமிழ் பண்பாடு, கொஞ்சம் கிராமம், கொஞ்சம் இளசுகளின் காதல் என்று சம்பந்தா சம்பந்தமில்லாத சம்பவங்களின் கூட்டு.

எழுந்து போய்விடலாமா?

ஜிப்பாவைப் பின்னுக்குத் தள்ளி மணி என்ன என்று பார்த்த நிமிஷத்தில் அவன் என் எதிரில் வந்து நின்ருன்.

''வணக்கம். நீங்கதானே?....''

அவன் கேள்வியை முடிக்கும் முன்னரே, என்ன கேட்கப்போகிருன் என்பதைப் புரிந்துகொண்ட இனுசில் லேசான புன்னகையுடன் தலையாட்டி எதிரில் நின்றவனை ஏறிட்டேன்.

எனக்குச் சின்னவனுகத்தான் இருப்பான். முப்பத்தைந்து இருந்தால் அதிகம். ஆண்பிள்ளைக்கு கொஞ்சம் குட்டை. நல்ல நிறம். தடித்த உதடுகள். கறுப்பு மீசை. மைனஸ் இரண்டு என்று சொல்லும் கண்ணுடி.

என்னைப் பார்த்ததில் அவனுக்குள் சின்னதாகப் படபடப்பு, சந்தோஷம் உண்டாயிருந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

காலியாக இருந்த பக்கத்து இருக்கையில் தயக்கத்துடன் உட்கார்ந்தான். நிறையச் சிரித்தான்.

ஒருமுறை வணக்கம் சொல்லிவிட்டதை மறந்து இன்னொரு முறை 'வணக்கம்' சொல்ல, சிரிப்பை அடக்கிக் கொண்டு நானும் பதிலுக்கு 'வணக்கம்' என்றேன்.

''என் பேர் பத்மநாபன். இந்த ஊர் பாங்குக்குப் புது ஏஜண்டா வந்திருக்கேன். இரண்டு நாள் ஆறது. ஹோட்டல்லே தங்கி இருக்கேன். ஃபாமிலி மெட்ராஸ்லே இருக்கு — நல்லதா வீடு கிடைச்ச உடனே அவங்களை வரவழைச்சிடுவேன்....''

நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கிருன் என்று யோசித்துக் கொண்டே ''அப்படியா'' என்றேன்.

''என் வொய்ஃப் ஸ்வர்ணவுக்கு உங்க எழுத்துக்கன்ணு உயிர். உங்க கதைகள் வெளியாற பத்திரிகைகள் ஒண்ணு விடமாட்டா. தேடித் தேடி வாங்கிட்டு வந்து படிச்சிட்டு 'இதை இப்படி எழுதியிருக்காரு—அதை அப்படி எழுதியிருக்காரு'னு எனக்கு விவரமா சொல்லுவா... நம்ப மாட்டீங்க நீங்க. ஒரொரு சமயம் நடு ராத்திரிலே எழும்பி உட்கார வைச்சி, 'அடடா, என்னமா எழுதியிருக்காரு'னு விமர்சனம் பண்ணது கூட உண்டு, சார்....''

லேசான முறுவலுடன் ''அப்படியா?'' என்றேன் திரும்ப.

''இந்த ஊருக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆர்டர் வந்தப்புறம் — 'மிஸ்டர் சாரங்கன் அந்த ஊர்லதான் இருக்கார். வீடு சுருக்கப் பார்த்திடுங்க... அங்க வந்ததும் அவரைச் சந்திச்சி ஆசை தீரப் பேசிட்டுத்தான் மறு வேலை பார்க்கறது' — னு நூறு தரம் சொல்லிட்டா. இன்னிக்கு எதேச்சையா உங்களைச் சந்திச்சதைத் தெரிவிச்சேன்னு ஹா, ஹானு மாஞ்சு போயிடப் போறு....''

''அ....சோடா கலர்... அ... சோடா கலர்...''.


''பானம் விற்றுக் கொண்டு போன வாண்டு ஒருவனை 'இங்க வாப்பா' என்று அவன் அழைத்தான்.

இரண்டு கோலா வாங்கி, உடைக்கச் சொல்லி நான் வேண்டாம் வேண்டாம் என்று மறுக்க, மறுக்க என் கையைப் பிடித்து ஒன்றை வைத்தான்.

''ப்ளீஸ் சாப்பிடுங்க சாரங்கன். இப்படி இண்டர்வெல்போது உங்களைப் பார்த்துப் பேசிட்டு இருப்பினதை ஸ்வர்ணு கேள்விப்பட்டா 'நல்லாப் பேசினீங்க, தாகத்துக்குக் கூட ஒண்ணும் வாங்கிக் கொடுக்காம'னு சண்டை போடுவா. ப்ளீஸ் டேக் இட்....''

அரைவாசி குடித்துவிட்டு மீதியைப் போதும் என்று பையனிடம் கொடுத்தேன்.

திருப்பதி லட்டு அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்று பொதுமக்கள் நிறையப்பேர் வருத்தப்படுகின்றனர். புகார்களும் வருகின்றனவாம். லட்டுவின் விலையும் இப்போது அதிகம். அளவும் குறைந்து விட்டது. லட்டுவில் முன்பெல்லாம் காணப்படும் கல்கண்டு, முந்திரிப் பருப்பு, நெய் ஆகியவை கணிசமாகக்குறைந்துவிட்டிருக்கின்றன. போலி லட்டு விற்பனை வெளியே பெருகி இருக்கிறது என்று கருதுகிருர்கள். வடையைப் பற்றிப் பிரச்னை இல்லை.



பத்மநாபனைப் பார்த்து 'தாங்க்ஸ்' என்றேன்.

விளக்குகள் அணைக்கப்பட்டு ஸ்லைடுகள் ஓடத் தொடங்கின.

அவன் எழுந்து கொண்டான்.

''அப்ப, நான் வரேன் மிஸ்டர் சாரங்கன். ஸ்வர்ணு வந்தப்புறம் உங்களைச் சந்திக்கக் கூட்டிட்டு வரேன்.''

''போன் டன்னிட்டு, நான் இருக்கேனுனு தெரிஞ்சிக்கிட்டு வாங்க.....''

''ஷ்யூர். உங்க நம்பர்?''

சொன்னேன்.

அவன் தன் வீட்டுக்குச் சென்றதும் படம் பார்த்தது போதும் என்று வீட்டுக்குப்போக நான் எழுந்தேன்.

• • •

இரண்டு வாரங்கள் கழித்து ஒரு நாள்.

மாலை ஐந்து மணி.

வாக் போகக் கிளம்பிக் கொண்டிருந்தபோது போன் அழைத்தது.

''ஹலோ?''—

''மிஸ்டர் சாரங்கன் இருக்காரா?''—

''பேசறேன்''—

''குட் ஈவ்னிங். நான் பத்மநாபன்.''

''எந்த பத்மநாபன்?''

''பாங்க் ஏஜண்ட். அன்னிக்கு சினிமாவிலே பார்த்தமே?''—

ஓ எஸ். நினைவு வந்து விட்டது.

''ஹலோ — நல்லா இருக்கீங்களா?''—

''இருக்கேன் மிஸ்டர் சாரங்கன். என் வொய்ஃப் ஊரிலேந்து நேத்து வந்திட்டா. வந்ததிலேந்து உங்களைச் சந்திக்கணும்னு நச்சரிச்சிட்டே இருக்கா... இன்னிக்கு சாயங்காலம் ஃப்ரியா இருக்கீங்களா? ஆறரை மணி வாக்கிலே நாங்க அங்க வரலாமா?''

யோசித்தேன்.

இப்போது 'வாக்' போனால் திரும்ப ஆறு ஆகிவிடும். வந்து பாதியில் நிறுத்தியிருக்கும் குறுநாவலை முடித்து நாளைக்குக கல்கிக்கு அனுப்ப வேண்டும்.

ம்ஹூம் — இன்று முடியாது.

''இன்னிக்குக் கொஞ்சம் கஷ்டப்படும், மிஸ்டர் பத்மநாபன். அவசரமா எழுத வேண்டிய வேலை இருக்கு. நாளைக்கு நான் சேலம் போகிறேன். நீங்க அடுத்த வாரம் போன் பண்ணிட்டு வர முடியுமா? ஐ ஹோப் யூ டோன்ட் மைண்ட்...''

வழக்கமாக இப்படி வெளிப்படையாக என் நிலையைச் சொன்னால், அதை எல்லோரும் சரியாகப் புரிந்து கொள்வார்கள் என்பது இல்லை.

—நம்மைச் சந்திக்க இவனுக்கு விருப்பம் இல்லை. அதான் சாக்குப் போக்குச் சொல்கிறான் — என்பார்கள்.

—பெரிய எழுத்தாளர் என்ற திமிர். அதை வாசகர்களாகிய நம்மிடமே காட்ட வேண்டுமா — என்பார்கள்.

எல்லாம் சும்மா — பிலியாக இருப்பது போல ஒரு பாவனை. உடனே சந்தித்து விட்டால் நாம் மட்டமாக நினைக்கப் போகிறோமோ என்ற பயம் — என்பார்கள்.


இந்த மாதிரி கொன்ஷடையாகப் பேசுபவர்களைச் சமாளிப்பது கொஞ்சம் கஷ்டம்தான் என்றாலும், என்னைப் புரிந்துகொள்ளாதவர்களிடம் சிரமப்பட்டாவது நிலைமையை விளக்க நானும் முயல்வதில்லை.

வேஷம் போடாமல் இருக்கிறேன். புரிந்துகொண்டால் சந்தோஷம். இல்லாவிட்டாலும் ஒன்றும் நஷ்டம் இல்லை.


நல்லவேளையாக, பத்மநாபன் இந்த ரகத்தில் சேர்ந்தவனாக இருக்கவில்லை.

நான் பேசி முடித்ததுமே தயக்கமின்றி ''ஓ.கே. நீங்க போயிட்டு வாங்க. நான் அடுத்த வாரம் போன் பண்ணறேன். ஹாவ் எ நைஸ் ட்ரிப்'' என்று சொல்லி விட்டான்.

****************-***************



குயின் எலிசபெத்-2 என்னும் உல்லாசக் கப்பலில் கடந்த பத்து வருடங்களில் பயணிகளுக்காகத் தயாரித்து வழங்கப்பட்ட உணவு வகைகளின் மொத்த எண்ணிக்கை 21 மில்லியன்! இது தவிர கப்பலில் பணிபுரிவோருக்கென தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் 9½ மில்லியன். தலைமை சமையல்காரர் தயாரிக்கும் மளிகை லிஸ்ட் எப்படி இருக்கும் தெரியுமா? பதினோராயிரம் பவுண்ட் உப்பு; பதினைந்தாயிரம் காலன்கள் பால்; இருபத்தைந்து ஆயிரம்பவுண்ட் வெண்ணெய்; மற்றும்.... அப்பாடா!



மூல வியாதி, குளிர் ஜுரம், பல்வலி, மூளை தெளிவு பெற, நாசிக் குருதி நீங்க, ஆயுள் நீடிக்க, அம்மைப் பிணியாளருக்கு, கண் குரு விழுந்தவர்களுக்கு (உஸ்....!) காது வலிக்கு, காது இரைச்சல் நீங்க, கீல் வாதம் போக, காமாலை, இருதய பலவீனம் இத்தனைக்கும் சிறந்த மருந்து எது தெரியுமா? வெங்காயம்தான். பச்சை வெங்காயத்தைச் சேர்த்துக்கொள்வதால் பல உபாதைகளிலிருந்து விடுபடலாம் என்கிறது பழந்தமிழ் வைத்தியம். (பெரியார் பேச்சிலேயே சேர்த்துக் கொள்வார்!)

அடுத்த வாரம் சொன்னபடியே பத்மநாபன் போன் செய்ய மறு நாள் மாலை அவர்களை வரச் சொன்னேன்.

என் வீடு ஊருக்கு வெளியில். எனக்குச் சொந்தமான பண்ணையில் இருக்கிறது.

சட்டென்று நினைத்தால் வரமுடியாத இடம்.

காலையில், மாலையில் என்று எண்ணி இரண்டு பஸ்கள் பண்ணை வழியாகப் போகும். மற்ற சமயங்களில் டவுனிலிருந்து ஆட்டோவோ சைக்கிள் ரிக்ஷாவோ அமர்த்திக் கொண்டு வந்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் காலை வீசிப் போட்டு, நடடா ராஜா என்று ஆனந்தமாய் நடந்து வரலாம்.

வேண்டியவர்கள் எப்படியாவது வந்து சந்தித்து விடுகிறார்கள். வேண்டாதவர்களைப் பற்றிக் கவலை இல்லை.

நான் ஒரு வித்தியாசமான மனிதன். எனக்காக வாழும் ஜாதி. என் விருப்பு வெறுப்புக்களை, என் ரசனைகளை, என் செயல்களை எனக்காகவே வளர்த்துப் பராமரித்துக் கொண்டிருப்பவன். அதற்காகப் பிறர் உணர்வுகளை மதிக்காதவனென்று அர்த்தம் இல்லை. எனக்குள் இரட்டை எண்ணங்கள் இல்லை. அதனால் வேஷம் போட அவசியம் இல்லாதவன்.

இப்படிச் சுலபமாய் வரமுடியாத இடத்தில் இருப்பதாலோ அல்லது அதிக ஒட்டுதல் இல்லாமல் இருப்பதாலோ, என்னமோ, நேரம், காலம் இல்லாமல் உங்கள் வாசகர்கள் என்று சொல்லிக்கொண்டு நிறையப் பேர் வருவதில்லை. — ரொம்ப சுஷிக்கொண்டு பழகுகிற நண்பர் குழாமும் கிடையாது.

ஐந்து அடிக்க இரண்டு நிமிடங்கள் இருக்கையில் பத்மநாபன் மனைவி சகிதம் வந்து விட்டான்.

அவன் கையில் ஒரு கூடை. பழங்களா?

அவள் கையில் கட்டாய்ப் புத்தகங்கள்.

''வணக்கம்.''

''வணக்கம். வாங்க.''—

உள்ளே வராமல் மெய் மறந்து அவள் நிற்க, 'வா' என்று முழங்கையைப் பற்றி பத்மநாபன் அசைத்தான்.

கூடத்து நாற்காலிகளில் உட்கார்ந்தோம்.

கையில் இருந்த புத்தகங்களை அவள் படபடப்பு அடங்காமலேயே பக்கத்து மேஜையில் வைக்க, அவற்றில் சில நழுவி விழுந்தபோது பார்த்தேன். — அத்தனையும் என் புத்தகங்கள்தான். கர்சிப்பைத் திருகினாள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள். எச்சில் கூட்டி விழுங்கினாள். பார்வையை என்மேல் நிறுத்தினாள். கூடத்தைச் சுற்றிப் பார்த்தாள்.

பத்மநாபன் நட்புடன் சிரித்தான். மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சீண்டினான்.

''என்ன பேசாம இருக்கே ஸ்வர்ணா! உன்னால பேசாமக்கூட இருக்க முடியுமா? ஆச்சரியமா இருக்கு! மிஸ்டர் சாரங்களைப் பார்க்கணும்னு ஓயாமத் துருவினே—இப்படி வாய் அடைச்சிப் போயிட்டியே. என்ன சமாசாரம்....'' மனைவியைச் சீண்டினவன் என் பக்கம் திரும்பி ''உங்களைப் பார்த்ததுலே அவளுக்கு ஒண்ணுமே புரியலே மிஸ்டர் சாரங்கன்!'' என்றான்.

அவள் மெதுவாக வாய் திறந்தாள்.

''நா.... நான் உங்க ரசிகை... விசிறி... உங்க எழுத்துக்கள்னு எனக்கு வெறி, பைத்தியம். இப்படி, இப்படி, உங்களை நேருக்குநேர் இத்தனை கிட்டத்துலே பார்ப்பேன்னு நினைக்கலே... அதான் வந்து... வந்து.....''

நான் சிரித்தேன்.

''இவ்வளவு மிரண்டு போறதுக்கு எனக்கு இரண்டு தலை, நாலு கண்ணா இருக்கு? உங்களை மாதிரி சாதாரண மனுஷன்தானே?''

''நீங்களா? சாதாரண மனுஷனா? இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதிங்க சார். உங்களுக்கு உடம்பு பூரா மூளை.... நீங்க எழுதற ஒவ்வொரு வார்த்தைக்கும் உயிர் இருக்கு... உங்க கதை ஒவ்வொண்ணும் மனசைத் துளை போட்டுப் பிராண்டும்.... உங்க....''

''ஸ்வர்ணாவுக்கு மூட் வந்திடுச்சு.... இனிமே எந்தச் சக்தியாலும் அவளை நிறுத்த முடியாது...''


பத்மநாபன் வேடிக்கையாகப் பேச, அவள் அவன் பக்கம் திரும்பி ''சும்மா இருங்க பத்மூ'' என்று கெஞ்சிவிட்டு என்னிடம் தொடர்ந்தாள்.

''இங்க இந்த அத்வான காட்டுலே உட்கார்ந்துகிட்டு ஊர் மூலே முடுக்கிலே நடக்கிறதை யெல்லாம் கச்சிதமா, பார்த்தாப்பல, உங்களாலே எப்படி சார் எழுத முடியறது? வேலே இல்லாத இளைஞனே வெச்சுத் தொடர் எழுதினீங்களே! அது — அற்புதம்... அந்த மாதிரி பசங்க வீட்டுக்கு வீடு இருக்காங்க சார்... 'ஏன் புரியவில்லே?'— கதைலே ஆறு வயசுப் பெண்ணோட மன ஓட்டத்தைச் சித்திரிச்சீங்களே... அடேயப்பா... எப்படி சார் அத்தனே தத்ரூபமா அந்தச் சின்னப் பெண்ணைக் கண் முன்னுலே கொண்டு வர முடிஞ்சுது? அப்புறம், உங்க கதாபாத்திரங்கள்... அகிலா, தர்மா, சங்கர், ஆத்மா, சீதா, இந்து, இயாகு.... போங்க சார், எந்த காரக்டரைச் சொல்றது, யாரை விடறது? எப்படி, எப்படி சார் வாழ்க்கையிலே சந்திச்ச நபர் மாதிரி எல்லாரையும் உருவாக்க உங்களாலே முடிஞ்சுது? பயங்கர கற்பனே சார் உங்களுக்கு ஹாட்ஸ் ஆஃப் டு யூ...''

பையன் கொண்டு வைத்த காப்பிக் கோப்பைகளை அவர்களிடம் நீட்டினேன்.

''கற்பனையும் இல்லே, பயங்கரமும் இல்லே... எல்லா கதாபாத்திரங்களுமே ஓரளவுக்கு, இங்கே, அங்கே நான் சந்திச்சவங்கதான்.''

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲-✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲



''கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா?'', ''கல்யாண வீட்டில் தாலிகட்ட மறந்தமாதிரி'' என்றெல்லாம் பழமொழிகள் சொல்லப்படுகின்றன. இது தவறு. கையில் போட்டிருக்கும் பூணுக்கு, அதைப் பார்க்கக் கண்ணாடி தேவையா என்பது சரியான விளக்கம். 'கைப் பூணுக்குக் கண்ணாடி தேவையா' என்பது சரியான பழமொழி. எல்லோருடைய ஆசியையும் பெற, தாலியைத் தட்டில் வைத்துச் சபையில் காட்டுவது வழக்கம். ''கல்யாண அவசரத்தில் தாலி காட்ட மறந்தது மாதிரி'' என்று இருந்திருக்கிறது. நாளாவட்டத்தில் பழமொழிகள் மாறிவிடுகின்றன.

''அப்ப, உண்மைச் சம்பவங்களை வெச்சிக்கிட்டுத்தான் நான் எழுதறேன்னு நீங்க சொன்னதா ஒரு பத்திரிகைலே போட்டிருந்ததே நிஜம்தானே?''—

''ம்ம்... வெரி ட்ரூ... பார்த்து, கேட்டு, படித்து, பழகி தெரிஞ்சிகிட்ட அனுபவங்களை அடிப்படையா வெச்சித்தான் நான் எழுதறேன். நிஜ வாழ்க்கைலே நடக்கறதை அப்படியே சொன்னு சில சமயங்கள்லே உப்பு சப்பு இல்லாம இருக்கும். அதனுலே, உண்மைக் கரு, அல்லது கதாபாத்திரத்தை எடுத்துக்கிட்டு இங்கே அங்கே கற்பனே சேர்த்து எழுதறதுதான். காய்கறிகளா இருக்கிறதை வேக வைச்சி, பக்குவமா மசாலா சேர்த்து அவியலா நீங்க செய்யற மாதிரிதான் இதுவும்....''

ஸ்வர்ணு கண்ணைகல நான் பேசுவதை உன்னிப்புடன் கேட்டாள்.

இவள் சந்தோஷம்தான் என் சந்தோஷமும் என்கிற மாதிரி பத்மநாபன் அக்கடா என்று உட்கார்ந்து விட்டான்.

அன்றைக்கு ஸ்வர்ணு ஏகமாய்க்கேள்விகளைக் கேட்டாள். ஒன்றுமே படிக்காமல், காலி டப்பாவாக அலட்டும் சிலரைப் போல அல்லாமல், ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் அவள் கேட்டது எனக்குப் பிடித்தது.

வாஸ்தவத்திலேயே அவள் நிறையப் படித்திருந்தாள். என்னுடையது என்று இல்லே, புதுமைப்பித்தனில் துவங்கி இன்றைக்குப் பிரபலமாகிக் கொண்டிருக்கும் பட்டுக்கோட்டை பிரபாகர் வரையில் படித்திருந்தாள்.

அவள் கேள்விகளில் சிரத்தை இருந்தது; தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

நான் எழுதும் அறையை அவள் பார்க்கஆசைப்பட, அழைத்துச் சென்று காட்டினேன்.

காற்றோட்டமான அறையும், சுவர் முழுக்க ஷெல்பாக மாற்றி அடுக்கியிருந்த புத்தகங்களையும், வசதியாய்ச் சாய்ந்து எழுதும் மேஜை நாற்காலியையும் தடவிப் பார்த்தாள்.

எதிர் ஜன்னல் அருகில் சென்று கம்பிகளில் முகத்தைப் பதித்துக் கொண்டு அஸ்தமிக்கும் சூரியனையும், வெளியில் பரந்து கிடந்த வயல் வெளியையும் வெறித்தாள்.

''மாங்கள் — வயல்கள்... சிவந்த வானம் — அணில்கள் ஓணான்கள் — பட்சிகள் — சார் — இப்பத்தான் புரியுது உங்க கதைகளிலே இதுங்களுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்னு — இயற்கையை அனுபவிக்க நீங்க எழுதறதாலேதான் எங்களையும் அத்தனே ரசிக்கச் செய்யறீங்க....''

மீண்டும் கூடத்துக்கு வந்த பிறகு கொண்டுவந்திருந்த புத்தகங்களை என் முன் நீட்டி, ''கையெழுத்துப் போட்டுத் தாங்க ப்ளீஸ்'' என்றாள்.

நான் போட்ட நிமிஷத்தில் பக்கத்தில் நின்றுகொண்டு ''உங்களைப் பார்க்கப் போறேன்னு தெரிஞ்சதுமே உங்க பப்ளிஷர் கிட்ட போயி இருந்த அத்தனை புஸ்தகங்களையும் ஒரு காப்பி வாங்கிட்டு வந்திட்டேன்....'' என்று அதீத உற்சாகத்துடன் பேசினாள்.

நடுநடுவில் தங்களைப் பற்றியும் புருஷனும், மனைவியுமாய் மாறி மாறி விவரங்கள் சொன்னார்கள்.

இருவருமே வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர்கள். அவன் எம். ஏ. அவள் பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி. திருமணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஒன்பது வயதில் ஒரு பெண். மாதவி—இங்கு அழைத்து வந்து, திரும்ப இரண்டு வருஷத்தில் ட்ரான்ஸ்பர் என்றால் படிப்பு பாதியில் திண்டாடுமே என்று சென்னையிலேயே அவள் தாத்தா பாட்டியிடம் விட்டு வைத்திருக்கிறார்கள்.

அன்று அவர்கள் கிளம்பும்போது மணி ஏழரை என்றது.

அதிசயமாய், அத்தனை நேரம் அவர்களுடன் பொழுதைக் கழித்தது எனக்கே வேடிக்கையாக இருக்க வண்டி வரைவழி அனுப்பச் சென்றேன்.

''காரில் ஏறுமுன் ஸ்வர்ணா சுற்றி ஒரு தரம் பார்த்தாள்.

''இது பூரா உங்க பண்ணைதானா சார்?''—

''ம்ம்...''

''எவ்வளவு ஏக்கர் இருக்கும்?''

சொன்னேன்.

''அம்மாடி! அத்தனும் பெரிசா? நீங்க ஒருத்தராவா இத்தனையும் பார்த்துக்கிறீங்க?''—

''ம்ம்'' —

சற்றுத் தயங்கி வந்தது அடுத்த கேள்வி—

''உங்க கூட இங்க யார் இருக்காங்க?'' —

''பூ மீன் உறவுக்காரங்க? யாருமில்லே...''

''இத்தனும் பெரிய இடத்திலே தனியாவா இருக்கீங்க?''—

நான் சிரித்தேன்.

''தனியா எங்கே இருக்கேன்? ஆட்கள் இருக்காங்க. இரண்டு நாய் இருக்கு. அப்புறம்....''

''இல்லே சார். நான் கேட்கிறது....''

ஏதோ கேட்கப் போனவளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் பத்மநாபன் அவசரமாய்ப் பேசினான்.

''நாழியாச்சு ஸ்வர்ணா... சார் டைமை நாம அதிகமா எடுத்துக்கிட்டோம்.... அவருக்கு இன்னும் எத்தனை வேலை இருக்கோ... கிளம்பலாம் வா.....''

''உங்களுக்குப்போன் பண்ணிப் பேசலாமா சார்?தொந்தரவுன்னு நினைக்க மாட்டீங்களே!'' என்று கேட்டு நான் இல்லை என்று சொன்ன பிறகு அவர்கள் கிளம்பிச் சென்றார்கள்.

உள்ளே போய்ச் சாப்பிட்டு, நீட்ஷேயைக் கையில் எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்த பிறகும் கூட அவர்கள் நினைப்பு எனக்குள் எழுந்து கொண்டே இருந்தது.

கலகலப்பான ஜோடி.

இருவருமே வெகுளிகள். ஆனால் புத்திசாலிகள்.

வேஷம் இல்லை. பணம் இருக்கிறது என்ற பகட்டும் இல்லை.

அவர்களை எனக்குப் பிடித்துப் போனதை நினைத்துக்கொண்டே உறங்கிப் போனேன்.


• • •

சரியாக இரண்டாம் நாள் காலை ஸ்வர்ணா போனில் என்னை அழைத்தாள்.

''ஸ்வர்ணான்னு ஒரு அம்மா பேசுறாங்க'' என்று வேலைக்காரன் சொன்னதும் எழுதிக் கொண்டிருந்த பேனாவைக் கீழே வைத்து விட்டு, பேசலாமா வேண்டாமா என்று அரை நிமிஷம் யோசித்தேன்.

யாரோடும் அத்தனை பழக்கம், நெருக்கம் வேண்டாம் என்று ஒதுங்கி வாழும் இயல்பு — அடிக்கடி பேச்சு வைத்துக் கொள்வது தேவையா — என்று கேட்டது.

எறும்புகள் கூடப் பேசிக்கொள்ளுமாம். எறும்புக் கூட்டத்தைக் கூர்ந்து பார்த்தால் இது தெரியும். பேசிக்கொள்வது முழுவதும் தன் மீசையின் மூலமாகத்தான். ஆபத்து, உணவு இருக்குமிடத்தை இன்னொரு எறும்புக்குத்தெரிவிப்பது, இடமாற்றம் பற்றிப் பேசிக்கொள்வது எல்லாமே (மீசையால்) தடவிக் கொடுப்பது அடிப்பது ஆகிய செய்கைகள் மூலம் தெரியப் படுத்திக் கொள்ளுமாம். இந்தத் தகவல் எறும்பு உலகம் பற்றிய புத்தகத்தில் காணப்படுகிறது. (நம்புவோம்!)



பேசினவரைக்கும் எதுவும் குற்றமாகப் படாததாலும், அந்த முகத்தில், குரலில் தெரிந்த ஆர்வம் நிஜமாகப் பட்டதாலும், பரவாயில்லை பேசலாம் என்று தீர்மானித்து ரிஸீவரை எடுத்து ''ஹலோ'' என்றேன்.

''குட் மார்னிங் சார்... காலேல தொந்தரவு செய்யறதுக்கு மன்னிக்கணும். விகடன் தொடரைப் படிச்சப்புறம் சும்மா இருக்க முடியலே. இரண்டு வார்த்தையாவது அதைப் பத்திப் பேசணும்னு துடிப்பா இருக்கு... ஒரு இடத்துலே எத்தனை அழகா விளக்கம் கொடுத்திருக்கீங்க சார்! 'சமுத்திரத்தையே பார்க்காதவனிடம் ஒரு டபரா ஜலத்தைக் கொண்டு வந்து கொட்டி, இந்த மாதிரி லட்சோபலட்சம் டபரா ஜலம் சேர்ந்த நீர்ப் பரப்பில் வெள்ளையாய் அலைகள் இருக்கும், பெரிய பெரிய கப்பல்கள் மிதக்கும், அடியில் பிரும்மாண்டமான திமிங்கிலம் வகையறுக்கள் சஞ்சரிக்கும், முத்து பவழங்கள் விளையும்—என்று எப்படி யெல்லாம் விளக்கினாலும் கூட அவனால் ஒரு சமுத்திரத்தின் அழகை, கம்பீரத்தை வாஸ்தவமாய்க் கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா?'—னு எழுதியிருக்கிறதைப் படிச்சிட்டு அசந்து போயிட்டேன். வார்த்தைகளால் மட்டும் சில விஷயங்களைப் புரிய வைக்கிறது கஷ்டம்கிறதைத் தெளிவா விளக்கிட்டீங்க... அப்புறம்...''

அன்றைக்கு அவள் ஒரு நல்ல ரசிகையாக, நான் எழுதியிருந்ததை என் கோணத்திலிருந்தே ஆராய்ந்து விமரிசித்தது எனக்குத் திருப்தியைத் தந்தது.

வெறும் முகஸ்துதிக்காகப் பேசிப் பிரபலமான இவர் தொடர்பு நமக்குப் பெருமை தரும் என்ற கண்ணோட்டம் இல்லாதது நன்றாகப் புரிந்ததால், அவளுடைய விமரிசனங்களை, மற்ற எழுத்தாளர்களின் எழுத்துக்கள் பற்றிய கருத்துக்களை நான் வரவேற்க முற்பட, சீக்கிரமே — ஒரு வாரத்துக்கு ஒரு தரம் நாங்கள் பேசுவது, நாலு நாட்களுக்கு, அப்புறம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என்று ஆயிற்று.

• • •

அந்த முறை என் இல்லத்துக்கு வந்தவர்கள் 'அவசியம் எங்க வீட்டுக்கு ஒரு நாள் விருந்து சாப்பிட வாங்க சார்; எத்தனை முறை கூப்பிட்டுட்டோம்'... என்று ஏக்கத்துடன், அன்புடன் அழைக்க, செவ்வாய் அன்று இரவு உணவுக்கு வருவதாகச் சொன்னேன்.

ஸ்வர்ணா பேச்சில், பத்திரிகை புஸ்தகங்கள் படிப்பதில் மட்டும் கெட்டிக்காரி அல்ல, புத்திசாலி, ரஸனை உள்ளவள், காரியத்தில் தேர்ந்தவள் என்பது அன்று எனக்குப் புரிந்து போனது.

கர்நாடக இசையிலும் இந்துஸ்தானி இசையிலும் மிகச் சிறப்பாகத் தன் திறமையைக் காட்டக் கூடியவர் வயலின் வித்வான் திரு எம். எஸ். கோபாலகிருஷ்ணன். சென்னை டெலிவிஷன் நிலையம் இவரை வைத்து ஒரு புது மாதிரியான இசை அரங்கம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. கர்நாடக இசையிலும், ஹிந்துஸ்தானி இசையிலும் அமைந்திருக்கும் ஒரே மாதிரியான ராகங்களை அடுத்தடுத்து அதே நிகழ்ச்சியில் வாசிக்கப் போகிறார்.



வரவேற்பு அறைச் சுவரில் பெண் குழந்தை ஒன்று விளக்கு வெளிச்சத்தில் படிப்பது போன்ற ஓவியம்; சாப்பாட்டுக் கூடத்தில் சின்ன மரச் சுருளால் செய்யப்பட்ட கோபதேசம்.


''ராத்திரியான நேரங்களிலே பொழுது போக வேண்டாமா சார்? தூங்கியே பொழுதைக் கழிச்சா எப்படி?''—

பிஸிபேளாஹூளி அன்னமும், பால் பாயசமும் நாவை மணக்க வைத்த பின் வயிற்றில் இறங்கின.

''நீங்க ரொம்ப அதிருஷ்டக்காரர் பத்மநாபன். எல்லாம் தெரிஞ்ச மனைவி அமைஞ்சிருக்காங்க...'' என் பாராட்டில் பத்மநாபன் குளிர்ந்து போனான்.

''இவ செய்திருக்கிற மற்ற பெயிண்டிங்குகளையும் நீங்க பார்க்கணும் சாரங்கன். (மிஸ்டரை விட்டு விடுங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன்) அந்த க்ராஸ்ஸ் டிச் படுக்கை விரிப்பைக் காட்டு ஸ்வர்ணா....''

முகத்தில் பெருமை கூத்தாட அவன் அவளை இன்னும் தூக்கி வைத்துப் பேச, ஸ்வர்ணா சந்தோஷமாய் ''எல்லாத்துக்கும் இவங்க கொடுக்கிற உற்சாகம்தான் காரணம் சார்... முதுகிலே தட்டிக் கொடுக்கக் கொடுக்க நான் நல்லா வேலே செய்யறேன். ரகசியம் அங்கதானே இருக்கு!'' என்றான்.



சென்னையில் முதன் முதல் டிராபிக் சிக்னல் அமைக்கப்பட்ட இடம் எழும்பூர் ஓவர் பிரிட்ஜ் அருகில் தான். மற்ற இடங்களில் அதற்குப் பின்னர்தான் சிக்னல்கள் அமைக்கப் பட்டன. இப்போது எழும்பூர் அருகே உள்ள சிக்னல் இயங்குவது கிடையாது!

**************-**************

முழுசாய் ஒரு நிமிஷம் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தேன்.

அந்த அன்பு, அந்தப் பெருமை, அந்த ஈடுபாடு....

சரியான ஜோடிதான்...

காட் ப்ளெஸ் தெம் போத்....

• • •

இதற்குப்பிறகு நான்—ஊரில் இருந்தால் கண்டிப்பாய்த்தினமும் ஸ்வர்ணு என்னிடம் ஒரு தடவையாவது பேசிவிடுவது வழக்கமாயிற்று.

அந்த வாரத் தொடர் பற்றித்தான் பேச்சு இருக்கும் என்று இல்லே. எப்போதாவது எழுதின சிறு கதையைக் குறிப்பிட்டு 'அந்த முடிவு இயற்கையில் நடக்கக் கூடாதா சார்?' என்று விவாதிப்பாள். இல்லாவிட்டால் சமீபத்தில் வெளியான தொகுப்பைப் பற்றின அபிப்பிராயங்களைக் கூறுவாள்.

—''....... எழுத்தாளர் பெண் எழுத்தாளர்களைக் காட்டமாக விமர்சிக்கிறீரே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன சார்?''—

''....இப்ப வந்திட்டிருக்கே, குமுதத்திலே ஒரு தொடர்... இவரோடது... அதைப் படிக்கிறீங்களா?''

''....சிறுகதை இலக்கியம் க்ஷீணமடைஞ்சிட்டு வருதுன்னு சிலர் அபிப்பிராயம் தெரிவிச்சிருக்காங்களே — நீங்க என்ன சொல்றீங்க?''—

—கமர்ஷியல் மாகஸின், ஆர்ட் மாகஸின்னு பிரிவு இருக்குதுன்னு நீங்க நம்பறீங்களா?''—

—''ஜே. கேயோட 'எய்ட் கான்வர்ஸேஷன்' படிச்சிட்டு இருக்கேன்.... அதுலே The observation of silence by silence in silence —னு சொல்றார்; எனக்குப் புரியலே, விளக்குங்களேன்....''

—''பிறப்பாலே இல்லாம அவங்க அவங்க குணங்களுக்கு ஏற்ப செய்யற கர்மத்தால ஜாதி நிர்மாணிக்கப்படுது...னு கீதை பதினெட்டாவது அத்தியாயத்திலே நாப்பத்தி ஒண்ணாவது ஸ்லோகம் சொல்லுது. அதை அடிப்படையா வெச்சி, நீங்க ஒரு அற்புதமான சமூக நாவலே எழுதணும்னு நான் ஆசைப்படறேன் சார்....''

அத்தனைக்கும் நான் கூறும் பதிலைக் குறுக்கே எதுவும் பேசாமல் கவனமாய்க் கேட்பாள்; சில விளக்கங்களை ஏற்றுக்கொள்ளாமல் 'அது எப்படி சார்' — என்று பதிலுக்கு வாதாடுவாள்; பல சமயங்களில் 'என்னமா தெளிவாச் சொல்றீங்க!' என்று பூரித்துப் போவாள்.

நடுநடுவில் ''என் சார் நீங்க கல்யாணம் பண்ணிக்கலே? எதுக்காகவும் இல்லாட்டாலும் வயசான பிறகு நம்மைப் புரிஞ்சுக்கிட்டு இதமா நடந்துக்கவாவது ஒரு துணை வேணுமா?'' — என்று சொந்த சமாசாரத்தைப் பற்றின கேள்விகளும் கேட்டதுண்டுதான்.

பதில் சொல்ல விருப்பம் இருப்பதற்குச் சொல்வேன் — இல்லாததற்குச் சிரித்துக் கொண்டே பேசாமல் இருந்துவிடுவேன்.

மொத்தத்தில் ஸ்வர்ணுவை ஒரு ரசிகையாக மட்டும் நினைக்காமல் ஆர்வமுள்ள ஷிஷ்யையாக, ஒரே கண்ணோட்டமுள்ள ஸ்னேகிதியாகவும் நான் நினைத்ததும், அதனால் பழகத் துவங்கி மூன்று மாசங்கள் போவதற்குள் அழுத்தமான, இனிய நட்பாக எங்களுடையது உருவானதும் நிஜம்தான்.

• • •

அந்தக் கோடை விடுமுறையில் முதன்முதலாக நான் மாதவியைச் சந்தித்தேன். முதல் பார்வையிலேயே அசந்துதான் போனேன்.

ஒன்பது வயசுப் பெண்ணுக்கா? இத்தனை அழகா? துறுதுறுப்பா? புத்திசாலித்தனமா?

என்னைப் பற்றி அவள் பெற்றோர் — முக்கியமாய்—அதீதமாய்ப் பேசி அவள் கேட்டிருக்க வேண்டும்.

''நீங்கதானா அந்த சாரங்கன் அங்கிள்?'' — என்றாள் கண்களை அம்மா மாதிரியே அகல விரித்தபடி.

எண்ணி இரண்டாம் நிமிஷம் ஸ்வாதீனத்துடன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கலகலக்கத் துவங்கி விட்டாள் — அதுவும் அம்மாவின் குணம்தான் —

வழக்கமாக, சின்னக் குழந்தைகளிடம் அதிகம் பட்டுக்கொள்ளாத நான் ஏனோ தெரியவில்லை, மாதவியிடம் மாத்திரமே ரொம்ப சீக்கிரம், ரொம்ப நெருங்கித்தான் போனேன்.

எனக்குப் பிடித்த நண்பர்களின் மகள் என்பதாலா?

உயர்ந்த நட்புத் தரும் ஸ்நேகிதியாய் இருக்கும் ஸ்வர்ணாவின் குணங்களை இவளும் கொண்டிருந்ததாலா?

உண்மையிலேயே கெட்டிக்காரியாய், சமர்த்தாய் மாதவி இருந்ததாலா?

யோசித்த வரையில் ஒன்று மட்டும் காரணம் அல்ல, எல்லாம் தான் என்றே புரிந்தது.

மாதவி வந்த பிறகு அவர்கள் இங்கு வருவதும், நான் அங்கு போவதும் அதிகமாயிற்று.

பண்ணை வேலைகளை — பம்பிலிருந்து திமுதிமுவென்று தண்ணீர் கொட்டி, வயலுக்குப் பாய்வதையும், தென்னை, மாமரங்களில் ஏறி ஆட்கள் காய் பறிப்பதையும், பயிர்களுக்குப் பூச்சி மருந்து அடிப்பதையும் சுவாரஸ்யத்துடன் மாதவி காணப் பிரியப்பட்டதால் பல



விவேகானந்தா கல்லூரி வாசலில் எப்பொழுதும் கழுதைகள் காணப்படும். பக்கத்தில் வண்ணான் துறை ஒன்று இருப்பதே இதன் காரணம். ஒருவிதத்தில் அங்கே அதிகமாகக் கழுதைகள் இருப்பது மாணவர்களுக்குச் சௌகரியமாக இருக்கிறது. கல்லூரி டெஸ்டில் குறைந்த மார்க் வாங்கியிருந்தால் சிலர் அந்த விடைத்தாளைக்கழுதை வாயில் திணித்துவிட்டுப் போய் விடுகிறார்கள்.

நாட்கள் காலை டிபன் ஆனதும், பத்மநாபனுக்குச் சமைத்து டேபிள் மேல் வைத்துவிட்டு, எனக்கும் எதையாவது எடுத்துக்கொண்டு பத்து மணி அளவில் சைக்கிள் ரிக்ஷாவில் மகளுடன் ஸ்வர்ணா பண்ணைக்கு வந்துவிடுவாள்.

பம்பு ஷெட்டில் மாதவி குளிக்க, மரத்தடியில் அமர்ந்து ஸ்வர்ணாவும் நானும் எதையாவது அலசிப் பேசுவோம்.

மாலையில் அவர்களை என் வண்டியில் கொண்டு விட்டு விட்டு, அப்படியே அரை மணியோ, ஒரு மணியோ இருந்து பத்மநாபனுடன் பேசிவிட்டு நான் திரும்புவேன்.

அந்த மாதிரி பேசின ஒரு நாள்தான் மாதவி தற்சமயம் படிக்கும் பள்ளி அத்தனை உயர்வானது இல்லை என்று ஸ்வர்ணா குறைப்பட்டுக் கொண்டாள்.

''சரி—பிடிக்கலேனா ஏன் அங்கேயே தொடர்ந்து படிக்கவைக்கணும்? மாத்திடறது!''

ஸ்வர்ணா, 'என்ன நீங்கள்?' — என்கிற ஆச்சரியப் பார்வையை வீசினாள்.

''அதெல்லாம் விரல் சொடுக்குற மாதிரி அத்தனை சுலபம்னு நினைச்சீங்களா சார்?'' — ('இந்த சாரை விடு' — என்று நான்சொல்லி, 'சார்னு கூப்பிட்டாத்தான் மரியாதையா இருக்கு சார்' — என்று அவளும் தீர்மானமாகப் பதில் சொல்லி விட்டாள்.)

''பெண் கெட்டிக்காரி. நீங்க வசதியுள்ளவங்க; அப்புறம் என்ன?''

ஸ்வர்ணா சிரித்தாள்.

''உங்களுக்கு அனுபவமில்லாததாலே இப்படிச் சொல்றீங்க; நான் ஆசைப்படற ஸ்கூல்லே சேர்க்கறதுன்னா லேசு இல்லே... இரண்டு வருஷம் முனைஞ்சு பார்த்துட்டு விட்டுட்டோம்.''—


''எந்த ஸ்கூல்?''—

சொன்னாள்.

''அது என்ன அப்படி உசத்தி?''

''சிலபஸ் எல்லா ஸ்கூல்லயும் ஒண்ணுதான். ஆனாலும் இதுலே பசங்களை நடத்தற விதம், பாடம் சொல்லிக் கொடுக்கிற விதம் அலாதியா இருக்கு... ஸ்கூல் ஃபைனல் முடிச்சிட்டுப் பசங்க வெளிலே வர்றப்போ, புத்தியோட வாழ்க்கை பற்றின கண்ணோட்டம், பொறுப்பு, விவேகத்தையும் வளர்த்துக்க அந்தப் பள்ளிப் படிப்பு உதவுது....''

''ம்ம்...''—



நான் மேலே அது குறித்து எது வும் பேசவில்லே. ஆனல் அன்று இரவே எனக்குத் தெரிந்த பத்திரிகை அதிபர் — நண்பரிடம் பேசினேன்.

நண்பர் செல்வாக்கு உள்ளவர். அரசாங்கம், தனியார் துறை, தனிப்பட்ட நபர் என்று அத்தனே பேர்களிடமும் தொடர்பு உள்ளவர்.

விவரத்தைச் சொன்னேன்.

''ஆச்சரியமா இருக்கு சாரங்கன்! நீங்க கூட ஒரு உதவி கேட்டுட்டீங் களே... நடந்திருக்கன்னு வச்சுக் குங்க...'' என்றவர் சொன்ன வார்த்தை தப்பாமல் மறுநாள் காலே திரும்ப அழைத்து ''உங்க மாதவிக்கு அட்மிஷன் கிடைச்சாச்சு... பத் தாம் தேதி வந்து பிரின்ஸி பாலேப் பார்க்கச் சொல்லுங்க'' என்றும் கூறிவிட்டார்.


போனில் சொல்ல வேண்டாம் என்று மாலேயில் அவர்கள் வீட்டுக் குப்போய் விஷயத்தைச் சொன் னேன்.

ஸ்வர்ணவுக்குத் தலேகால் புரிய வில்லே.

மாதவி ஆகாசத்துக்கும், பூமிக் கும் அம்மாவுக்கு ஜோடியாய்க் குதித்தாள்.

''பார்த்தீங்களா பத்மு? சாதா ரணமாத்தான் சொன்னேன்— வேணும்னு வாயைத் திறந்து கூட கேட்கலே, ஆனலும் மனசுலே இருக் கிறதைப் புரிஞ்சுக்கிட்டு இவர் காரியத்தை முடிச்சுக் கொடுத்திட் டார் பார்த்தீங்களா?'' —

''இந்த மாதிரி ஸ்னேகிதர் வேறு யாருக்கும் கிடைக்க மாட்டார். நாம அதிருஷ்டசாலிங்க, என்ன பத்மு?''



''உங்களால, நம்மால முடியாததை இவர் எத்தனை சுலபமா செஞ்சிட்டார்! அதுவும் இருக்கிற இடத்தை விட்டு அசையாம!'' வாய் ஓயாமல் ஸ்வர்ணு பேசினுள். சந்தோஷித்தாள்.

அத்தனை குதூகலம் ஏனோ பத்மனுபனிடம் இல்லை. ஆண் என்பதால் காட்டிக் கொள்ளாமல் இருக்கிறுனே?

''தாங்க்ஸ் சாரங்கன்'' என்று மட்டும் சொன்னுன். அப்புறம் என்னமோ யோசிக்கும் பாவனையில் ஒதுங்கி இருந்து விட்டான்.

பத்து நாட்களாகவே பத்மநாபன் இப்படித்தான் — அதிகம் பேசாமல் சிரிக்காமல், கொஞ்சம் யோசனையுடன்— இருக்கிறுன் என்பது நினைவுக்கு வர அவன் பக்கம் திரும்பினேன்.

''பாங்கிலே ஏதாவது ப்ராப்ளமா?''

''ம்ஹூம்''—

''உடம்புக்கு ஒன்னும் இல்லியே?''—

''ஏன் கேக்கறீங்க?''—

இல்லே, கொஞ்ச நாளா டல்லா, ராதர் ஒர்ரீடா இருக்கிறமாதிரி பட்டுது. அதான்....''

பத்மநாபன்மறுக்குமுன் ஸ்வர்ணு அவசரமாகப் பேசினுள்.

''பார்த்தீங்களா பத்மு?...நாலு நாளா நான் கேட்கறேன்.—என் எப்படியோ இருக்கீங்கன்னு — ஒண்ணும் இல்லே — சும்மா கற்பனை பண்ணிக்காதேன்னு சொன்னீங்க... இப்ப சார் கேட்கருர்! நான் சொல்லிக் கொடுத்தா கேட்கருர்? பாருங்க...''

பத்மநாபன் அவளை முறைத்தான். 'ப்ச்' என்று அதட்டினுன்.

''ஒண்ணுமில்லாததை ஏன்பெரிசு படுத்தறே? இன்டர்வல் ஆடிட் நடக்குது... அதான் கொஞ்சம் டென்ஷன்....''

எரிச்சலுடன் பேசியதாகத் தோன்ற விஷயத்தை அத்துடன் நான் விட்டு விட்டேன்.

• • •

மாதவியைப் பள்ளியில் சேர்க்க ஸ்வர்ணு சென்னைக்குப் போய் விட்டாள். வேலை இருந்ததால் பத்மநாபன் உடன் போகவில்லை.

எனக்கு மதுரை ரோட்டரியிலும், யுனிவர்ஸிடியிலும் பேச அழைப்பு வந்திருந்தது.

போனவன் கோடைக்கானலுக்குச் சென்று பத்து நாள் தங்கி ஒரு நாவலை எழுதி முடித்தேன்.

இங்கே இருக்கும்போது பத்மநாபன் — ஸ்வர்ணுவின் திருமண



குல்பர்காவில் கல்லூரி முதல்வர் ஒருவர் காப்பி அடிக்க முயன்றபோது கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கிறார். ஆசாமி எழுத இருந்த பரீட்சை சட்டம் சம்பந்தமானது. பிடிபட்ட பிரின்ஸ்பாலைச் சோதனை போட்டுப் பார்த்தபோது மேலும் சில குறிப்புத் துண்டுகள், 'பிட்'டுகளும் கிடைத்தனவாம். சிஷ்யர்களை இனி குறை சொல்வது தவறு. குருவே வழிகாட்டி!

**************-*************

நான் அந்தப் புதன் கிழமை என்பது நிலவுக்கு வர, வி. எல். எஸ். கடைக்குச் சென்று ஒரு வாழ்த்து அட்டை வாங்கி 'குறுகிய காலத்தில் என் இனிய நண்பர்களாகிவிட்ட ஸ்வர்ணு, பத்மநாபனுக்கு' — என்று எழுதி அனுப்பினேன்.

க்ரீடிங்ஸையும் அதில் நான் எழுதியிருக்கும் வாசகத்தையும் கண்டுவிட்டு ஸ்வர்ணு எப்படித் தேன் குடித்த நரி மாதிரி ஆடுவாள் என்பதைக் கற்பனை பண்ணிப் பார்த்தபோது எனக்குச் சிரிப்பு வந்தது.

ஊருக்குத் திரும்பினேன்.

கொடையில் வாங்கிய ப்ளம், பேரிகளுடன், வரும் வழியில் மதுரையில் வாங்கிய ஹல்வா பெட்டியையும் எடுத்துக்கொண்டு மாலையில் அவர்கள் வீட்டுக்குச் சென்றேன்.

நான் சென்றபோது பத்மநாபன் இல்லை.

''வாங்க சார்.... வாங்க.... எப்ப வந்தீங்க? பத்முவா? பாங்கிலேந்து இன்னும் வரலே... வர வர நேரத்தோட அவர் வீட்டுக்கு வரதேயில்லே.... கேட்டா வேலை இருக்குனு சள்ளுனு விழுறார்... ரொம்பக் கோபக்காரராயிட்டு வரார்... ஒண்ணும் புரியலே... அது கிடக்கட்டும். நீங்க எப்ப சார் வந்தீங்க? உங்களைப் பார்த்துப் பதினஞ்சு நாளாச்சு! பேசறதுக்கு எத்தனை விஷயம் இருக்கு தெரியுமா?''—

கொண்டுவந்த சாமான்களை நீட்டினேன்.

வெட்டிங் டே கார்ட் பற்றி ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தேன்.

ம்ஹூம்... இல்லை.

கால் மணியில் பத்மநாபன் வந்தான்.

வரும்போதே முகம் சரியாக இல்லாத மாதிரி பட்டது.

என்ன விஷயம்?

''ஹலோ'' — என்றான்.

உள்ளே போய்விட்டான்.

குளித்து, உடை மாற்றிக்கொண்டு அவன் வருவதற்குள் வளவளவென்று பேசியபடி ஸ்வர்ணு சாப்பிட ஆயத்தம் செய்தாள்.

சாப்பிட உட்கார்ந்தோம்.

நான் கொண்டு போயிருந்த ஹல்வாப் பெட்டியைத் திறந்து ஸ்வர்ணு மூவருக்கும் பரிமாறினாள்.

**************-*************

ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யும்போது அர்த்தத்தையும் கவனிக்க வேண்டும். ஏனென்றால் தவறான மொழிபெயர்ப்பினால் சில சமயங்களில் அர்த்தம் விபரீதமான அர்த்தமாகிவிடுவதுண்டு. Women's consumer society என்பதன் மொழிபெயர்ப்பு ''பெண்கள் நுகர்வோர் சங்கம்'' என்று இருந்தால் தவறில்லையா?



ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலை கனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்றவற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களி லெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத் திற்கு மட்டுமே

உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்கு கிறது—கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன. அதோடு, ஜலதோஷ எதிர்ப்பு சக்தியை வளர்த்திட இதில் வைட்டமின் C உள்ளது.

ஜலதோஷத்தினால் பாதிக்கப்படும் போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.

கோல்டரின்

விசேட ஜலதோஷ மருந்து



டெல்லியில் இப்போது டெலிபோன் விஸ்தரிப்பு வேலை ஸ்தம்பித்து நிற்கிறது. கேபிள் போடுவதற்காகச் சாலைகளைத் தோண்ட வேண்டாம் என உத்தரவிடப்பட்டிருக்கிறது. காரணம் ஏஷியன் கேம்ஸ். நவம்பர் மாதம் துவங்கும் ஏஷியன் கேம்ஸ் முடிவடைந்த பின்தான் இந்த கேபிள் வேலையைத் துவங்க முடியுமாம்.

தன் இலையில் வைத்துக் கொண்ட துண்டத்தைச் சாப்பிட்டுவிட்டு 'நல்லா இருக்கு சார்' என்று பாராட்டினதும் விசுக்கென்று பத்மநாபன் தலைநிமிர்ந்தான்.

''நேத்து நான் அகர்வால் பவன்லேந்து வரவழைச்ச ஸ்வீட்டை 'ஐயே வேணுங்க வெயிட் போடும்'னு எடுத்துக்க மறுத்தவ, இன்னிக்கு ரசிச்சு சாப்பிட்டு, பாராட்டறியே, ஸோ — நான் வாங்குறது உனக்குப் பிடிக்கலே, சாரங்கன் கொண்டு வர்றது உசத்தி — அதானே?''

வாயில் போட்ட ஹல்வாத்துண்டை விழுங்க முடியாமல் சில கணங்கள் நான் சங்கடப்பட்டேன்.

இது என்ன அசட்டுக் கேள்வி?

விளையாடுகிறானா, இல்லே மனசில் எதையோ வைத்துக்கொண்டு கேட்கிறானா?—

ஆயிற்று என்று சாப்பிட்டு விட்டுக் கிளம்பினேன்.

கார் வரையில் ஸ்வர்ணு வந்தாள்.

''பத்முவுக்கு ஏதோ கவலே... அதான் அப்படிப் பேசிட்டார். நீங்க தப்பா எடுத்துக்காதீங்க, சார்''—

அவளைத் தேற்றும் தினுசில் நான் சிரித்தேன்.

காரில் உட்கார்ந்து இன்ஜினை ஆன் செய்தபோது மனசின் பிரண்டல் தாங்காமல் ''வெட்டிங் டேக்கு நான் அனுப்பின கார்ட் கிடைக்கலியா ஸ்வர்ணு?'' — என்றேன்.

''கார்டா? உங்களுதா? இல்லயே சார்!''

கார்ட் போஸ்டில் தவறி விட்டதா?

இல்லே?

அன்று இரவு ஏனோ என்னால் நிம்மதியாய் உறங்க முடியவில்லை. எங்கோ என்னவோ தவறு நிகழ்ந்து விட்ட மாதிரி உறுத்தியது.

என்ன?

எ.......ன்.......ன....?

மறுநாள் காலை ஒன்பது இருக்கும். போனில் ஸ்வர்ணு அழைத்தாள்.

''சார்....சார்....'' என்றவள் மெல்ல விசும்ப முற்பட்டாள்.

''என்ன ஸ்வர்ணு?.... வாட் ஹேப்பண்ட்?''—

அடிவயிற்றில் சின்னச் சின்ன முடிச்சுக்கள்.

ராத்திரி நான் போன பிறகு ஸ்வர்ணு கணவனிடம் வெட்டிங்டே கார்டு பற்றிக் கேட்டு, கூடவே, ஏன் அவரிடம் அப்படிப் பேசினீர்கள் என்று உரிமையுடன் சண்டை போட, பத்மநாபன் வெடித்திருக்கிறான்.

''எழுத்தாளர் — ரசிகைன்னு அளவோடு உறவு இருக்கணும்; ஊரெல்லாம் சிரிக்கிற மாதிரி, வம்பு பேசற மாதிரி ஸ்நேகம் இருக்கக் கூடாது. பகல் பொழுதெல்லாம் நீ அங்கே பண்ணுவே இருக்கிறதும், ராத்திரி அவன் இங்கே வர்றதும்... ச்சேச்சே... மாதவிக்கு இவன் யார் ஸீட் வாங்கித் தர? என்னை, பெத்தவனை, மதிச்சு ஒரு வார்த்தை கேட்டானா? அப்பா மாதிரி, பெரியப்பா மாதிரினு நீ மாதவிட்டச்



நண்பர்: என்னங்க உங்க வீட்டுக் காப்பி டம்ளர்லே ஏதோ எழுதியிருக்கு?

வீட்டுக்காரர்: ஆமாங்க. சிகரெட் பெட்டியைப் பார்த்துத்தான் இந்த ஐடியாவே வந்தது. 'எங்கள் வீட்டுக் காப்பியைக் குடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கானது'ன்னு அடிச்சிருக்கேன்.'



''ஒரு பெரிய மேடை அமைத்து விழா நடந்து கொண்டிருந்தது. திடீரென மேடை ஆடிப்போய்ச் சரிந்தது. மேடையில் இருந்த எல்லோரும் விழுந்து விட்டார்கள். தலைவர் மட்டும் விழவில்லை. ஏன்?''

''தெரியலையே!''

''அவர் விழா(த்) தலைவர்!''

சொல்றதும். அவளை ஆஹா ஊஹான்னு கொண்டாடறதும் — ஐ காண்ட் ஸ்டாண்ட் தில் நான்ஸென்ஸ்.... ஆமாம், வெட்டிங் டே கார்ட் அனுப்பினதை நான் வேணும்னுதான் காட்டலே... எனக்கு இதெல்லாம் ஒண்ணும் பிடிக்கலே... ஏண்டாப்பா இந்த ஊருக்கு வந்தோம்னு கூட இருக்கு...''

மை காட்....

பத்மநாபனின் சிந்தனை இத்தனை வக்ரமாகவா போய் விட்டது?

அவன் மனசில் இப்படியொரு அசிங்கம் எப்போது புகுந்து கொண்டது?

மனித இயல்புகளைத் துல்லியமாக அறியும் நான் இதை எப்படி துவக்கத்திலேயே கண்டு கொள்ளாமல் போனேன்?

''சார்.... சார்.... நா.... நான்.... என்ன சார் பண்ணுவேன்..' எனக்கு மனசே சரியில்லே சார் -- உங்களையும் — என்னையும் ஐயோ..' சார்.....''

பேச முடியாமல் அவள் அழ. ''கவலைப்படாதே ஸ்வர்ணு — எல்லாம் சரியாயிடும். பத்மநாபன் ஏதோ ஓர்ரிலே இருக்கார் — அதான் அப்படிப் பேசிட்டார். சீக்கிரமே புரிஞ்சிக்கிடுவார்...'' என்று பேசி விட்டுப் போனை வைத்தேன்.

நல்ல ஜோடி — பொருத்தமான தம்பதி என்று நினைத்துச் சந்தோஷித்த உறவில் விரிசலா? அதற்குக் காரணம் நானா?

ஓ....நோ... இது கூடாது....

இதமான நட்பின் வளர்ச்சி, ஆரோக்கியமான தாம்பத்திய உறவைப் பாதித்து அழவைக்கிறதா?

இது தவறு அல்லவோ?

நட்பைவிட உறவுக்கு ஆயுசு அதிகம். அப்படித்தான் இருக்க வேண்டும். அது அழக்கூடாது.

அது பலவீனப்பட்டுப் போகக் கூடாது.

மதியத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

பண்ணை மேஸ்திரி, வாட்ச்மேன், சமையல்காரப் பையன் எல்லாரையும் அழைத்தேன்.


''கதைக்கு விவரம் சேர்க்கறதுக்காக வெளியூர் போக வேண்டி இருக்கு... தோட்டத்துலே இன்னென்ன செய்யணும்னு குறிச்சி வைச்சிருக்கேன்... அதுபடி கவனிச்சுக்குங்க... யார் கேட்டாலும் 'ஐயா வெளியூர் போயிருக்கார், மத்த விவரம் எதுவும் தெரியாது'னு சொல்லிடுங்க... நான் அப்பப்ப போன் மூலமா தொடர்பு கொள்றேன்''

''என்னங்க திடும்னு?'' — வியந்து நின்றவர்களுக்கு ஒரு புன்னகையைப் பதிலாகத் தந்துவிட்டு பெட்டி, இதர அத்தியாவசியச் சாமான்களுடன் காரில் ஏறுகையில் இது நாழிகை அலைபாய்ந்த மனசு, நீ எடுத்த முடிவு சரியானது என்று முணு முணுத்தபடி அடங்க ஆரம்பிப்பது புரிகிறது.

(முற்றும்)

சிவசங்கரி வண்ணப்படம்: **சரஸ்வதி சத்தியமூர்த்தி**

கல்கண்டு ஆசிரியர் திரு லேனா தமிழ்வாணன் பழகுவதற்கு மிக இனிய மனிதர். அவர் அறையில் மேஜை மேல் ஒரு வாசகம் காணப்படுகிறது. ''எனக்கு வேலை இருக்கிறது. உங்களுக்கு?'' என்று. வெகு நேரம் யாரும் போரடித்துக் கொண்டு இருக்க முடியாது. வாசகத்தைப் பார்த்துவிட்டு சுருக்கமாகப் பேசிவிட்டுக் கிளம்பிவிடுவார்கள். நண்பர்கள் யாராவது அவர் அறைக்குள் நுழைந்தால் அந்த வாசகத்தைக் கவிழ்த்து வைத்துவிடுவார். அதிலும் பண்பாடு.




நட்பு
சிவசங்கரி
கல்கி
1.8.'82
இதழுடன் முழுநீள நாவல்
இலவச
இணைப்பு



அமிர்தாஞ்சன் அறியும் தலைவலியின் கடுமையை

தலைவலி என்றாலே தாங்க
முடியாத வேதனைதான்.
அதைப்போக்க சுலபமானவழி,
அமிர்தாஞ்சன். சிறிதளவு
அமிர்தாஞ்சன் எடுத்து நன்றாக
அழுத்தித் தேயுங்கள்.
தலைவலியிலிருந்து இதமான
உடனடி நிவாரணம்
கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் மற்ற
மருந்துகளைப் போலல்ல,
அமிர்தாஞ்சனில் உள்ள
சக்திமிக்க 10 மருந்துப்
பொருட்கள் உடனடியாக
செயல்புரிந்து வலியிலிருந்து
உங்களுக்கு துரிதமாக
நிவாரணம் அளிக்கின்றன.
தீங்கு செய்யும் பின் விளைவுகள்
எதுவுமில்லை.

85 ஆண்டுகளுக்கும் மேலாக
புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன்
உடல்வலி, சுளுக்கு,
ஜலதோஷம் மற்றும்
தொண்டைப்புண்
இவற்றிலிருந்தும் சிறந்த
நிவாரணம் அளிக்கிறது.


எப்பொழுதும் அமிர்தாஞ்சன்
உங்கள் கைவசம்
இருக்கட்டும். ஏனெனில், அது
எப்போது தேவைப்படுமென்று
சொல்ல முடியாது.



அமிர்தாஞ்சன்

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. தீய பின்விளைவுகள் இல்லாதது.

OBM7652TM



பாத்ரூம்கள் பரிசுத்தமாக, பளிங்குபோன்ற
பளபளப்புடன், பார்வைக்கு அழகாகத் திகழ

டாசெல்

சுகாதார சாதனங்கள்

வெடிப்புகள் ஏற்படாமல்,
நீண்டகாலம்
உழைக்கக் கூடியவை.
விலை சகாயமானவை.



தமிழ்நாடு
செராமிக்ஸ் லிட்.,

TACEL

25, செனடாஃப் ரோடு, சென்னை-600 018
போன்: 445321, 445420 445572

TACEL VITREOUS SANITARYWARE

EP. TA-103



நாவலாசிரியை

சிவசங்கரி


Gold Star®
Suitings
tomorrow is here
A SHREE RAM SILK PRODUCT

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வண்ணத் திட்டம் மற்றும் சாயல்கள் பற்றிய முழு விவரங்களை அறிந்து கொள்ள வாரீர்.

உங்களால் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பதை முதலில் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். அதன் பிறகு உங்கள் பட்ஜெட்டிற்குள் அடங்கும் வண்ணத் திட்டம் பற்றி முடிவு எடுங்கள். தரத்தை விட்டுக் கொடுக்காமல், வண்ணம் பூசும் செலவைக் குறைக்கும் வழி முறைகளை அறிந்து கொள்ள, "All you wanted to know about painting" என்ற நெரோலாக் பெயிண்ட்ஸ் இலவச விளக்கப் புத்தகத்திற்கு இன்றே எழுதவும்.

கீழே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி உடனே தபாலில் அனுப்பி வைக்கவும்.

தயவு செய்து நெரோலாக் பெயிண்ட்ஸ் விளக்கப் புத்தகம் ஆங்கிலப் பிரதி ஒன்று அனுப்பவும்.

பெயர் ____________________

முகவரி ____________________

____________________ பின்கோட் __________

குட்லாஸ் நெரோலாக்
பெயிண்ட்ஸ் லிமிடெட்
தகவல் டெஸ்க்,
த.பெ. எண் 16322 பம்பாய் 400013

167R-V

தயவு செய்து 50 காசு தபால் முத்திரையும் வைத்து அனுப்பவும்.

நெரோலாக் பெயிண்ட்ஸ்
இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்கள்!

ULKA-GNP-167R TAM